LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 6th March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Advance Increment to Police personnel

*3 *S.N.Q.*—SRI RAMA. ARANGANNAL : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) whether any advance increment has been sanctioned to the Police personnel in the State recently;

(*b*) if so, the reasons; and

(*c*) whether a copy of the orders will be placed on the Table of the House?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Government have decided to grant *one* advance increment to all officers and men of the Police Force including the Armed Units in this State who were on duty during the period of Anti-Hindi Agitation;

(*b*) The Government have desired to place on record their appreciation of the good work done by all officers and men of the Police Force during the recent disturbances by the grant of *one* advance increment to all Police Personnel who were on duty during the period; and

(*c*) Yes, after the orders are issued.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தக் காவல் துறையினர் மிகவும் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தில்தான் உணர்ந்ததா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்தில் பணிசெய்கின்ற அதிகாரிகள் எவ்வளவு உண்மையாக இருந்தார்கள் என்பதை ஒரு பழமொழி சொல்வார்களே " A friend is proved in distress ' அதைப்போல இந்தச் சமயத்தில்தான் அரசாங்கத்திற்கு விசேஷமாக மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் எவ்வாறு பாதுகாப்பு அளித்தார்கள் என்பது தெரியவந்தது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸ்பெஷல் இன்கிரிமென்ட் என்று குறிப்பிட்டார்கள். துப்பாக்கிப் பிரயோகம் கண்ணீர்ப்புகை தடியடி இப்படிப்பட்ட காரியங்ககளைச் செய்வதற்காகத்தான் இந்த ஸ்பெஷல் இங்கிரிமென்ட் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[6th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தங்களுக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கு வந்த ஆபத்தைத் தடுத்து பாதுகாத்ததற்குத்தான் இப்போது இந்த இன்கிரிமென்ட் அளிக்கப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பொதுவாக எல்லா போலீஸ்காரர்களுக்கும் இன்கிரிமென்ட் கொடுத்தது ஒரு புறம் இருக்க, அடிபட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : கொடை எல்லாப் போலீஸ்காரர்களுக்கும் சகட்டுமேனியாக வருகிறது. அப்படியில்லாமல் உண்மையிலேயே தவறு செய்த போலீஸ்காரர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொடை அளிக்கும் விஷயத்தில் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி போலீஸ்காரர்கள் ஏதாவது தவருக நடந்தால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நம்முடைய போலீஸ்காரர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று இப்போதுதான் தெரியவருகிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய நம்பிக்கையில் இப்போது ஏதாவது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா ? சந்தேகம் இருக்கிற காரணத்தினுல்தான் வெளியிலிருந்து போலீஸ்காரர்களையும், ராணுவத்தினரையும் வரவழைத்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று இப்போதுதான் தெரிந்தது என்று நான் சொல்லவில்லை. எப்போதும் அவர்களுடைய நடத்தையிலே அரசாங்கத்திற்கு நம்பிக்கையுண்டு. அவர்களிடம் நம்பிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினுல் வெளியிலிருந்து போலீசார் வரவழைக்கப்படவில்லை. பொதுமக்களுக்கு மேலும் பாதுகாப்பு வேண்டும் என்று கருதப்பட்டது, அதை ஒட்டித்தான், எதிர்பாராத சம்பவங்களை ஒட்டி, அப்போதிருந்த நிலைமையை சமாளிக்க மக்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு வெளியிலிருந்து போலீஸ்காரர்களும், ராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டனர்.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுமக்களுடைய கோபத்திற்கு பலியாகி உயிர் இழந்த போலீஸ்காரர்களுடைய குடும்பத்திற்கு டெல்லி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தார்கள். அப்படியிருக்கும்போது முதல் அமைச்சர் அவர்களும், போலீஸ் அமைச்சர் அவர்களும் ஏன் அனுதாபம் தெரிவிக்கவில்லை ?

6th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் யார் அனுதாபத்திற்கு உரியவர்கள் என்பதை நான் அங்கத்தினரிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களுக்கு சன்மானம் அளிப்பதை யாரும் தவறாகச் சொல்லவில்லை. அதிகமாக சுடுகின்றவர்களுக்கு சன்மானம் கொடுப்பதற்கு சர்க்காருக்கு யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது வெறுக்கத்தக்கது. போலீஸ்காரர்கள்மீது சுமத்தப் படுகின்ற ஒரு பெரிய அவதூறு ஆகும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: போலீசார்களுக்கு அளிக்கப்பட்ட இன்கிரிமென்டை நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில் அவர்களுடைய அடிப்படை சம்பளத்தையும் உயர்த்த அதாவது ஒரு கான்ஸ்டேபிளுக்கு ரூ. 100 அளவிற்கு உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசார்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அவ்வப்போது பரிசிலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுவருகிறது.

திரு. எம். எஸ். மணி : ஆந்திராவிலிருந்து போலீசாரை அழைத்த காரணத்தினால் போலீசார்மீது ஏதாவது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன்; அவநம்பிக்கை என்ற பிரச்சினை இந்த அரசாங்கத்திற்கு இல்லை. எதிர்க் கட்சியினருக்கு வேண்டுமானால் அவநம்பிக்கை இருக்கலாம். தமிழ்நாட்டு மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கும் எண்ணத்திலே வெளியிலிருந்து போலீஸ் வரவழைக்கப்பட்டது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஹிந்தி போராட்டத்தின்போது இறந்த போலீசார்களின் குடும்பத்திற்கு சன்மானம் அளிக்கப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இறந்த போலீசார்களின் குடும்பத்திற்கு உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சாவின் சன்னிதானத்தில் எல்லாரும் சமம் ஆதலால், இறந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுத்ததுபோல் கூடலூரில் இறந்த கான்ஸ்டேபில்கள் குடும்பத்தினர்களுக்கும் ரூபாய் இருபதினாயிரம் கொடுக்க ஏன் அரசாங்கம் முன்வரவில்லை ?

கனம் திரு. பக்தவத்சலம் : அரசாங்கம் யார் யாருக்கு எத்தகைய உதவி அளிக்கவேண்டுமோ, அதை அளிக்கிறது. இந்த விஷயத்தில் கனம் அங்கத்தினருடைய யோசனையை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

[6th March 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் முன்பு கூறியபோது போலீசார்களுக்கு மட்டும் ரூபா, அணு, பைசா முறையில் பாராட்டுதல் தெரிவித்ததாகச் சொன்னார்கள். போலீசார்களைப் போலவே நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பணி யாற்றிய ஆர்.டி.ஓ., கலக்டர் முதலிய மற்ற உத்தியோகஸ்தர் களுக்கும் ரூபா, அணு, பைசா மூலமாக பாராட்டுதல் தெரிவிப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யார்யார் எத்தகைய ஆபத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். யார் யார் தங்களுக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் உதவி செய்திருக்கிறார்கள் என்பதையெல் லாம் அரசாங்கம் பரிசிலனை செய்திருக்கிறது. அதற்கு என் னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அதை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, இந்தக் கலவரத்தில் உயிர் போன சப்-இன்ஸ்பெக்டர்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள், கான்ஸ்டேபிள்கள் அவர்கள் பதவி ஒய்வு பெறும்வரை, அவர்கள் குடும்பத்திற்கு சம்பளம் தருவதாக அறிவிக்கப்பட்டு வந்ததே, அதன்படி அவர்களுக்கு சம்பளம் தொடர்ந்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுவும் கவனிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: நமது மாநிலத்தின் போலீஸாரின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் காரணத்திற்காக நமது போலீஸ் படையை விஸ்தரித்து ஆங்காங்கே மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த விஷயம் தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஏ. ஆறுமுகம்: நம் மாநிலத்திலே ஊர்வலம் நடத்திய மாணவர்கள் ஒழுங்காகவும், அடக்கமாகவும் நடந்துகொள்வார் கள், இதனாலே போலீஸ்காரர்கள் அவர்களை அதிகமாக அடக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்பட்டதா, இதனால்தான் இப்படி அக்கிரமங்கள் நடக்க ஏதுவாக இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கேள்விக்கு பதிலி லிருந்து எழுகிற பிரச்னை அல்ல இது. மாணவர்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் முதலில் தலையிடவேண்டாம் என உத்தேசித்து இருந்தது. அதற்குமேல் நிலைமை கட்டுக்கடங்காமல் பலாத்கார செயல்கள் ஏற்பட்டபோது போலீஸார் அதைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சில சமயங்களிலே எதிர்பாராத வகையிலே எண்ணிக்கை குறைவாக இருந்ததால் உடனடியாக சமாளிக்க முடியவில்லை என்பது உண்மைதான்.

6th March 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கிளர்ச்சியினால் காயமுற்ற போலீஸ்காரர்களின் தொகை 200 என்று ஐ.ஜி. அறிவித்து இருக்கிறார்கள். காயமுற்ற பொதுமக்கள் எத்தனை பேர் என்று கனம் அமைச்சர் சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த தகவல் என்னிடம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : உயிரிழந்த போலீஸ்காரர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ததை நான் ஆதரிக்கிறேன், பாராட்டுகிறேன். அதேபோன்று உயிரிழந்த மாணவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

கோவை நகரில் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கைது

*** 163 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோவை நகரில் நவம்பர் மாத இறுதியில் மத்திய உணவு அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் வருகையின்போது இடதுசாரி கம்யூனிஸ்டுகள் எவரேனும் கைது செய்யப்பட்டனரா ?

(இ) ஆம் எனில், அவர்கள் என்ன காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டனர் ?

(உ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It was apprehended that the black flag demonstrations they had planned to stage during the visit of the Union Food Minister on 28th November 1964, would lead to a breach of peace: and

(*c*) One hundred and eighty-five persons were arrested under Section 151, Criminal Procedure Code.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, உணவு நெருக்கடி காரணத்தைக்கொண்டு அதை அமைதியான முறையிலே தெரிவிப்பதற்குத்தான் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அமைதியாக இருந்தும், ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் என்ற அப்படி ஒரு கருத்தை சர்க்காரே கொண்டார்களா, அல்லது அதற்கு ஏதாவது முகாந்திரம் சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உணவு பிரச்சினை எல்லோருக்கும் கவலை அளிக்கக்கூடிய விஷயம். உணவுப் பிரச்னையைப் பற்றி குறிப்பிட்ட யோசனைகள் சொல்வதற்கு வேறு வகைகள் இருக்கின்றன. இதற்காக தெருக்களில் வந்து கருப்புக்கொடி காட்ட அவசியம் இல்லை. கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தினால் அமைதிக்கு பங்கம் விளையக்கூடுமென்று கருதி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது.

[6th March 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: கறுப்புக்கொடி காட்டியவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவில்லை. அப்படி இருக்க அமைதிக்கு பங்கம் விளைவிக்கிறார்கள் என்று யாரை கருதினார்கள்? கருப்புக்கொடி காட்டியவர்களை கைது செய்யக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அமைதிக்கு பங்கம் வரக்கூடிய நிலைமையை தவிர்க்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. உணவுப் பற்றாக்குறை கொந்தளிப்பு இருந்தது. அதை மேலும் அதிகப்படுத்தக்கூடிய வகையில், கறுப்புக் கொடி காட்டுவதால் கொந்தளிப்பு அதிகரிக்கும் ஆதலால், அதைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது.

திரு. கே. ஏ. மதியழகன்: முன்பு ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்தபோது ஆகாயவிமான நிலையத்திலே கறுப்புக்கொடி ஆர்பாட்டம் செய்யலாமென்று இடம் ஒதுக்கி, அமைச்சர், மற்றவர்கள் போவதற்கு இடம் அமைத்து, போலீசார் ஒத்துழைக்கும் படியாக செய்த அதேமாதிரி ஏற்பாட்டை இனிமேலாவது அனுசரிக்கலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னென்ன ஏற்பாடு செய்யலாமோ, அந்தந்த நிலைமைக்கு ஏற்றவாறு கவனம் செலுத்தப்படும்.

தமிழ்நாட்டில் குடியரசுக் கட்சியின் கிளர்ச்சி

* 164 *கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டிசம்பர் 6ம் தேதி இந்தியக் குடியரசுக் கட்சியின் தமிழ்நாடு கிளை (Republican Party) போராட்டம் ஒன்று நடத்தப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவித்ததா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) இதன் விளைவாக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) No intimation was received, but the Government were aware of the party's intention to agitate in support of its 'Charter of Demands', which included the installation of the portrait of Dr. Ambedkar in Parliament House, the allotment of lands to landless people of the depressed classes, the arresting of the prices of food stuffs, etc; and

(*c*) six hundred and ten persons were arrested during the course of the agitation.

திரு. இராம. அரங்கண்ணல்: தரிசு நிலங்களை ஜனங்களுக்கு பட்டா செய்து தருவதற்காக, ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் ஈடுபட்டு செய்த கிளர்ச்சி இது. அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா?

6th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தரிசு நிலங்கள் கூடியவரையில் நிலம் இல்லாதவர்களுக்கு, முக்கியமாக ஹரிஜன மக்களுக்கு அளிக்கபட்டு வருகிறது. ஆனால் எத்தகைய நிலம் என்று பார்க்காமல் பலாத்காரமாக காட்டு இலாகா நிலமாக இருந்தாலும் நாங்கள் ஆக்கிரமிப்போம் என்றால் அது முறையல்ல.

திரு. ஏ. ஜீவரத்தினம் : குடியரசு கட்சியில் நில ஆக்கிரமிப்பு போராட்டத்தில் தவறுதலாக ஈடுபட்டோம், இனி ஈடுபடமாட்டோம் என்று எத்தனை பேர்கள் சர்க்காருக்கு கடிதம் எழுதிவிடுதலை ஆகியிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆதித்திராவிட மக்களை 'ஆண்டவன் குழந்தைகள்' என்று காந்தியடிகள் வர்ணித்து இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் தரிசாக இருக்கிற கோயில் நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுக்கலாம். 'ஆண்டவன் குழந்தைகள்' என்றாலும் ஆக்கிரமிப்பு செயல்களிலே ஈடுபடக்கூடாது.

கனம் சபாநாயகர் : அவர்கள் மட்டும்தான் 'ஆண்டவன் குழந்தைகளா'? (சிரிப்பு)

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்கள்? வழக்குகள் போடப்பட்டனவா? இப்போது எந்த நிலையில் உள்ளன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வட ஆற்காடு இன்னும் சேலம் ஜில்லாக்களிலே இது நடந்தது. காட்டு இலாகா மற்றும் இதர நிலங்களை தாங்களே ஆக்கிரமிக்க முற்பட்டார்கள். இந்த காரணத்திற்காக இதை தவிர்க்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது அவர்கள் சிறையில் இல்லை.

டாக்டர் பா. நடராஜன்: குடியரசு கட்சியின் தலைவர் யார்? இந்தக் கட்சி எப்போது தொடங்கப்பட்டது என்ற விவரம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரையில் காலஞ்சென்ற திரு. சிவராஜ் தலைவராக இருந்தார்கள். அதற்கப்புறம் யார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று எனக்கு நினைவு இல்லை.

[6th March 1965

திரு. ஆ. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அத்துமீறிய ஆக்கிரமிப்பை அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஆக்கிரமித்து கொண்டவர்கள் அந்த இடத்திற்கு காமராஜபுரம் என்று பெயர் வைத்தாலோ அல்லது ஆளும் கட்சியினருடைய கொடியை நாட்டி வைத்தாலோ அதை அனுமதிக்கிறார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொடியை பொறுத்தவரையில் அது மாறிக்கொண்டேவருகிறது. ஒரே இடத்தில் பல கொடிகள் இருக்கின்றன. எந்தக் கொடியாக இருந்தாலும், நடவடிக்கை எடுத்துக்கொள்வதோ, எடுத்துக்கொள்ளாமல் இருப்பதோ குறிப்பிட்ட சம்பவத்தைப் பொறுத்து இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : இந்த நிலங்களிலே தரிசு நிலங்கள் என்று சரியாக தெரிந்திருக்கும் நிலங்களை உடனடியாக பட்டா செய்து கொடுக்க எண்ணம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புதிதாக எண்ண வேண்டியது இல்லை. அரசாங்கம் இதில் எல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, தரிசு நிலங்களை ஹரிஜனங்கள் மற்றவர்களைப் போலவே ஆக்கிரமித்து வருகிறார்கள். சில பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மற்றவர்களை நீக்காமல், ஹரிஜனங்களை மட்டும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படி என்றால் இதைத் தவிர்க்க அரசாங்கம் தனி உத்திரவு பிறப்பிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கோ அல்லது கேள்விமூலமாகவோ பஞ்சாயத்து யூனியன் இந்தந்த வகையில் இன்னின்னார்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள், எடுக்கவில்லை என்று தெரிவித்தால் அதற்குமேல் கவனம் செலுத்தலாம்.

திரு. பி. முருகையன் : கைது செய்யப்பட்டவர்கள்மீது வழக்குகள் போடப்பட்டனவா, எத்தனை வழக்குகள் முடிவடைந்துவிட்டன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மைலாபூர் தொகுதியில் கபாலீச்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன, அங்கே ஆதித் திராவிட பெருங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வெளியேற்றி அந்த இடங்களை எல்லாம் ஏலம் போட்டு பணம் வசூலிப்பதற்கு அற நிலைய பாதுகாப்பு இலாகா முற்பட்டிருக்கிறது. அதே மக்களுக்கு என்ன விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த விலைக்கு விற்க உத்திரவு பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா?

6th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது வேறு விஷயம். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் அக்கறை உண்டு. என்னிடம் பேசி இருக்கிறார்கள். ஏலம் போடுவதென்றால் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏலம் போடுகிறார்கள். தனியாக குறிப்பிட்ட பிரச்னையைப்பற்றி கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, காட்டு இலாகாவிற்குச் சொந்தமான இடங்களைச் சில பணக்காரர்களுக்குத் துரிதமாகப் பட்டா போடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறதே அது எந்த அடிப்படையில் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடிப்படையைச் சொல்வதற்கு முன்பு, என்ன வகையிலே, யார் யாருக்கு, எங்கெங்கே பட்டா போடப்பட்டது என்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டால், அதற்குப் பிறகு அங்குள்ள நிலைமையை விளக்க முடியும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இது போன்ற புறம்போக்கு நிலங்களை ஏழை அரிசன மக்கள் பல ஆண்டுகாலம் அனுபவித்து வந்தும்கூட, அந்த நிலங்கள் அவர்களுக்கு அடைமானம் செய்து கொடுக்கப்படாத காரணத்தால், இந்தப் போராட்டம் வந்தது என்பதை அரசாங்கம் உணருமா? அப்படியென்றால், புறம்போக்கு நிலங்களை உழுது அனுபவித்து வந்திருக்கும் அரிசன மக்களுக்கு அந்தந்த நிலங்களை விரைவில் அடைமானம் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம் என்று சொன்னேன். நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிற விஷயம் என்றும் சொன்னேன், அதற்காகச் சிலர் அதிக்கிரமமாக ஆக்கிரமித்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஏற்கெனவே, பத்துப் பன்னிரண்டு வருஷங்களாக ஆக்கிரமிப்புச் செய்த பூமிகளை அவரவர்களுக்கே ரெகுலரைஸ் செய்து பட்டா கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆணையிட்டிருப்பதன் காரணமாக புதிதாக ஆக்கிரமிப்பு செய்து மேலும் பட்டா பெற்றுக்கொள்ளலாம் என்கிற மனப்போக்கு இந்த மாநிலத்திலுள்ளவர்களுக்கு ஏற்பட்டுவருகிறது. ஆகவே, ஏற்கெனவே ஆக்கிரமிப்பு செய்தவர்களையும் உடனடியாக அந்த நிலங்களிலிருந்து காலி செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம் என்று முன்பே நான் கூறினேன்.

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலைவர் அவர்களே, அரசாங்கத் தரிசு நிலங்கள் என்று சில தனிப்பட்ட நபர்களுடைய நிலங்களையும் அந்தப் போராட்ட காலத்திலே ஆக்கிரமித்ததாக சர்க்காருக்கு ஏதாவது தகவல் வந்ததா ? அம்மாதிரி வந்திருந்தால் அதனுடைய விவரங்களை அறிவிக்க முடியுமா ?

[6th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த விவரங்களெல்லாம் இப்பொழுது என்னிடம் இல்லே.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, அன்னியர் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் அரிசனங்களுக்கு 'பஞ்சம தரிசு' என்ற பெயரில் கொடுக்கப்பட்ட நிலங்களேப் பொறுத்த வரையில் இன்றுவரைக்கும் பட்டா போட்டுக் கொடுத்து முடிந்ததாகத் தெரியவில்லே. ஒரு ஆட்சி போய் மறு ஆட்சி வந்தும்கூட, அந்த நிலங்கள் இன்னும் அரிசனங்களுக்குச் சரியாக வழங்கப்படவில்லே. பஞ்சாயத்து ஆட்சி வந்த பிறகு, அரிசனங்கள் இருக்கும் எந்த நிலமாக இருந்தாலும், அவர்களே வெளியேற்றுவது என்கிற நடவடிக்கை பொதுவாக இருந்துவருகிறது. ஆகவே, சர்க்கார் புது சட்டத்தை உருவாக்கியாவது அரிசனங்கள் உபயோகித்துக் கொண்டிருக்கும் நிலங்களே அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் அன்னிய ஆட்சி முதற்கொண்டு சரித்திர பூர்வமான நிலைமையை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விவரமாகக் கூறினுல் விடை அளிக்க முடியும்.

கம்போஸ்ட் உரம் விற்பனேயில் நஷ்டம்

*165 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணேயில் கம்போஸ்ட் உரம் காலம் கடந்து விற்றதால் ரூ. 24,400 நஷ்டம் ஏற்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH: (a) There was a loss of about Rs. 23,700 in the sale of compost during 1962–63 in the Madhavaram Milk Colony. The loss was however not due to any delay in the sale of compost. It was due to the fact that there was no large demand for the compost at the price of Rs. 9 per ton fixed by the department. Therefore, 3,919 tons of compost was sold in auction on 6th April 1963, which realized only Rs. 7,660, resulting in the loss referred to above; and

(b) in order to create a better demand for compost, the selling price of compost made out of dung and waste matter in the Milk Colony has since been fixed at Rs. 6 per ton.

புலவர் கா. கோவிந்தன்: தலேவர் அவர்களே, ஒரு மாடு ஓராண்டில் எவ்வளவு எருவைக் கொடுக்க முடியும் என்கிற கணக்கு இருக்கிறது. அந்த வகையிலே அந்தப் பண்ணேயிலே இருக்கும் மாடுகள் எத்தனே ? அந்த மாடுகள்மூலம் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு எரு கிடைக்கவேண்டுமோ, அந்த அளவுக்கு எரு கொடுக்கின்றனவா ?

6th March 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா : பண்ணையிலே எரு கிடைக்கிறதைப் பொறுத்த வரையில் இதற்கென்று ஒன்றும் விசேஷக் கணக்கு போட வேண்டிய அவசியம் இல்லை. காரணம், அங்கே அதையெல்லாம் முறைப்படி சேமித்து வைக்கின்றார்கள். 'கம்போஸ்ட்' பண்ணியிருக்கிறார்கள். ஆரம்பத்திலே, ப்ராஜெக்டைச் சேர்ந்தவர்கள் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் என்று வைத்தால் அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையாக இருக்கும் என்று நிர்ணயம் செய்திருந்தார்கள். அந்த விலை கொடுத்து விவசாயிகளால் வாங்க முடியவில்லை. அதனால் கால தாமதம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல. பிறகு, ஏலம் போடும் முறையை அனுஷ்டித்ததில், ஒன்பது ரூபாய் விலைக்குப் பதிலாக ஆறு ரூபாய்க்குத்தான் அது போயிருக்கிறது. அதனால் தான் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஆண்டொன்றுக்கு இந்த எரு விற்பனையின் மூலமாகக் கிடைக்கும் தொகை எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமைய்யா : 1963-ம் வருஷத்தில் இதன் மூலமாகக் கிடைத்த தொகை ரூ. 7,660. அதற்கு அடுத்த வருஷம், அவர்கள் நிர்ணயம் செய்திருக்கக்கூடிய விலை அதிகமாக இருந்ததால், அதைக் குறைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

திரு. சா. கணேசன் : சாதாரணமாக முனிசிபாலிடிகளில் கிடைக்கின்ற கம்போஸ்ட் உரத்தைவிட இந்த உரம் மாட்டு மூத்திரம், சாணம் முதலியவை கலந்திருப்பதால் மிக்க வளமுள்ள உரமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, இதற்குத் தக்க பிரசாரத்தையோ அல்லது அறிவிப்புகளையோ செய்து, இதை உடனடியாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தால் இரு சார்புக்கும் பலனுள்ளதாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு செயல்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது மாதிரி, இது மிகவும் நல்ல உரம். இதற்கு வேண்டிய பிரசாரமெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால், ஒரு சிக்கல் இருக்கிறது. இதைத் தீர்த்துவிடுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இவர்கள் எவ்வளவு உரம் உற்பத்தி செய்கிறார்கள், அது எப்பொழுது கொடுக்க முடியும் என்பதைப் பற்றிய விவரம் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் விவசாய இலாகாவிற்கும் இவர்களுக்கும் ஒரு சம்பந்தம் இல்லாமல் இருந்தது. ஆனால், இந்த உரத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு கிடைக்கும், எப்பொழுது கிடைக்கும் என்ற விவரத்தையெல்லாம் விவசாய இலாகா டைரக்டருக்குத் தெரிவிக்கும்படியாகச் செய்து அவருக்கு எங்கெங்கே தேவைப்படுமோ, அங்கு அனுப்பும்படியாகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால், இப்பொழுது மாநில ரீதியிலே இருக்கும் கம்போஸ்ட் டெவலப்மென்ட் ஆபீசர் இனிமேல் தொடர்ந்து இந்த உரத்தை யாருக்கு எப்படி விநியோகம் செய்யவேண்டுமோ, அந்த முயற்சியில் ஈடுபடுவார்.

[6th March 1965

மாதவரம் பாலில் கலப்படம்

*166 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையாரிடம் பால் வாங்கும்போது மக்கள் பால்புட்டியின் மூடிகள் திறக்கப்பட்டு தண்ணீர் கலக்கப் படுவதாகப் புகார் கூறியிருக்கிறார்களா?

(இ) அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes; and

(b) Surprise inspections and sampling were done and persons found to be engaged in malpractices were punished. As a result of the surprise inspections made, ninety-five cycle delivery boys were dismissed from service for adulteration and fifteen were fined for misbehaviour, etc.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த மாதவரம் பாலினுடைய விலை ஏறுமுகமாக இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். பெரும்பாலும் சர்க்கார் ஊழியர்கள், மற்ற நடுத்தர மக்கள் கொண்ட சென்னை நகரத்தில் இப்பொழுது கொடுக்கிற அகவிலைப் படியையே கூட பால் விலை சாப்பிட்டுவிடுவதாக இருக்கிறது. அதற்காக இந்த விலையைக் குறைத்துச் சமனப்படுத்துவதற்காக ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களா? இனிமே லாவது அதற்கு வழிவகை காண்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த முயற்சி தொடர்ந்து இருந்துகொண்டே வருகிறது. போதுமான கவனம் செலுத்தப் படுகிறது. ஆனால், பால் உற்பத்தி செய்யக்கூடிய செலவு (ப்ரொ டெக்ஷன் காஸ்ட்) அதிகமாகப் போகக்கூடிய காரணத்தால், பாலின் விலையும் ஏறவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் பாலின் விலையை எந்த அளவுக்குக் கட்டுப்பாடான விலையில் வைக்கவேண்டுமோ, அந்த வகையில் வைக்க முயற்சி எடுக்கப் படுகிறது.

புலவர் கா. கோவிந்தன்: பாலில் தண்ணீர் கலப்பது நிகழ் வதால் பாலை வீடுகளில் கொண்டுவந்து கொடுக்கும் முறை நிறுத் தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாலில் தண்ணீரைக் கலக்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, கலப்படம் நிகழாமல் செய்வதை விடுத்து, அதற்காக வீடுகளுக்கு வந்து பால் கொடுக்கும் முறையை நிறுத்துவது நல்லதுதானா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்த்ததா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்பொழுதிருக்கக்கூடிய நிலை மைப்படி அது மிகவும் நல்லது என்று கன்ஸ்யூமர்ஸ் ஒப்புக்கொள் கிறார்கள்.

6th March 1965]

திரு. இராம. அரங்கண்ணல் : சைக்கிளில் சென்று பால் சப்ளை வீடுதோறும் செய்கிற பையன்கள் நகரத்தில் சுமார் ஆயிரம் பேர்கள் அந்த வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் இப்பொழுது நிறுத்திவிட்ட காரணத்தால், அவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும், சில நிபந்தனைகளின் பேரில், அவர்களை அந்த வேலைக்கு அமர்த்துவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. வெ. ராமையா : பால் வாங்கி அருந்தக்கூடியவர்கள், மீண்டும் இந்த முறையை அமுலுக்குக்கொண்டுவந்தால் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் போலிருக்கிறது. இப்போதிருக்கக் கூடிய டெபோ டெலிவரி ஸிஸ்டம் மூலம் அவர்களுக்கு நல்ல பால் கிடைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கனம் அங்கத்தினருடைய யோசனையை நான் இப்பொழுது பரிசீலனை செய்வதற்கில்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணை சர்க்கார்த் துறையில் நடக்கிறதா? கூட்டுறவுத் துறையில் நடக்கிறதா? அது லாபகரமாக நடக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னை நகரில் பாலில் தண்ணீர் கலப்பதில்லை, தண்ணீரில் பால் கலக்கிறார்களே, அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : மாதவரம் பண்ணையிலிருந்து கிடைக்கும் பால் அந்த நிலைமையில் இல்லை.

திரு. முனு. ஆதி : பால் டெலிவரி வேலையில் கிட்டத்தட்ட ஆயிரம் சைக்கிள் பையன்கள் ஈடுபட்டு இருந்தார்கள். அவர்களுக்கு அரசாங்கம் மாற்று வேலை தேடித் தரும் பொறுப்பை யாவது மேற்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். 9-00 a.m.

கனம் திரு. வெ. ராமையா : இந்த சைக்கிள் டெலிவரி பாய்ஸ் களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் அவர்களை வேலைக்கு அமர்த்தவில்லை. ஒரு காலத்தில் இவர்களே பால் விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்து வந்தார்கள். பிறகு தான் அந்த டெலிவரி சார்ஜை பால் டிக்கெட் விலையோடு சேர்த்தே வசூல் செய்து அவர்களுக்குக் கொடுக்கும் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டது. இதுவே அவர்களுக்கு நிரந்தரமான தொழிலாகவும் இருக்கவில்லை. மற்ற நேரத்தில் அவர்கள் வேறு வேலைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். வேலையில் இருந்து அவர்கள் நிறுத்தப்பட்ட பிறகு எவ்வித துன்பமும் அவர்களுக்கு ஏற்பட்டதாக புகார் எதுவும் எனக்கு வரவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, சட்ட சபை அங்கத்தினர்களுக்கு இங்கே புட்டிப்பால் கொடுக்கப் படுகிறது. சென்ற தடவை 25 பைசாவுக்கு நல்ல பால் கொடுத்

தார்கள். இப்போது 30 பைசாவாக உயர்த்தப்பட்டு இருக்கிறதே தவிர, அதன் தரம் மிகவும் குறைவாகப் போய்விட்டதே அதற்குக் காரணம் என்ன? பழையபடி நல்ல தரமான பாலைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையயா: இங்கே புட்டிப்பால் கொடுக்க வில்லை. இப்போது கொடுக்கிற பாலும் தரம் குறைந்தது இல்லை.

திரு. து. ப. அழகமுத்து: பால் டெலிவரி செய்வதற்காக முன்பு வசூலிக்கப்பட்ட கட்டணம் இன்னமும் திருப்பிக் கொடுக்கப்பட வில்லை என்ற புகார் கூறப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையயா: அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோதுமை ஒதுக்கீட்டுக் குறைப்பு

* 167 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்திலுள்ள மாவு மில்களுக்குக் கொடுக்கப் பட்டு வந்த கோதுமையின் அளவை மத்திய சர்க்கார் குறைத் துள்ளனரா?

(இ) ஆமெனில் மாவு வகைகளுக்கு தற்போது ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை போக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) Owing to shortage of wheat at the producing centres, the Government of India had restricted the allotment of wheat to the Roller Flour Mills in the Madras State during August 1964 and had imposed a cut of 50 per cent in the wheat allotment. The cut was subsequently reduced to 40 per cent during September 1964 and further reduced to 25 per cent during October and November 1964. The full allotment of wheat was restored during December 1964. Normal supply of wheat was made to the Roller Flour Mills during December 1964. However, with effect from 1st January 1965, the Government of India have imposed a cut of 50 per cent on the allotment of wheat to the Roller Flour Mills of this State.

திரு. து. ப. அழகமுத்து: மில்களுக்குக் கொடுக்கப்பட்ட கோதுமை வெட்டு எவ்வளவு காலம் இருக்கும்?

கனம் திரு. வெ. ராமையயா: வெட்டு தொடர்ந்து இருந்து வரும்.

திரு. சா. கணேசன்: இந்த மாவு மில்களுக்கு கோதுமை கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அந்த கோதுமையைப் பல பண்டங்களாக ஆக்கி விற்கும்போதும் இன்ன விலைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பதாக விற்கும் விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதா? இல்லையென்றால் அப்படி நிர்ணயிக்க ஏற்பாடு செய்வார்களா?

6th March 1965]

கனம் திரு. வெ. ராமையா : அவர்கள் என்ன விலைக்கு விற்க வேண்டும் என்பதாக நிர்ணயிக்கப்பட்டு, அப்படித்தான் விற்று வருகிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : மாவு மில்களில் கொடுக்கப்படுகிற கோதுமையின் அளவானது, எந்த அளவிற்கு மாவு உற்பத்தி தேவைப்படுகிறதோ, அந்த அளவுக்கு இருக்க ஏற்பாடு செய்யப் படுமா ? அவர்கள் கோதுமையாகவே விற்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : மாவு மில்களுக்கு அரசாங்கம் நேரிடையாக கோதுமை கொடுக்கிறார்கள். அவர்கள் அதைக் கோதுமையாக விற்கக்கூடாது. அதை அவர்கள் ரவா, சொஜ்ஜி என்பதாக என்ன என்ன பண்டமாக மாற்றிக் கொடுக்கவேண்டும், அதுவும் எந்த எந்தப் பிரதேசங்களுக்கு எவ்வளவு அனுப்ப வேண்டும் என்பதும் நிர்ணயம் செய்யப்படுகிறது. மைசூர், கேரளா ஆகிய மற்ற ராஜ்யங்களுக்கு அனுப்பியதுபோக நமக்கு மீதம் இருப்பதும் குறைவானதாக இருக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாவு மில்களுக்குக் கொடுக்கப் படுகிற கோதுமை அளவு குறைக்கப்படுவதற்கு ஏற்ப மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்படுவதிலும் வெட்டு இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : குறைக்கப்படுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இவ்வாறு குறைக்கப்படுவதற்குக் காரணம் கோதுமை விளைவு பற்றுக் குறையானதாக இருக்கிறதா ? இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோதுமை அமெரிக்காவில் இருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது. அங்கே திடீரென்று துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய் திருக்கிறார்கள். அதன் காரணமாக ஏற்றுமதி தடைபட்டிருப்பது தான் பற்றுக்குறைக்குக் காரணம். மேலும் பல நாடுகளில் இருந்து வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. திடீரென்று ஸ்டாக் குறைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் வெட்டு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. சா. கணேசன் : இந்த மாவு மில்களுக்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிற கோதுமையைக் கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்கிறோம். அவர்கள் அதைப் பண்டமாக மாற்றி விற்கப்படுகிறபோது இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டும் என்பதாக விலை நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் மிக மிக அதிகமான விலைக்கு விற்கிறார்கள். ஆகவே இவர்கள் விற்கவேண்டிய விலையும் நிர்ணயிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, அவ்வாறுதான் செய்யப்படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : வெளிநாடுகளில் இருந்து வரும் கோதுமையைச் சென்னையில் உள்ள மாவு மில்களுக்குக் கொடுக்காமல் சேலம் மாவட்டத்திற்கு அனுப்பி அங்கே உடைத்தோ, அறைத்தோ மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பும்படி செய்வதனால் போக்குவரத்துச் செலவின் காரணமாக அதிக விலை ஆகவில்லையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தொழிற்சாலைகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கவேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். சேலம், கோயம்பத்தூர், போன்ற இதர மாவட்டங்களிலும் மாவு மில்கள் இருப்பதால் அங்கங்கே அனுப்பி அந்த மில்களுக்கு அருகாமையில் உள்ள இடங்களுக்குத்தான் சப்ளை செய்யச் சொல்கிறோம். இருப்பினும் இன்று சென்னையில் இருந்துதான் ஏராளமான பொருள்கள் மற்ற இடங்களுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : அரிசி விலையைவிட கோதுமை குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் அதிகம்பேர் வாங்குகிறார்கள். ஆகவே அது ஓரிடத்தில் தேங்கி நிற்காதவாறு மாவட்டங்களுக்கு இவ்வளவு என்று முதலிலேயே ஒதுக்கி அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எங்கேயும் தேங்கிக் கிடப்பதாக புகார் இல்லை. எல்லா ராஜ்யங்களுக்கும் பங்கிட்டுத்தான் கொடுக்கிறோம்.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : தமிழகத்தில் எவ்வளவு மாவு மில்கள் இருக்கின்றன ? அந்த மாவு மில்களில் எத்தனை ஆயிரம் டன் தயார் செய்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : நமக்கு வருகிற கோதுமையின் அளவு குறைந்து இருக்கிறது என்றாலும் தரம் ஏன் குறைந்து இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தரம் குறைந்திருப்பதாகத் தகவல் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கோதுமையின் அளவு குறைக்கப்பட்டுள்ள இடங்களில் அரிசியின் அளவையாவது உயர்த்திக் கொடுக்க அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது எல்லாம் தொடர்ந்து பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : மாவு மில்கள் குறிப்பிட்ட சில ஜில்லாக்களில் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாவு மில் என்ற அடிப்படையில் வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

6th March 1965]

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கிற மாவு மில்களுக்கே கோதுமை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். நிலைமை சீர்திருந்தியவுடன் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நிலவரி தள்ளுபடி

* 168 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புதுக்கோட்டைப் பகுதியிலும் மற்ற பகுதிகளிலும் பருவ மழை தவறிய காரணத்தால் இந்த ஆண்டு (1964-65-க்கு) நிலவரி தள்ளுபடி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No; and

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : இந்த ஆண்டு புதுக்கோட்டைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் மாவட்ட கலெக்டர்கள் அந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு நில வரியை ரத்துசெய்யவேண்டுமென்ற கோரிக்கைகள் அனுப்பப் பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கனம் திரு. வெ. ராமையா : திருச்சி, புதுக்கோட்டை, உடையார்பாளையம் இதுபோன்ற பிராந்தியங்களில் போதுமான பருவ மழை இல்லாத காரணத்தால் அங்கே விவசாயம் பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நிலவரி வஜா என்று இல்லாமல் அந்தப் பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய முறைகளிலே நிலைமையைப் பரிசீலித்து அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆலோசனைகள் வந்து அதன்மேல் அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுக்காகக் காத்திராமல், பஞ்ச நிலைமைக்குத் தகுந்தவாறு எங்கெங்கே என்னென்ன வேலைகள் தொடங்கப்படவேண்டுமென்று கலெக்டர்கள் கருதுகிறார்களோ அவைகளை உடனே தொடங்கலாம்.

திரு. ஆ. துரையரசன் : இந்த ஆண்டு பருவ மழை தவறிய காரணத்தால் அறந்தாங்கியிலே நீர்ப்பாசன வசதிகள் இல்லாத பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் வரிவஜா செய்து, சர்க்கார் கடன்களை வசூலிப்பதை ஒத்தி வைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த நடவடிக்கை புதுக் கோட்டையில் மட்டுமல்ல ; சென்னை ராஜ்யத்திலே எங்கேயெல் லாம் மழைக்குறைவு காரணமாக நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறதோ,

அங்கேயெல்லாம் இதைப் பரிசிலனை செய்யவேண்டும் என்பது உத்தரவு. திருநெல்வேலியில் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் மற்ற சில பகுதிகள் கூட பாதிக்கப்பட்டு இருக்கின்றன. கலெக்டர்கள் இது விஷயத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நான் விரும்புவது எல்லாம் இந்த உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு காலாகாலத்தில் கிடைக்கவேண்டும் என்பதுதான். அந்த முறையில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

திரு. ஆ. துரையரசன் : இந்த விஷயத்தில் கலெக்டர்கள் விசேஷ நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனல் இந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்பே, கடன்களை, கிஸ்திகளை வசூலிப்பதில் அதிகாரிகள் தீவிரமாக இருக்கிறார்களே ; நடவடிக்கை முடியும் வரை வசூல் செய்வதை நிறுத்திவைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : யார் யார் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களோ, அவர்கள் விஷயத்தில் சலுகை அளிப்பதற்காக விசேஷ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் போர்வையில் பாதிக்கப்படாதவர்களிடமிருந்து கடன் வசூலிப்பதை ஒத்திவைக்கவேண்டுமென்று சொல்வது நடக்காத காரியம்.

திரு. கோ. சி. மணி : பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நிர்பந்தப்படுத்தப்படுகிறார்கள்; ஜப்தி செய்யப்படுகிறார்கள்; என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

கனம் திரு. வெ. ராமையா : எந்தப் பிராந்தியத்தில் என்பது தெரியவில்லை. கும்பகோணமா ?

திரு. கோ. சி. மணி: கும்பகோணம் வட்டாரத்திலே, திருத்துறைப்பூண்டி வட்டாரத்திலே இருந்து தகவல் வந்திருக்கிறது.

கனம் திரு. வெ. ராமையா: கும்பகோணம் மழையில்லாத பகுதி என்று சொன்னல் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவ்வாறு ஏதாவது இருந்தால் கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : கலெக்டர் அவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று அமைச்சர் அவர்கள் பொதுவாகச் சொன்னார்கள். பொதுவாக நம்முடைய பொதுமக்களிடமிருந்து வரி, விற்பனை வரி இவைகளை விரைவாக வசூலிக்காமல் அவைகளை வசூலிப்பதற்கு தாட்சண்யம், கருணை காட்டப்படுகிறது. அப்படியிருக்கும்பொழுது, நண்பர் துரையரசன் அவர்கள் சொன்னதுபோல் இந்த விஷயத்தில் உடனடியாக வஜா செய்யப்படவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : விற்பனை வரி வேறு விஷயம். இரண்டையும் ஒப்பிடக்கூடாது. எந்தப் பகுதியில் எந்த நிலைமையில் வசூல் செய்யவேண்டும் என்பதை ரெவின்யூ அதிகாரிகள் பார்த்து வருகிறார்கள். அரசாங்க உத்தரவு வந்துதான் செய்ய வேண்டும் என்று காத்து இருக்கவேண்டியது இல்லை. ஜமாபந்தி வரைக்கும் கூடக் காத்திருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அதற்கு முன்பேகூட வேண்டிய உதவிகளை எல்லாம் செய்யலாம் என்று தான் அரசாங்கம் விரும்புகிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : பஞ்சம் உள்ள பகுதியிலே ரெவின்யூ அதிகாரிகள் மிகக் கடுமையாக வசூலை ஆரம்பித்திருக்கிறார்கள். அது அவர்களுடைய உத்தியோக உயர்வுக்கு வழிசெய்யும் என்று நினைத்து அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். கடுமையாக வசூலில் இறங்கியிருக்கிறார்கள். இதைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : அப்படி யாரும் வசூலிக்கவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படி நினைத்துக் கொண்டு சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதில் லாபமில்லை. அப்படி யார் நடந்துகொண்டார்கள் என்று திட்டவட்டமாகச் சொன்னால் கவனம் செலுத்தப்படும். அப்படிப்பட்ட பகுதியிலிருந்து இங்கு வரக்கூடியவர்கள் இங்கு வந்து சட்டசபையில்தான் சொல்ல வேண்டுமென்பதில்லை. சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளைப் பார்த்து அவர்கள் மூலமே செய்துகொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஆண்டு, புயல், பூச்சி, தண்ணீர்ப் பஞ்சம் இவைகளினால் விவசாயிகள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிசெய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

கனம் திரு. வெ. ராமையா : அங்கத்தினர் அவர்களுடைய பகுதியிலே இந்த வருஷம்தான் தண்ணீர்ப்பாசனம் முறையாக இருக்கிறது. இதற்கு முன்புதான் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பூச்சிகளினால் பாதகம் ஏற்பட்டால் அதிகாரிகள் பார்த்து என்ன செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்தால் அரசாங்கம் இதை கவனிக்கும்.

திரு. எஸ். ராமசாமி நாயுடு : நாலு அணா மகசூல் என்று கர்ணம் எழுதிவிட்டால் வஜா இல்லையென்று ஒரு நியதி இருக்கிறது. அதை மாற்றி 4 அணா மகசூல் இருந்தால் அதற்குக் குறைந்த பிரகாரம் வஜா கொடுப்பதற்கு, விவசாயிகளுக்கு அது மாதிரி சலுகை கிடைப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கக்கூடிய விதிமுறைகளுக்குட்பட்டே உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அப்படி ஏதாவது மாற்றவேண்டிய நிலைமை வந்தால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

[6th March 1965

திரு. ஜே. மாதா கவுடர் : அடிக்கடி மகசூலிலே குறைவரும் காரணத்தாலே நிலவரியை அடியோடு ரத்து செய்துவிட்டு வருமான வரியை அதிகரித்துக்கொண்டு, நிலவரியை அடியோடு ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மழையின்மையால் பாதிக்கப் பட்டிருக்கிற ஜில்லாவானாலும் சரி, மழை அதிகமானதால் பாதிக் கப்பட்டிருக்கிற ஜில்லாவானாலும் சரி, அமைச்சர் அவர்கள் சொன் னார்கள் உதவியளிக்கப்படுமென்று. அப்படியானால், நீலகிரி ஜில்லாவில் அதிகாரிகள் தீவிரமாக கடன்கள், தக்காவிக் கடன்கள், லேன்ட் ரெவின்யூ இவைகளைத் தீவிரமாக வசூல் பண்ணுகிறார்கள். அதைக் குறைப்பதற்கு என்னென்ன நிவாரணத் திட்டங்கள் கவனிக்கப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : மழை அதிகமானதாலும் மழை யின்மையாலும் பாதிக்கப்பட்ட எல்லா விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத் திருக்கிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : மிகக் குறைவாக விளைச்சல் ஏற்பட்ட இடங்களிலே கர்ணங்கள் 4 அணா மகசூல் ஏற்பட்டது என்று சொன்னால் கூட ரெவின்யூ அதிகாரிகள் அதிகமாக மதிப்பிட்டு, அதிகம் கொடுக்கவேண்டு மென்று கண்டிப்புச் செய்கிறார்கள். அரசாங்கம் அவர்களுக்கு அதுபோல் ஏதாவது உத்திரவு போட்டிருக்கிறதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்கள் சொல்வ திலிருந்து ரெவின்யூ அதிகாரிகள் விவசாயிகள் இருக்கக்கூடிய நிலைமையை நன்கு பார்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. விவசாயிகளுக்கு உண்மையாக என்னென்ன நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் ரெவின்யூ அதிகாரிகள் முடிவு செய்வார்கள்.

திரு. ஆ. துரையரசன் : ரெமிஷன் தரப்படுகின்ற பஞ்ச நிவார ணப்பகுதிகளில் கடன்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: என்ன நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று ரெவின்யூ அதிகாரிகளுக்கு எழுதினால் அவர்கள் எப்படிச் சிபாரிசு செய்கிறார்களோ, அதை அரசாங்கம் பரிசீலனை செய்து வேண்டிய முடிவுகள் எடுக்கும்.

திரு. அ. ராகவ ரெட்டி : ரெவின்யூ அதிகாரிகள் தாங்கள் செய்யவேண்டிய வேலையை விட்டு விட்டு கடந்த ஐந்தாறு மாதங் களாக உணவுப் பற்றுக்குறை வந்த நாளிலிருந்து அந்த வேலையைத்

6th March 1965]

தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இம்மாதிரி விவசாயிகளுக்கு உதவி செய்யக் கூடிய வேலைகளைச் செய்வதில்லை. இந்த நிலைமையைத் தவிர்க்க அரசாங்கத்தினர் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது உணவு விநியோகத்திலே ப்ரொக்யூர்மெண்டிலே ஈடுபட்டிருக்கும் வேலையும் விவசாயிகளுக்காக, ஏழைகளுக்காகச் செய்யக் கூடிய வேலைதான். இதுவும் ரெவின்யூ இலாகாவின் முக்கியமான வேலைகளில் ஒன்று.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : இராமநாதபுரம் ஜில்லாவில் மேல் பகுதிகளில் மழையின்மை காரணமாக நிலவரி வஜா அளிக்க வேண்டுமென்பதற்காகக் கலெக்டர் அவர்களைச் சந்தித்தபோது, ஸ்தல அதிகாரி ரிப்போர்ட்டை அடிப்படையாக வைத்துத்தான் எதுவும் செய்ய முடியும் என்று தெரிவித்தார்கள். அந்தப் பகுதிகளைக் கலெக்டர் அவர்கள் மேலும் பார்வையிட்டு நிவாரணம் கிடைப்பதற்கு உத்தரவிட அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஸ்தல அதிகாரி அறிக்கை வந்த பிறகு இருக்கக்கூடிய நிலைமைக்கும், அறிக்கைக்கும் வித்தியாசம் இருக்கும் பட்சத்தில் அவரே நேரே போய்ப் பார்வையிட வேண்டும். அந்த முறையில் ரெவின்யூ போர்டு மெம்பர் கூட திருநெல்வேலிக்குச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். இராமநாதபுரம் மற்ற இடங்களுக்கும் போகவேண்டுமென்பதுதான் விருப்பம்.

திரு. ர. ஜீவரத்னம் : வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரை சரியான மழை எப்போதும் பெய்வதில்லை. இம்மாதிரி வரி வஜா செய்ய வேண்டுமென்று கேட்டதும் கிடையாது. எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை அங்கே கிணற்றுப் பாசனந்தான். ஆகவே, ஒரு எக்கர், இரண்டு எக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்காவது குறிப்பிட்ட அளவு வரிவஜா செய்வது பற்றி யோசிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்கு முந்திய வருஷங்களில் அங்கே போதுமான மழை இல்லாமல் இருந்திருக்கலாம். இந்த வருஷம் வட ஆற்காடு ஜில்லாவில் திருப்திகாமான அளவுக்கு மழை பெய்திருக்கிறது.

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : எந்தெந்த மாவட்டங்களில் மழை இல்லாமல் விவசாயத்திற்கு ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது? எந்தெந்த மாவட்டங்களில் மழை அதிகமான காரணத்தால் விவசாயத்திற்கு ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த வருஷம் போதுமான பருவ மழை இல்லாத காரணத்தால் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் அதிகமான மழை பெய்ததால் நஷ்டம் ஏற்படவில்லை. லாபந்தான். குறிப்பாக, கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் நல்ல மழை பெய்ததன் காரணமாக இந்த வருஷம் நல்ல மகசூல் கிடைக்கும்.

[6th March 1965

Grain Trading Corporation at Madras

* 169 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the details of the proposal to locate a Grain Trading Corporation at Madras;

(*b*) whether the State Government propose to take shares in the Corporation; and

(*c*) the details of the proposed activities of the Corporation?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*c*) The attention of the Member is invited to "The Food Corporations Act, 1964" (Central Act No. 37 of 1964) published in the *Gazette of India* Extraordinary—Part II—Section 1, dated 11th December 1964 and also republished at pages 17–36 in Part IV—Section 2 of the *Fort St. George Gazette*, dated 20th January 1965; and

(*b*) No.

திரு. எம். தண்டாயுதபாணி : விவசாயிகளிடத்தில் நேரடியாக நெல் வாங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால் இந்த ஆண்டு ஏன் அது செயல்படவில்லை ?

கனம் திரு. வெ. ராமைய்யா: கார்ப்பரேஷன் நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு அந்தச் சட்டத்திலே எல்லா விதமான தகவலும் இருக்கின்றன. அதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வருஷம் நமது ராஜ்யத்தில் நேரடியாக விவசாயிகளிடத்தில் இருந்து நெல்லை வாங்கவில்லை. கொள்முதல் பூராவும் அரசாங்கமே செய்கிறது.

உணவு தானியக் கிடங்குகள்

** 170 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: } திரு. கே. அ. மதியழகன் : } கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் அரசாங்க உணவு தானியக் கிடங்குகள் கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அவை எங்கெங்கு கட்டப்படும்?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes, Sir; and

(*b*) Godowns are being constructed at the following places, namely :—

(1) Thanjavur district.—Two godowns—one at Nilagiri Therkuthottam and the other at Pamanai village in Mannargudi taluk.

(2) Tiruchirappalli district.—One godown at K. Sathanur village.

(3) Chingleput district and taluk.—One godown at Chitlapakkam village.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்தக் கோடவுன்கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டு விட்டனவா ? அவற்றுக்கான செலவு எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கோடவுன்கள் கட்டும் வேலை மிகத் துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் முதல் யூனிட் இப்பொழுதே தயாராகிவிட்டது. இதற்கு மொத்தமாக அனுமதிக்கப்பட்ட செலவு ரூ. 2.14 கோடி.

திரு. கே. ஏ. மதியழகன்: இரண்டு கோடி ரூபாய் அளவில் கட்டப்பட்டு வருகிற இந்தக் கோடவுன்களைக் குறைந்தபட்ச நாட்களுக்குள்ளாகக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று உத்தர விட்ட காரணத்தால் அவை எல்லாம் கட்டட அமைப்பில் வலு வில்லாத முறையில் கட்டப்படுகின்றன என்பதைப் பற்றிப் பரிசிலனை செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : Sir, I have only to refer to what the hon. Member has said. His feeling is that only buildings the construction of which takes months and years to complete are well constructed and that buildings, which are constructed in the shortest possible time, are limsy ones. I am not in a position to subscribe to that view. In this case, the time factor was taken into consideration and all our Engineers have put forth their best efforts. The fact is that we are getting the best construction without any defect.

திரு. கே. ஏ. மதியழகன்: சார், 90 நாட்களில் அந்தக் கோட வுன்களைக் கட்டி முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக் கிறது. டெண்டர்கள் விரைவாக ஒத்துக் கொள்ளப்பட்டிருக் கின்றன. கட்டடம் கட்டுவதற்கான போதிய காலம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நிச்சயமாக என்னால் நிரூபிக்க முடியும்---90 நாட்களிலே நல்ல முறையிலே கட்டடத்தைக் கட்ட முடியாது. இந்த நியாயமான உணர்ச்சியை அமைச்சர் அவர்கள் மறுக் கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் மதியழகன் சொல்லக் கூடிய ஆலோசனையை எடுத்துக் கொண்டால் ஒரு வேலையும் நடக்காது. இதற்கு ஆலோசனை சொல்லக்கூடியவர்கள் எஞ்சினி யர்கள், நிபுணர்கள். அவர்கள் திட்டவட்டமாக விரைவாகக் கட்டடத்தைக் கட்டி முடிக்க முடியும் என்றும், அதனால் பாதகம் ஏற்படாது என்றும் கூறியிருக்கிறார்கள். இந்த வருஷம் வேகமாக இந்தக் கோடவுன்களைக் கட்டி முடிக்காமல் போய்விடும் பட்சத்தில் அரசாங்கம் பெரும் அளவுக்குக் கொள்முதல் செய்திருக்கும் உணவுப் பொருள்களை வைத்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, விரைவாக அவற்றைக் கட்டிக் கொடுக்க முயற்சியை மேற்கொண்டுள்ள அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

திரு. சா. கணேசன் : தானிய சேமிப்பு கிடங்குகள் இருக்கின்ற இடங்களைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக மன்னார்குடியில் கட்டப்பட்டிருக்கிற கிடங்குக்கு பிற பகுதிகளில் இருந்து நெல்

வந்து அரைப்பதற்கும், பிற பகுதிகளுக்குக் கொண்டு போவதற்கும் போக்குவரத்துச் சிக்கல்கள் கொண்டதாக இருப்பதால், திருவாரூர் போன்ற மத்தியப் பகுதியில் கிடங்குகள் இருந்தால் போக்குவரத்துச் சங்கடங்கள் இல்லாமல் இருக்கும் அல்லவா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இது போன்று கோடவுன்கள் கட்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது போக்குவரத்தை மனத்தில் கொண்டுதான் திறந்திருக்கிறோம். நெல் உற்பத்தி செய்யப்படுகிற இடத்திலேயே சேமித்து வைக்க வேண்டுமென்ற அவசியமில்லை. போக்குவரத்து வசதி எங்கே இருக்கிறதோ, அதுவும் ரயில் போக்குவரத்து இருக்கிறதா என்று பார்த்து அந்த அடிப்படையில்தான் இடம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மன்னார்குடியில் ஒன்று கட்டினாலும் மற்ற இடங்களிலும் கட்டப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது கட்டப்பட்டு வருகின்ற கிடங்குகள் எப்போது முடிவு பெறும்? தஞ்சையில் சேகரிக்கப்படுகின்ற உணவு தானியங்கள் இப்போது எங்கே சேமிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தக் கிடங்குகள் கட்டுவதைப் பொறுத்து பல யூனிட்டுகள் இருக்கின்றன. கனம் மதியழகன் சொன்னதைப் போல் 90 நாட்களில் எல்லா இடங்களிலும் எல்லா கோடவுன்களையும் கட்டி முடித்து விடப் போவதில்லை. முதல் யூனிட் மார்ச் முடிவில் தயாராகும். அது போல் 50,000 டன் என்று சொன்னால் பத்து யூனிட் முடிய ஏப்ரல் 15-ம் தேதி வரை ஆகிவிடும். தஞ்சையில் வாங்கக்கூடிய நெல்லை எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்
9–30 a.m. திற்கும் அலாட்மெண்ட் போட்டு எடுத்துச் செல்கிறோம். மீதம் இருக்கக்கூடிய நெல் சென்னை நகரத்தில் விநியோகிக்கப்படுகிறது. ஆவடிக்கு கொண்டு வருகிறோம்.

திரு. எம். தண்டாயுதபாணி: தஞ்சையிலும் மன்னார்குடியிலும் கட்டப்படுகிற கிடங்குகளில் கொள் அளவு என்ன? அதில் அரிசியாக சேமிக்க உத்தேசமா அல்லது நெல்லாக வாங்கி சேமிக்க உத்தேசமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: ஒவ்வொருயிடத்திலும் கட்டப்படக்கூடிய கிடங்குகளின் அளவு 50,000 டன். நீண்ட காலமாக சேமித்து வைத்துக் கொள்ளக் கூடிய காரணத்தினால் அரசாங்கம் நெல்லாகத்தான் வைக்க முடிவு எடுத்திருக்கிறது.

திரு. ச. ஜீவரத்னம்: தஞ்சைக்கு அடுத்தாற்போல் வட ஆற்காடு ஜில்லாவில்தான் உணவு உற்பத்தி அதிகம் என்று அடிக்கடி முதல் அமைச்சர் அவர்களும், ரெவின்யூ அமைச்சர் அவர்களும் கூறி வருகிறார்கள். உணவு தான்யங்களை சேமித்து வைக்க தஞ்சையிலும் செங்கல்பட்டிலும்தான் கோடவுன்கள் கட்டப்படுவதாகச் சொன்னார்கள். அதுபோன்று வட ஆற்காடு ஜில்லாவிலும் கிடங்குகள் கட்ட முன் வருவார்களா?

6th March 1965]

கனம் திரு. வெ. ராமையயா: இப்போது அங்கு உற்பத்தியாகக் கூடிய உணவு தான்யங்களை சேமித்து வைக்க கஷ்டம் ஒன்றுமில்லை. அங்குள்ள உற்பத்தியை எல்லாம் மனதில் கொண்டு அங்கேயும் கட்டவேண்டுமென்ற முறையிலும் பரிசீலனை செய்து வருகிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கும் இந்தப் பெரும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருப்பதால் கிராம மக்களுக்கு அவை விரைவாகப் போய் சேருவதற்கு ஆங்காங்கே ஒவ்வொரு ஜில்லா தலைநகரிலும் இவ் விதமாக கோடவுன்களை கட்டி மக்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. வெ. ராமையயா: எல்லா ஜில்லாக்களில் கட்டினாலும் நீலகிரி ஜில்லாவிற்கு வேண்டாம்.

திரு. எஸ். சின்னையன்: கனம் அமைச்சர் அவர்கள் திருச்சியில் கோடவுன் கட்டப்போவதாகச் சொன்னார்கள். ஏற்கனவே அங்கு சென்ட்ரல் ஸ்டோரேஜ் கோடவுன் இருக்கிறது. அவர்களிடமே இந்த கோடவுன் ஒப்படைக்கப்படுகிறதா? அல்லது நேரிடையாக நம் அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறதா?

கனம் திரு. வெ. ராமையயா: சென்ட்ரல் வெயர் ஹௌஸிங் கார்ப்பரேஷன் சார்பாக நாம் முன்வந்து கட்டுகிறோம், அவர்கள் கட்டுவதில் காலதாமதமாகும் என்று. இதில் சேமித்து வைக்கும் பொருள்கள் புட் கார்ப்பரேஷன் பொறுப்பில் இருந்தாலும், நம் அரசாங்கம் எப்படி அதை அலாட்மெண்ட் போடுகிறதோ, அதற்குத் தகுந்த முறையில் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: இப்படி கோடவுன்கள் கட்டுவதாகக் குறிப்பிட்டார்கள். நாகபட்டணத்தில் ஏற்கனவே ஒரு வெயர் ஹௌஸ் இருக்கிறது. அதில் சரியாக பொருள்கள் எல்லாம் வந்து சேருவதில்லை. அது காலியாகவே இருக்கிறது. அதில் இந்த உணவு தான்யங்களை வைக்கும் முறையில் மாற்றியமைக்கிற முறை ஏதாவது உத்தேசிக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமையயா: நடைமுறையில் உள்ள வெயர் ஹௌசிங் அல்லது மற்ற கோடவுன்கள் எல்லாம் நம் கொள்கை யோடு பார்த்தால் இதெல்லாம் போதுமானதாக இருக்காது. நாக பட்டணத்தில் அவர்கள் கட்டியிருந்தால் 500 வரை வைக்கலாம். இதையெல்லாம் அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட கார்ப்ப ரேஷன் பயன்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

Harvest in Tirupathur taluk

* 171 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any instructions to the effect that the agriculturists in Tirupathur taluk, Ramanathapuram district should harvest their fields only in the presence of Revenue officials have been issued; and

(b) if so, the reasons for the same?

[6th March 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) No.
(b) Does not arise.

கூட்டுறவு நில அடமான பாங்குகள்

*172 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கூட்டுறவு நில அடமான பாங்குகளில் கடன் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தையும் பணச்செலவையும் அகற்றுவதற்கான யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIYAR : Yes.

திரு. து. ப. அழகமுத்து : பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அது எந்த கால அளவிற்குள் முடிவு பெறும் ? கடன் பெறுவதற்குச் செல்பவர்கள் அதிகச் செலவு இல்லாமலும் காலதாமதம் இல்லாமலும் கடனைப் பெறுவதற்கான காரியங்களை எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமே அதைச் செய்து தர சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போதே ஆங்காங்குள்ள ப்ரைமரி லான்ட் மார்ட்கேஜ் பாங்குகள் மூலம் 3,000 ரூபாய் வரையில் அவர்கள் பொறுப்பில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுப்பதற்கு முன்பாக மத்திய நில அடமான பாங்கின் உத்தரவு பெற வேண்டுமென்று இருந்தபோதிலும் இன்னும் குறைத்து 2,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அங்குள்ளவர்களே உட்கார்ந்து அதைப் பார்த்துக் கொடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நில அடமான பாங்குகளில் கடன் வாங்குவது சம்பந்தமாக ஏற்படுகிற காலதாமதங்கள் சகலவற்றையும் விரைவாக நீக்குவதாக இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்னால் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் 2,000 ரூபாய் வரையில் உள்ள விவகாரங்களுக்குத்தான் சீக்கிரமாகப் பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. இது உணவு உற்பத்தி பொறுத்த விஷயம். பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இப்படி அடமானம் வைப்பதற்குக் காரணமே அவர்கள் அதை அபிவிருத்தி செய்வதற்காக இருக்கிற காரணத்தினால் இதிலுள்ள சகல தாமதங்களையும் நீக்க விரைவான நடவடிக்கைகள் எடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போதே முடிந்த வரையில் இந்த முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வாங்கக் கூடிய நபர்கள் அல்லது பார்டிகள் எல்லா

ரிக்கார்ட்களை ஒப்புவிப்பதில் தாமதம் ஏற்படுகிறதே தவிர, மற்றொன்றும் இல்லை. 23 வருடங்களுக்கு என்கம்பரன்ஸ் சர்டிபிக்கட் வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைக் குறைத்து 12 வருடமாகச் செய்யலாமா என்ற யோசனையும் இருந்து கொண்டிருக்கிறது.

UNSTARRED QUESTIONS.

அரக்கோணம் நகராட்சியின் ஆணையாளர்

17 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபை ஆணையாளர் மீது 10—9—1963, 14—10—1963, 21—10—1963 தேதிகளில் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட புகார்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா ?

(இ) அதன் விவரமென்ன ?

பதில்—(அ) & (இ) அரக்கோணம் நகராட்சியின் முன்னாள் ஆணையாளர் அவருடைய நிலையான மானேஜர் பதவிக்கு ஏற்கனவே தள்ளப்பட்டார்.

(*a*) & (*b*) The former Municipal Commissioner, Arkonam, has already been reverted to his original post as Municipal Manager.

செய்யாறு மாவட்ட கழக உயர்நிலை பள்ளியின் கட்டிட நிதி

18 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாறு மாவட்டக் கழக ஆண்கள் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மீது கட்டிட நிதிக் கையாடல் முதலியவைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டி 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந் தேதியில் ஏதேனும் முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதன்மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை யாது ?

பதில்—(அ) & (இ) 1964-ம ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதியிட்ட மனு ஒன்று 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ந் தேதியில் கிடைத்தது. செய்யாறு திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட, அச்சிட்ட துண்டு வெளியீடு ஒன்றில் மேற்படி தலைமையாசிரியரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த புகார்களை அரசாங்கம் ஏற்கெனவே பரிசீலனைச் செய்து அவை உண்மையல்லவென்று அறிந்ததால் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதியிட்ட மேற்படி மனுவின் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுப்பதும் அவசியமில்லையென்று கருதப்பட்டது.

(*a*) & (*b*) A petition, dated 10th January 1964, was received on 28th February 1964. As the Government had already examined the allegations against the headmaster referred to with reference to a printed pamphlet issued by the D.M.K. party of Cheyyar and found them to be not true, no action was considered necessary on the petition, dated 10th January 1964.

அச்சுத்துறை எழுதுபொருள்கள் வழங்கும் உரிமை

19 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களுக்கான பல்வேறு அச்சுத்துறை, எழுது பொருள்களை வழங்கும் உரிமை சென்னை "ஹொ அண்டு கோ"விற்கு அளித்திருப்பது போல் வேறு எத்துறைக்காவது, வேறு எந்த அச்சகத்திறகாவது இத்தகைய பொருள்களை வழங்கும் உரிமை வழங்கப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அத்துறைகள் எவை, எவை ? அவ்வச்சகங்கள் எவை எவை ?

பதில்—(அ) 1964–65-ம் ஆண்டுக்காகப் பஞ்சாயத்துகளுக்குத் தேவைப் படும் படிவங்களை அச்சிட்டு வழங்கும் வேலை மெஸர்ஸ் ஹோ அண்டு கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வேலை வேறு எந்த அச்சகத்திற்கும் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்துக்கள் தங்களுக்கு வேண்டிய எழுதுபொருள்களைப் பஞ்சாயத்து நிதியிலிருந்தே வெளி மார்க்கெட்டில் வாங்கிக்கொள்ளலாம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) The work of printing and supply of forms required by the Panchayats for 1964-65 has been entrusted to Messrs. Hoe and Company. No other press has been entrusted with this work. The Panchayats are empowered to purchase in the open market from their own funds the articles of Stationery required by them.

(*b*) Does not arise.

மும்மொழித் திட்டம்

20 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மும்மொழித் திட்டப்படி, தமிழ்நாட்டில் மூன்றுவது மொழியாக தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இவற்றுள் ஒன்றை ஏற்றுப் படிக்கும் மாணவர்கள் மொழிவாரியாக எத்தனை பேர் ?

(இ) அதற்காகப் பணிபுரியும் அம்மொழி ஆசிரியர்கள் மொழிவாரி யாக எத்தனை பேர் ?

பதில்—(அ) & (இ)

District Educational Officers/Inspectresses of Girls' Schools (Jurisdiction).	Telugu.		Malayalam.		Kannada.	
	Pupils	Teachers.	Pupils	Teachers.	Pupils	Teachers.
District Educational Officer, Nagercoil.	..	..	1,002	36	..	..
District Educational Officer, Virudhunagar.	48	1	..	..	..	..
District Educational Officer, Pollachi.	..	..	33	1	..	..
District Educational Officer, Saidapet.	262	9	..	..	..	..
District Educational Officer, Dharmapuri.	657	10	..	..	..	..
Inspectress of Girls' Schools, Tirunelveli.	..	..	..	..	..	..
District Educational Officer, Vellore.	504	4	..	..	..	..
Total	1,471	24	1,035	37	..	..

6th March 1965]

Albizia trees

21 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) in which part of our State Albizia trees required for catamarans are grown;

(*b*) whether they are sufficient for the requirements of our State?

A.—(*a*) In Salem and Coimbatore districts.

(*b*) Not sufficient.

(அ) சேலம், கோவை மாவட்டங்களில் வளர்க்கப்படுகிறது

(இ) தேவைக்குப் போதுமானதல்ல.

புன்னக்காயலை மீன்பிடித் துறைமுகமாக்கல்

22 கேள்வி.—திரு. எம்.எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னக்காயலை மீன்பிடித் துறைமுகமாக விருத்தி செய்யும் திட்டமிருக்கிறதா ?

(இ) திருச்செந்தூரில் கூட்டுறவு மீன் விற்பனை யூனியன் ஆரம்பிக்கும் திட்டமிருக்கிறதா ?

பதில்—(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னக்காயல் கழிமுகத்தை மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது.

(இ) திருச்செந்தூரில் மீன் விற்பனைக் கூட்டுறவுச் சங்கமொன்று ஏற்கெனவே இயங்கிவருகிறது.

A.—(*a*) The question of developing Pannakayal Estuary in Tirunelveli district for fishing operation is under consideration.

(*b*) A fish marketing union is already functioning at Tiruchendur.

அரிசன நல இலாகா பாடசாலைகளுக்கு ஆசிரியர் தேர்வு

23 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசன நல இலாகாவின் மேற்பார்வையிலுள்ள பாடசாலைகளில் வேலை செய்துவிட்டுப் போன (ousted) ஆசிரியர்கள் மீண்டும் வேலை தேடிகொடுக்கும் ஸ்தாபனத்தில் (Employment Exchange) பதிவு செய்துதான் அரிசன இலாகாவின் மேற்பார்வையிலுள்ள பள்ளிகளில் வேலை பெறமுடியுமா ?

(இ) அவர்கள் பின்னர் ஏற்படும் காலி ஸ்தாபனங்களில் நேரடியாகவே வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுகின்றனரா ?

A—

(*a*) Yes.

(*b*) No.

(அ) ஆம்

(இ) இல்லை

மைத்தலே மன்றுடி கண்மாய் (மதுரை மாவட்டம்)

24 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பெரியகுளம் தாலுகாவில் மைத்தலே மன்றுடி கண்மாய் மராமத்து செய்யப்பட்டதா ?

(இ) ஆமென்றல் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது ?

பதில்—(அ) ஆம்.

(இ) இக் கண்மாயின் மூழுக்கொள் அளவினே (F.T.L.) உயர்த்துவதற்கும், அதன் கீழ்ப் பாசனம்பெறும் நிலப்பரப்பினே விரிவுபடுத்துவதற்குமாக மொத்தம் முப்பத்திநான்காயிரத்து முன்னூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் (ரூ. 34,394) செலவழிக்கப்பட்டது.

A.—(*a*) Yes.

(*b*) A total expenditure of rupees thirty-four thousand, three hundred and ninty-four (Rs. 34,394) was incurred on raising the F.T.L. of the tank and extending the irrigable area under the tank.

சாலேகள் (விருத்தாசலம் தாலூகா)

25 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளே : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூகா, நல்லூர் பஞ்சாயத்து யூனியனில் விருத்தாசலத்தில் இருந்து தொழுதூர் சாலேயையும், விருத்தாசலம்—வேப்பூர் சாலேயையும் இணேக்கும் இறையூர்—சிறப்பாலூர்—நல்லூர் சாலேயை சீர்படுத்த (Sugarcane Cess Funds)-ல் இருந்து நிதி ஒதுக்கி வேலே செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

பதில்—கரும்பு சாலே அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்த சாலேயைச் சீர்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமில்லே.

A.—There is no proposal to improve this road under the Sugarcane Road Development Scheme.

Fair price shops (North Arcot)

26 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. Minister for Food be pleased to state—

(*a*) the number of fair price shops sanctioned and functioning respectively in the whole of North Arcot district;

(*b*) the details of the Municipal towns where the shops have been opened; and

(*c*) the quantity of rice issued to the public through these shops in each of the Municipal towns in that district?

A.—

(*a*)	Number sanctioned	21
	Number functioning	20
(*b*)	(1) Vellore	3
	(2) Ambur	1
	(3) Gudiyatham	5
	(4) Arkonam	3
	(5) Tirupattur	4
	(6) Vaniyambadi	1

6th March 1965]

(*c*) The quantity of rice issued to public is 2 litres per family per day.

(அ) உத்திரவானது	..	21
நடைமுறையில் உள்ளது	..	20
(இ) 1. வேலூர்	..	3
2. ஆம்பூர்	..	1
3. குடியாத்தம்	..	5
4. அரக்கோணம்	..	3
5. திருப்பத்தூர்	..	4
6. வாணியம்பாடி	..	1

(இ) குடும்பம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 2 லிட்டர் அரிசி வீதம் வழங்கப்படுகிறது.

மதுவிலக்கு சட்டத்தின்கீழ் கைது

27 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் மதுவிலக்கு சட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் எத்தனைபேர் மீது வழக்கு தொடரப்பட்டது ?

A—

	January 1964.	February. 1964.
(*a*)	10,423	7,527
(*b*)	10,310	7,521

Prohibition offences

28 *Q*.—Sri A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of prohibition offences detected in 1963 and also for the period ending 31st August 1964 in Kanyakumari district; and

(*b*) the total number of cases ended in conviction?

A—

	1963	1964 (up to 31st August 1964.)
(*a*)	2,893	1,787
(*b*)	2,272	1,436

Acquisition of land for construction of houses for Harijans (Tiruttani taluk)

29 *Q*.—Sri C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of cases pending sanction of the Government for land acquisition for providing houses for Harijans in Tiruttani taluk in Chingleput district; and

(*b*) the villages that will be provided with house-sites for Harijans in Tiruttani taluk in Chingleput district during 1964–65?

A—

(*a*) 6.

ஆறு

[6th March 1965

(b) (1) Atikalapattu.
(2) Chinnamandali.
(3) Ayyeneri.

(1) ஆத்திக்கால்பட்டு
(2) சின்னமண்டலி
(3) அய்யநேரி

Assignment of waste lands (Chingleput district)

30 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the total assessed waste land in Tiruttani and Pallipet sub-taluks in Chingleput district;

(b) the number of applications pending in the taluk offices of Tiruttani and Pallipet requesting for assignment of the assessed waste land; and

(c) the action taken thereon?

A—

Extent of total assessed waste lands (dry and wet) in—

	Tiruttani taluk.		Pallipet sub-taluk.	
	Ac.	**c.**	**Ac.**	**c.**
(a)	**9,321**	**81**	**3,600**	**89**
(b)	**1,060**	**00**	**492**	**00**

(c) An extent of 214.08 acres in all has been assigned to landless poor persons since 1st July 1963 in Pallipet sub-taluk.

The District Revenue Officer, Chingleput, is examining the proposal of the Revenue Divisional Officer, Tiruvellore, for the employment of special staff for the work connected with assignment in view of the large number of pending applications. The District Revenue Officer has, however, instructed the Tahsildar, Tiruttani and Independent Deputy Tahsildar, Pallipet, to bestow their attention to this branch of work and to complete the work expeditiously.

தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்களின்
(புன்செய், நன்செய்) மொத்தப் பரப்பு.

	திருத்தணி தாலூகா		பள்ளிப்பட்டு துணைத் தாலூகா	
	எக்கர்.	சென்ட்.	எக்கர்.	சென்ட்.
(அ)	9,321	81	3,600	89
(இ)	1,060	00	492	00

(உ) பள்ளிப்பட்டு துணைத் தாலூகாவில் 1963-ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் தேதியில் இருந்து மொத்தம் 214·08 எக்கர் நிலம், நிலமற்ற ஏழைகளுக்கு பட்டா செய்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பட்டா செய்து தரும்படி அனுப்பியுள்ள ஏராளமான மனுக்கள் இன்னும் தீர்வு காணாமற் இருப்பதால், இதற்கு என தனியாக பணியாளர்களை அமர்த்த வேண்டும் என்று திருவள்ளூர் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி அனுப்பிய திட்டத்தை செங்கற்பட்டு மாவட்ட ரெவின்யூ அதிகாரி பரிசீலித்து வருகிறார்.

இத்துறையில் தங்கள் கவனத்தை செலுத்தி விரைவில் இவ்வேலையை முடிக்கும்படி மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களுக்கு உத்திரவு பிறப்பித்து உள்ளார்.

6th March 1965]

"Tamilagam", Ootacamund

31 *Q.*—Sri A. RAGHAVA REDDI: Will the Hon. the Minister for Food be pleased to state the names of persons to whom rooms were allotted in 'Tamilagam', Ootacamund, during May 1964 and the nature of their stay?

A.—Particular are given in the statement [a] placed on the Table of the House.

இச்சபையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் [a] விவரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

நெல், அரிசி விற்பனை விலைகள்

32 கேள்வி.—திரு. எ. சுவாமிதாஸ்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் நெல்லுக்கும் அரிசிக்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த ரகத்திற்கு என்னென்ன விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது?

பதில்.—

உணவு–வேளாண்மைத் துறையில் 1964-ம் வருடம் அக்டோபர் மாதம் 17-ம் தேதியில் வெளியான 2858-வது எண் அரசாங்க ஆணையை பார்க்கும்படி அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். அதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நெல்லின் உச்ச மொத்த விற்பனை விலைகள், அரிசியின் உச்ச மொத்த விற்பனை விலைகள், சில்லறை விற்பனை விலைகள் இவை சம்பந்தமான முழு விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த ஆணையின் நகல் ஒன்று சட்டப்பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

The attention of the member is invited to G.O. Ms. No. 2858, Food and Agriculture, dated 17th October 1964 in which full details of the maximum wholesale prices of paddy and maximum wholesale and retail prices of rice in each district have been notified. A copy of the Order has been placed on the table of the Legislative Secretariat Library.

Collection of firewood from forests (Kanyakumari district)

33 *Q.*—Sri A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether permission was granted to the poor people to collect firewood from the forests of Kanyakumari district;

(*b*) whether any resolution was sent by the Kanyakumari District Development Council; and

(c) if so, what action was taken?

A.—(*a*) Yes. Free permits for the collection of firewood from the forests of Kanyakumari and Tirunelveli districts were issued up to 31st March 1964. The system was discontinued beyond 31st March 1964 in the interests of forest conservancy.

(*b*) & (*c*) Yes.

The Collector of Kanyakumari was informed that the request for lifting the ban imposed on the system of free removal of firewood and faggot wood from the Reserved Forest of Kanyakumari district cannot be complied with in the interest of forest conservancy.

[a] **Printed as Appendix on pages 6**

(அ) ஆம். கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள காடுகளிலிருந்து விறகுகளைப் பொறுக்குவதற்கு 1964-ம் வருடம் மார்ச் மாதம் 30-ம் தேதி வரையில் இலவச அனுமதி வழங்கப்பட்டிருந்தது. காடுகள் காக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு இந்த அனுமதி 1964-ம வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குப் பிறகு நிறுத்தப் பட்டது.

(இ), (உ) : ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ரிசர்வ் காட்டிலிருந்து விறகையும் சுள்ளிகளையும் இலவசமாகப் பொறுக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிவிடும்படி முறையீடு செய்துகொள்ளப் பட்டது. காடுகள் காக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு அதை அனுமதிக்க இயலாதென்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

Bus stand for Nagercoil

34 *Q*.—SRI A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the lands necessary for construction of a bus stand in Nagercoil Municipality have been acquired;

(*b*) when will the work be completed?

A.—(*a*) Not yet.

(*b*) The work is likely to be completed in 1965–66.

(அ) இன்னும் முடிவுறவில்லை.

(இ) இவ்வேலை 1965–66-ல் முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Fishing boats—Supply in Kanyakumari district

35 *Q*.—SRI A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the number of mechanised fishing boats supplied to the Fishermen in Kanyakumari district; and

(*b*) whether the Government have taken steps for the repair of the boats plying in that area ?

***A*.—**

(*a*)

Year.	Boat.
1957—58	2
1958—59	6
1959—60	12
1960—61	1
1961—62	17
1962—63	13
1963—64	18
1964—65 (up to date)	9
Total ..	78

(*b*) A maintenance-*cum*-service Centre under the charges of a Foreman has been started at Colachel from December, 1963 for repairing the boats plying in the area.

6th March 1965]

(அ)

ஆண்டு.		படகு.
1957-58		2
1958–59		6
1959–60		12
1960–61		1
1961–62		17
1962–63		13
1963 64		18
1964–65 (நாளது தேதிவரை)		9
	மொத்தம் ..	78

(இ) அப் பகுதியில் செல்லும் படகுகளைப் பழுது பார்ப்பதற்காக, 1963 டிசம்பர் மாதத்திலிருந்து கொளச்சல் பகுதியில் போர்மன் ஒருவரின் பொறுப்பில் படகுப் பராமரிப்புப் பழுது பார்த்தல் நிலையம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

36 *Q.*—Sri A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the number of applications received from Kanyakumari district in 1963 and in 1964 for the supply of fishing boats; and

(*b*) whether all the applicants belong to the fishing community?

A.—(*a*) From 1st January 1963 to 31st December 1963—187 applications.

From 1st January 1964 to 30th September 1964—3 applications.

(*b*) Yes.

(அ) 1-1-1963-லிருந்து 31-12-1963 வரை 187 மனுக்கள்.
1-1-1964-லிருந்து 30-9-1964 வரை 3 மனுக்கள்.

(இ) ஆம்.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம்

37 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964 ஆகஸ்ட் மாதம் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்தார்களா ?

(இ) ஒவ்வொருவருக்கும் ஆன சுற்றுப்பயண செலவு எவ்வளவு ?

பதில்—

(அ) கனம் சுகாதார அமைச்சரைத் தவிர மற்ற எல்லா அமைச்சர்களும் சுற்றுப்பயணம் செய்தார்கள்.

(*a*) All the Honourable Ministers except the Honourable Minister for Public Health undertook tours.

[6th March 1965

(இ) ஒவ்வொருவருக்கும் ஆன சுற்றுப்பயண செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	தொகை ரூ. பை.
கனம் முதல் அமைச்சர்	766.00
கனம் தொழில் அமைச்சர்	838.27
கனம் உள்துறை அமைச்சர்	1,300.84
கனம் உணவு அமைச்சர்	1,547.37
கனம் சுகாதார அமைச்சர்	(சுற்றுப் பயணம் மேற்கொள்ள வில்லை)
கனம் கூட்டுறவு அமைச்சர்	1,498.36
கனம் விளம்பரத்துறை அமைச்சர்	826.00
கனம் ஸ்தலஆட்சித்துறை அமைச்சர்	1,622.88

(*b*) The amount of Travelling Allowance and Daily Allowance drawn by each Minister is furnished below :—

	Amount of Travelling Allowance and Daily Allowance drawn. RS.	P.
Honourable Chief Minister	766	00
Honourable Minister for Industries	838	27
Honourable Minister for Home	1,300	84
Honourable Minister for Food	1,547	37
Honourable Minister for Public Health ..	(Did not undertake any tour)	
Honourable Minister for Co-operation	1,498	36
Honourable Minister for Information and Publicity.	826	00
Honourable Minister for Local Administration ..	1,622	88

தக்காவி கடன், புதுக்கோட்டை.

38 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை டிவிஷனில் கொடுக்கப்பட்ட தக்காவி கடன்கள் தனிப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்காது சலுகை கொடுக்கப்பட்டு உள்ளதா ?

A.—No.

இல்லை.

கொத்தமங்கலம் கிராமம்—வெள்ளத் தடுப்புச் சுவர்

39 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை பகுதியில் ஓடும் வெள்ளாற்றின் இடது கரையில் உள்ள கொத்தமங்கலம் கிராமத்தில் மழைக்காலங்களில் ஆற்று தண்ணீர் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்து அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்ட உத்தேசமுண்டா ?

A.—No

இல்லை.

6th March 1965]

ஆரணியில் தீயணைக்கும் நிலையம்

40 கேள்வி.—**திரு. சி. கோதண்டராம பாகவதர்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரணி நகராட்சி எல்லைக்குள் "தீயணைக்கும் படை நிலையம்" ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

பதில்—

ஆம், ஆனால் தற்பொழுது ப்ரையாரிட்டி லிஸ்டின்படி (Priority list) வேறு சில இடங்களில் முதலில் தீயணைக்கும் நிலையங்கள் ஏற்படுத்திய பிறகுதான் ஆரணியில் ஒரு நிலையத்தை ஏற்படுத்தவேண்டும். இதனால் இதை ஏற்படுத்த இன்னும் கொஞ்ச காலம் செல்லும்.

Yes. But it will take some time as according to the existing priority list, Fire Stations have to be opened in some other places before a fire station is opened at Arni.

[*Note.*— **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—LANGUAGE OF ANSWERS TO QUESTIONS.

திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, கேள்விகளை தமிழில் கொடுத்தால் தமிழில் பதில் சொல்ல வேண்டும், ஆங்கிலத்தில் கொடுத்தால் ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமென்று இங்கு முன்பே அமைச்சர்கள் இசைந்திருக்கிறார்கள். ஆனால் இன்று பெரும்பாலான கேள்விகள் தமிழில் இருந்தும் ஆங்கிலத்தில் தான் பதில்கள் வருவதாக இருந்தது. ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. கேட்டவர்கள் என்ன மொழியில் கேட்டார்களோ அந்த மொழியில் பதில் வந்தால்தான் பயனுடையதாக இருக்கும். ஆதலினால் அந்த முறையைக் கைக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம் பக்தவத்சலம்: விடைகள் தமிழில் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தமிழில் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு என் சக அமைச்சர்கள் ஆங்கிலத்தில் பதில் சொன்னாலும் கூட தமிழிலும் கூற வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: நேரம் அதிகமாவதால் தமிழிலே கேட்டால் தமிழிலே சொல்லிவிட்டால் நல்லது.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont.*

MR. SPEAKER : I would like to know whether hon. Member Sri Ramachandra Rayar wants to continue his speech.

SRI A. RAMACHANDRA RAYAR : Yes, Sir.

MR. SPEAKER : From the note given to me, I find that the hon. Member had spoken for nine minutes yesterday. So, the hon. Member may speak for three minutes today.

[6th March 1965

*திரு. அ. ராமச்சந்திர ராயர் : கனம் சபாநாயகர் அவர்களே, தொடர்ந்து இன்றும் சிறிது பேசுவதற்கு அனுமதி கொடுத்தது பற்றி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் அண்ணாமலை யூனிவர்சிட்டியில் நடந்த சம்பவத்தைப் பற்றி கூறினேன். அதில் பாதிக்கப்பட்ட ரெஜிஸ்ட்ரார் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சுமார் 35,000 ரூபாய் அளவிற்குள்ள சொத்தை இழந்திருக்கிறார்கள், என்று தெரிகிறது. அதற்கு அண்ணாமலை யூனிவர்சிட்டி பண்டிலிருந்து நஷ்டயீடாக கொடுக்க வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எட்டாம் தேதி கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் திறக்கப்பட போகின்றன. பெற்றோர்களும், தாய்மார்களும் மாணவர்களுக்கு என்ன கட்டளை இட்டிருக்கிறார்களோ அப்படிச் செய்து நன்கு படித்து அவர்கள் தங்கள் வீடுகளுக்கும் நாட்டுக்கும் நன்மையைச் செய்ய வேண்டும். பெற்றோர்கள் என்ன கஷ்டப்பட்டு தங்களை படிக்க அனுப்பு கிறார்கள் என்பதை மாணவர்கள் மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் திட்டம் எதுவானாலும் அதை முதல் அமைச்சர் அவர் களிடம் கொடுத்து விட்டு அவர்கள் அதற்கு பொறுப்பாளியாக இருந்து எல்லாவற்றையும் தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கை கொண்டு பிள்ளைகள் நன்கு படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எதிர்கட்சி அங்கத்தினர்கள் திராவிட முன் னேற்றக் கழகத்தினராக இருந்தாலும்சரி, கம்யூனிஸ்ட்களாக இருந்தாலும்சரி, சுதந்திராக் கட்சியினராானாலும்சரி மாணவர் களை அரசியலில் ஈடுபடுத்தக் கூடாது என்று தெரிந்திருந்தும் தாங்கள் ஆட்சி பீடத்தில் வந்து விடலாம் என்ற கருத்தைச் சொல்லி மாணவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்து அவர்களுக்கு நன்றி செலுத்துவதா என்று கேட்கிறேன். அடுத்தபடியாக என் தொகுதி பற்றி இரண்டு வார்த்தைகள்கூற விரும்புகிறேன். விவ சாயத்திற்காக இந்த பட்ஜெட்டில் நீண்ட திட்டம் செய்யப்பட் டிருக்கிறது. விவசாயத்திற்கு முக்கியமானது உரம். உரம் கூட்டுறவு முறையில் விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு கிராமத் திற்கும் லாரிகளில் கொண்டு போய் அடுக்கி வைத்து யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு வேண்டுமோ, அவற்றை சப்ளை செய்தால் நன்றாகயிருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறேன். அடுத்தபடி யாக, விவசாயம் உள்ள இடங்களில் ஆங்காங்கு பூச்சித்தொல்லை யினால் பயிர் அழிகிறது. ஆகவே, ஹெலிக்காப்டர் மூலமாக ஒரு நிலம் விடாமல் பூச்சி மருந்து தெளிப்பது உசிதம். ஏழை விவ சாயிகள் பணம் இல்லாமல் மருந்து தெளிக்காமல் விட்டு விடுகிறார் கள். அதனால் தெளித்த பின்னாலும் நோய் பரவி விடுகிறது. இதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக எங்கள் பகுதியில் லோயர் அணைக் கட்டிலிருந்து வருகின்ற தண்ணீர், வீராணத்து ஏரியில் வந்து அதிலிருந்து சேத்தியா தோப்பு அணைக்கட்டில் வந்து சேர்ந்து பாசனத்திற்கு உதவுகிறது. சென்ற வருஷம் கார் நெல் சாகுபடி செய்யும்போது கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. காரணம், வீராணத்து ஏரியிலேயே வந்து விழுகின்ற

6th March 1965] [திரு. அ. ராமச்சந்திர ராயர்]

தண்ணீர் எல்லாம் காய்ச்சலினால் உறிஞ்சப்பட்டு விடுகிறது. ஆகையால் நேராக கால்வாய் மூலமாக தண்ணீர் கொண்டு வந்து சேத்தியா தோப்பு அணைக்கட்டில் விடுவதாக இருந்தால் தண்ணீர் தட்டுப்பாடு இராது. அதன் மூலம் பாசனமும் நல்ல முறையில் நடைபெறும். ஆகவே இதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். புவனகிரி வெள்ளாற்றின் கரையோரமாக பாலத்தின் கிழக்கே ரிவெர்ட்மெண்ட் போடப்பட்டிருக்கிறது. இப்போது அது சேதமடைந்து நகரத்திற்குள் வெள்ளக் காலத்தில் தண்ணீர் புகுந்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இதையும் நல்லமுறையில் சீர் படுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில் குடிதண்ணீர் வசதி போதுமான அளவு இல்லாத காரணத்தால் காலரா போன்ற தொத்து நோய்கள் பரவுகின்றன. புவனகிரி பிர்க்கா, பரங்கிப் பேட்டை பகுதி முதலிய இடங்களில் எல்லாம் குடிதண்ணீர் திட்டத்தை கொண்டு வந்தால் காலரா நோய் பரவுவதை தடுக்க முடியும். முக்கியமாக நல்ல முறையில் குடிதண்ணீர் இல்லாது இருப்பது தான் காலரா போன்ற நோய்கள் வருவதற்கு காரணமாக இருக்கின்றன. ஆகவே குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு:** மன்ற நாயகமே, நமது நாடு சுயஆட்சி அடைந்து காங்கிரஸ் அரசாங்கம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதைப் பற்றி எல்லாம் பாராட்டி பேசுவோர்கள் யாரும் இல்லை. இவ்வளவு தூரம் வெற்றிகரமாக நிறைவேற்றியதன் காரணமாக இந்த நாட்டில் மக்கள் சுபீட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தாலும் உணராதது போல் இருந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள். நாட்டில் இன்றைக்கு காவேரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருனைநதி போன்ற பெரிய நதிகளில் மட்டுமல்ல, சிற்றாறுகளில் கூட அணைகளைக்கட்டி போதிய அளவு பாசன வசதி செய்து கொடுத்து அதன் பலனாக ஏற்படும் நன்மைகளைப்பற்றி யாரும் பேசுவதில்லை. கரம்பாக கிடந்த இடங்களில் எல்லாம் பாசன வசதி செய்வதற்காக கிணறுகள் வெட்டுவதற்கு மான்யம் கொடுத்து, அதன் மூலம் நீர்பாசனம் அபிவிருத்தி அடைந்து, மக்கள் சுபீட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்வதற்கு யாருக்கும் நேரமில்லை. தங்கள் தொகுதியிலுள்ள குறைகளை சொல்வதற்கு விருப்பம் இருந்தாலும்கூட, நாட்டில் ஏற்பட்டிருக்கும் குறைகளைப்பற்றி பேசுவதுதான் மிகவும் அவசியம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த முறையில் எல்லோரும் அதைப்பற்றி பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. சட்டசபையிலும்சரி, வெளியிலும் சரி பேசப்படுகின்ற பேச்சுக்களானது இன்னும் ஒரு சரியான சூழ் நிலைக்கு முடிவு கட்டப்படவில்லை என்பதைத்தான்

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [6th March 1965

காட்டுகிறது. நாட்டில் இந்தி புகுத்தப்பட்டது என்று சொன்னார்கள். 1963-ம் வருஷத்திலேயே இந்த நாட்டின் பொதுமொழி இந்தி மொழியாகும் என்று சொல்லப்பட்டது. சுயஆட்சி வாங்கு முன்னும், வாங்கும்போது கூட, இந்தி இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக இருக்கும் என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்காக பல ஸ்தாபனங்கள் மூலமாகவும் பல அமைப்புகள் மூலமாகவும் இந்தியை பரப்புவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு வந்தோம். முக்கியமான நகரங்களில் எல்லாம் இந்தி பிரச்சார சபையின் மூலமாக இந்தியைக் கற்றுக்கொடுப்பதற்கு வழி செய்துகொண்டிருந்தோம். இந்த நிலையில் சென்ற 1963-ம் வருடத்தில் இந்தியைப்பற்றி பேசும் போது, இந்தி பேசாத இடங்களிலுள்ள மக்கள் இந்தியைக் கற்றுக் கொள்வதற்கு சில காலமாகும் என்கின்ற காரணத்தால், இந்தி பேசாத இடத்திலுள்ள மக்கள் தாங்களாகவே எப்போது இந்தி வேண்டும் என்று கேட்கிறார்களோ அது வரை இந்திமொழி புகுத்தப்பட மாட்டாது என்று காலஞ்சென்ற பிரதமர் வாக்குறுதி கொடுத்துவிட்டு சென்றார்கள். இவையெல்லாம் சட்டசபையில் இருக்கும் நமக்கும் வெளியிலுள்ள தலைவர்களுக்கும் தெரியாத விஷயங்கள் அல்ல. இந்தி ஆட்சி மொழியாக ஆகப்போகிறது என்று சொன்னபோதும்கூட, நேருஜி வாக்குறுதி இருக்கும்போது, இந்தி பேசாத இடங்களிலுள்ள மக்களுக்கு என்ன ஆபத்து வந்துவிடப்போகிறது என்று நம்முடைய தலைவர்களும் சும்மா இருந்தார்கள். ஆனால் இந்தியை ஆட்சிமொழியாக வைத்த உடனேயே இங்கே பெரும் கிளர்ச்சி ஏற்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். இந்தி இருக்கத்தான் போகிறது, இந்தி இந்த நாட்டினுடைய ஆட்சி மொழி என்று முன்பே நாம் தீர்மானித்துவிட்டோம். ஆனால் அதை அமல் செய்வதில் மக்களுக்கு இடைஞ்சல் இருந்தால் அதில் எந்த விதமான திணிப்பும் இராது என்று நேருஜி வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அந்த உறுதிமொழியை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் வாளாவிருந்தோம். இந்தி ஆட்சிமொழியாக்கப்பட்டது, ஆனால் அதில் நேருஜியின் உறுதி மொழி கவனிக்கப்படாமல் இல்லை என்பதை நாங்கள் அறிவோம். இந்த நிலைமைகளை எல்லாம் தெரிந்த பெரியோர்கள், மூன்று வருஷம் அல்ல 30 வருடங்களாக தெரிந்து கொண்டிருக்கும் பெரியோர்கள் இதைப் பற்றி புரியாதவர்கள் போல், இந்தி இந்த நாட்டில் திணிக்கப்படுகிறது, தமிழ் மக்களுக்கு எங்கே பந்தோபஸ்து இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். நேருஜி சொன்ன உறுதி மொழி சட்டபூர்வமாக ஆக்கப்படவேண்டும் என்று யாரும் கிளர்ச்சி செய்யவில்லை. தமிழ் மொழிக்கு ஆபத்து, தமிழ் கெட்டுவிடுகிறது என்று சொல்லப்பட்டதே தவிர நேருஜியின் உறுதி மொழியில் யாருக்கும் அக்கறை இருக்கவில்லை. இந்தி புகுத்தப்படுகிறது என்று சொன்னதன் காரணமாக, எங்கு பார்த்தாலும் ‘இந்தி ஒழிக தமிழ் வாழ்க’ என்று எழுதிப்போடக்கூடிய நிலைமையைப் தலைவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். அது எந்தத் தலைவர்களாக இருந்தாலும் நமக்கு கவலை இல்லை. இந்தி புகுத்தப்படுகிறது, அதை எதிர்க்கவேண்டும் என்று மகாநாடு ஒன்றை

6th March 1965] *[திரு. எஸ். ராமசாமி நாயுடு]*

கூட்டி அதில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எந்த விதத்திலாவது இதை எதிர்க்க வேண்டும் என்று அறைகூவல் விட்டார்கள் தலைவர்கள். அதை ஏற்றுக்கொண்டு தான் பலர் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியை செய்தார்கள். விஷயங்களை எல்லாம் நன்றாக புரிந்து கொண்டிருந்தாலும் கூட, புரியாதவர்கள் போல் இருந்துகொண்டு, இந்தி புகுத்தப்படுகிறது என்று சொல்லி, அதை எதிர்க்கவேண்டும், ஆகவே அடையாளமாக எதிர்ப்பை தெரிவிப்பதற்கு ஒரு நாளோடு எதிர்ப்பை தெரிவித்து விட்டு நிற்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. ஜனவரி 25, 26 இந்த தேதிகளில் எல்லாம் கிளர்ச்சி நடந்தது. மாணவர்கள் ஒரு நாள் பள்ளிக்கு போகாமல் இருக்கவேண்டும் என்று நினைத்து ஒரு நாள் பள்ளிக்குப் போகாமல் இருந்தார்கள். 26-ம் தேதியை துக்கநாளாக கொண்டாட வேண்டும் என்று சில பெரியோர்கள் சொன்னார்கள். மாணவர்களும் துக்கநாளாக கொண்டாட வேண்டும் என்று சொன்னதற்கிணங்க பள்ளிக்குப் போகாமல் துக்கநாளைக் கொண்டாடினார்கள். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. பின்னால் அன்றைய தினத்திலிருந்து துராக்கிருதச் செயல்கள் நடந்தன. 27-ம் தேதி முதல் கட்டுக்கடங்கியிருந்த நிலைமை பின்னாலும் பெப்ருவரி 8-ம் தேதி, 10-ம் தேதி இந்த நாட்களில் எல்லாம் மாணவர்கள் கிளர்ச்சி செய்யப் போகிறோம் என்று சொல்லி பல துராக்கிருதச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். முதலில் கிளர்ச்சியை தூண்டிவிட்ட தலைவர்களில், முன்னால் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்ததே தப்பிதமாகப் போய்விட்டது, ஆகவே இனிமேல் கிளர்ச்சி வேண்டாம் என்று சொன்னவர் யாரும் இல்லை. அவர்கள் போட்ட திட்டமானது வெறும் வாய்ப் போராட்டமாக மட்டும் இல்லை, ரயிலை நிறுத்துவது போன்ற காரியங்களில் ஈடுபடப் போகிறோம் என்பதை தெளிவாக சொல்லியிருந்தார்கள். அந்த நேரத்திலாவது இம்மாதிரியான காரியங்களில் ஈடுபடவேண்டாம் என்று சொன்னவர்கள் யாரும் இல்லை. அவர்கள் போன போக்கில் விட்டுவிட்டார்கள். வாய்ப் பேச்சு போராட்டமாக இருந்தது அத்துமீறி, பின்னால் துராக்கிருத நிலைக்கு வருகிறார்கள் என்பதை தெரிந்தும் கூட உங்களால் அடக்கி விட முடிகிறதா பார்ப்போம் என்று சும்மா இருந்தது போல் எல்லோரும் இருந்துவிட்டார்கள். அராஜக செயல்கள், ரயில்களை நிறுத்துவது, தண்டவாளங்களை பெயர்ப்பது போன்ற காரியங்கள் எல்லாம் நடைபெற்றன. செய்வதையெல்லாம் செய்யட்டும், பார்ப்போம், மாணவர்களுடைய சக்தி எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை தெரிந்துகொள்வோம் என்று நினைத்துத்தான் சும்மா இருந்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. ஒரு நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கம் நடந்து கொண்டிருக்கும்போது, மத்திய அரசாங்கத்தோடு பேசி நல்லமுறையில் தீர்வைக் காணலாம் என்று சொல்லாமல் இம்மாதிரி கிளர்ச்சிகளை எல்லாம் பார்த்துவிட்டு வாளாவிருந்த நாம் எல்லோரும் இந்த நாட்டில் வாழ தகுதியற்றவர்கள் என்று தான் எண்ணுகிறேன். ரயில்கள் நிறுத்தப்பட்டன, ரயில்கள் கொளுத்தப்பட்டன. தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. மக்கள் போகின்ற வாகன ஊர்திகள்

எல்லாம் எரிக்கப்பட்டன. எங்கு பார்த்தாலும் ரகளையாக இருந்தது. ஒருக்கால் இந்தத் தலைவர்கள் எல்லாம், மாணவர்களை வைத்துக்கொண்டே இந்த ரகளையையும் நடத்திவிட்டு, மாணவர்களை ஆதாரமாக வைத்து நடத்தப்பட்ட கிளர்ச்சியின் பலன் இந்த சர்க்காரை எந்த அளவுக்கு பாதிக்கிறது என்பதை பார்ப்போம் என்று இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை. அராஜகக் கிளர்ச்சிபோல் இருந்தது என்று ஸ்ரீமான் கணேசன் அவர்கள்
10-00 a.m. சொன்னார்கள். ராஜ்யத்தைக் கவிழ்க்கச் செய்த கிளர்ச்சிபோல் இருந்தது என்று அவர்கள் சூசகமாகச் சொன்னார்கள். உண்மையிலேயே நாளை ஒரு போராட்டம் செய்தால் எவ்வளவு தூரம் அடக்கக் கூடும் என்று பரீட்சை பார்க்கச் செய்த ஒரு சூழ்ச்சி என்றுதான் நான் இதைச் சொல்லுவேன். ஏனென்றால் எடுத்துக் கொண்ட காரியங்களெல்லாம், செய்த வேலைகளெல்லாம், ராஜ்யத்திற்கு விரோதமாகவும், சர்க்காருக்கு விரோதமாகவும், சட்டத்திற்கு விரோதமாகவும் அமைந்திருந்தன என்று நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். தெளிவாகத் திட்டமிட்டு ரயிலைக் கவிழ்க்கப் போகிறோம் என்று சொன்னபோது கூட ஒன்றும் பேசாமல் இருந்தோமானால் நாமும் அதற்குத் துணையாக இருந்தோம் என்றுதான் அர்த்தம். அப்படியே செய்தார்கள். அப்போது சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. சர்க்கார் அராஜகக் கிளர்ச்சிகளை, சட்ட விரோதச் செயல்களைத் தடுக்கக் கடமைபட்டிருக்கிறது என்று நாம் நன்றாக அறிவோம். கடமை பட்டபடியே நடந்த கிளர்ச்சிகளைத் தடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது. ஆனால் சட்டம் நிலைநிறுத்தப்படவேண்டுமென்று சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு முன்னாலேயே சட்டத்திற்கு விரோதமான, ராஜ்யத்திற்கு விரோதமான, அரசாங்கத்திற்கு விரோதமான பல காரியங்களை மாணவர்கள் செய்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. மிகத் தவறான காரியங்களை மாணவர்களுடன் சேர்ந்து மற்றவர்கள் செய்தார்கள் என்று சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறார்கள் பலர். ஏனென்று கேட்டால் அவர்களுடன் சேர்ந்து பலர் செய்தார்கள் என்று சொன்னால் அப்படிப்பட்ட பலர் யார், ஏவி விட்டவர்கள் யார் என்ற கேள்வி வரும் என்று நினைக்கிறார்கள். பல பேர்களைக் கொலை செய்தார்கள், மாணவர்களைச் சுட்டார்கள் என்று சொன்னார்கள். மாணவர்கள் செய்ததாகச் சொல்லி பல பேர்களைக் கொலை செய்து, பின்னால் கிளர்ச்சி அதிகமாகப் போய் விட்டது என்று சொல்லி பெரியவர்கள் தடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். 'உங்கள் கிளர்ச்சி நன்றாக இருந்தது, மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டு விட்டார்கள், அரசாங்கம் தெரிந்துகொண்டு விட்டது, கிளர்ச்சி இப்போது தவறான பாதையில் போகிறது, இனிமேல் நிறுத்திவிடவேண்டும்' என்று சொன்னார்கள். அதே நேரத்தில் மாணவர்கள் செய்யவில்லை, மாணவர்கள் இப்படிப் பட்ட கெட்ட காரியங்களைச் செய்யமாட்டார்கள், அவர்கள் பின்னால் வாழப்பிறந்தவர்கள்' என்று எண்ணி, 'மாணவர்கள் மட்டும் இந்தக் காரியங்களைச் செய்யவில்லை, மாணவர்களைத் தூண்டிவிட்டு, அவர்களோடு சேர்ந்து, அவர்களுக்கு தெரியாமலேயே பல துராக்ருதச் செயல்களை மற்றவர்கள் செய்தார்கள்'

6th March 1965] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

என்று சர்க்கார் சொன்னால் 'நாங்கள் நம்ப மாட்டோம், இல்லவே இல்லை' என்று சொல்லுகிறார்கள். மாணவர்களுக்கு அவர்கள் மீது உள்ள நல்ல பெயர் நிலைக்கவேண்டுமென்று சர்க்கார் பிரயத்தனங் கள் செய்தாலும் எதிர்க்கட்சிக்காரர்கள் அதற்கு இடம் கொடாமல் 'இல்லை, இல்லை, மாணவர்கள்தான் செய்தார்கள்' என்று சொல்லு கிறார்கள். 'யாரும் செய்யவில்லை, முன்னேற்றக் கழகம் செய்ய வில்லை, எந்தக் கட்சியும் செய்யவில்லை, ரௌடிகள் செய்யவில்லை; மாணவர்கள்தான் செய்தார்கள். மாணவர்கள்தான் சப்-இன்ஸ் பெக்டர்களைக் கொளுத்தினார்கள், மாணவர்கள்தான் தண்டவாளத் தைப் பெயர்த்தார்கள், மாணவர்கள்தான் வாகன ஊர்திகளை எரித்தார்கள்' என்று சொல்லி மாணவர்களுக்கு மாசு கற்பிக்க எதிர்க்கட்சிக்காரர்கள் நினைக்கிறார்களே தவிர காங்கிரஸ் சர்க்கார் அல்ல, காங்கிரஸ் சர்க்காரை நடத்தி வரும் முதன் மந்திரி அல்ல என்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, எதிர்க்கட்சிக் காரர்கள் செய்தார்கள் என்றால் தங்களுக்கு மாசு கற்பிக் கிறார்கள் என்று அதை வன்மையாக எதிர்க்கிறார்கள். அந்த சமயத்தில் கிராமத்தில் நான் இருந்தேன். பல இடங்களில் துராக் கிருதச் செயல்கள் நடந்திருந்தாலும் என் வட்டத்தில், மேற்கு இராமநாதபுரம் பகுதியில் நடக்கவில்லை. ஆனால் ஒன்றிரண்டு இடங்களில் நடந்த காரியங்களை கவனித்தால் திராவிட முன்னேற்றக் கழகம் தான் இந்த இயக்கத்தை நடத்திச் சென்றது என்று நான் சொல்லுவேன். கிராமங்களில் தபால் ஆபீஸ்களை அழித்து, கொடிகளை இறக்கியது யார் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆகவே, கட்சி சார்பிலே கட்சியை இயக்கும் தலைவர்களுடைய ஆணை இருந்ததோ இல்லையோ, காரியம் என்னவோ திராவிட முன்னேற்றக் கழகத்தினால் தான் நடந்தது. மதுரையில் காங்கிரஸ் கமிட்டி ஆபீசை நொறுக்கி, கொடியை ஏற்றியபோது திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றினார்களே தவிர கருப்புக் கொடி அல்ல. இதை உணர்ந்து பார்க்கவேண்டும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் நெஞ்சை இரும்பாக ஆக்கிக்கொண் டார்கள் என்று சொன்னார்கள். நானும் அதே குற்றச்சாட்டைத் தான் சொல்லுகிறேன். ஆம், நெஞ்சை இரும்பாக ஆக்கிக் கொண்டார்கள். நெஞ்சம் இல்லாததாகச் செய்து கொண்டார் கள். இல்லாவிட்டால், ஆட்சியின் தலைவராக இருக்கும் நேரத்தில் குழந்தைகள் செய்கிறார்கள் என்று லேசாக நினைத்து, கடும் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக எல்லோரும் சேர்ந்து துராக்கிருதச் செயல்களைச் செய்யலாம் என்று எண்ணக்கூடிய நிலையை உண்டாக்கி விட்டிருப்பார்களா? நமது முதல் அமைச்சர் அவர்கள் வயது ஆனவர்கள், வயதின் காரணமாகப் பண்பட்ட மனது கொண்டவர்கள், அவர்கள் தான் இப்படி தெரியாமல் செய் கிறார்கள் என்றால், நாமும் கோபப்படக் கூடாது என்று நினைத் தார்கள். அதற்காக வயது ஆன காரணத்தினால் அவர் ஏமாந்து விடவில்லை. தான் பாடுபட்டு வளர்த்து சுதந்திரம் பெறப் பாடு பட்ட காங்கிரஸ் கட்சியின் கொடியையும், சர்க்கார் கொடியையும் எரித்த நேரத்தில் கூட தன் நெஞ்சத்தை இரும்பாக ஆக்கிக்

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [6th March 1965

கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார். போலீஸ்காரர்கள் சுட்டார்கள். 100 ரவுண்டு சுட்டார்கள் என்றால் எத்தனை பேர்கள் இறந்திருக்கவேண்டும்? போலீஸ்காரர்கள் சுட்டார்கள் என்று சொன்னால், ஏதோ தங்களுக்கு ஆபத்து வரும் நோத்தில், இனிமேல் அமைதியை காக்க முடியாது என்று சுட்டுக் காட்டினார்கள். அப்படிச் சுடப்பட்ட நேரத்தில் பல பேர்கள் செத்து இருக்கலாம். அந்த மாதிரி சாகவில்லை என்றால், சுடவேண்டுமென்று சுடவில்லை என்று புரிகிறது. சாமர்த்தியமாக இந்தச் செயலை அடக்கியதால், அடக்கி விட்டாரே என்ற ஆத்திரத்தில் நம் முதல் அமைச்சர் இரும்பு நெஞ்சம் உடையவர் என்று சொல்லுவது எந்த விதத்தில் பொருந்தும் என்று கேட்கிறேன். எங்கள் பால் நெஞ்சத்தை இரும்பாக ஆக்கிக் கொண்டார்கள், மற்றவர்கள் பால் நெஞ்சத்தைச் சரளமாக, மெழுகுபோல் வைத்திருந்தார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். செய்த காரியங்களைச் செய்துவிட்டு மற்றவர்கள் பால் குறை சொல்லிப் பயன் இல்லை. செய்த காரியங்களை தைரியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தந்தக் கட்சி, இந்த மாதிரி கெட்ட காரியங்கள் நடந்து விட்டன, எங்கள் கட்சிக்காரர்கள் செய்து விட்டார்கள் என்று தைரியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். காங்கிரஸ்காரர்கள் எங்கேயும் தப்புச் செய்யவில்லை. ஆட்சியில் இருப்பது காங்கிரஸ் சர்க்கார், காங்கிரஸ் சர்க்காரினால் செய்யப்படும் காரியங்கள் என்ற முறையில் நாங்கள் எதையும் செய்யவில்லை என்று நிச்சயமாகச் சொல்லிக்கொள்வேன். மதுரையில் காங்கிரசார் ஏதோ செய்தார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் முதலில் எதுவும் செய்யவில்லை. தேடி வந்து தாக்க வந்தபோது ஏதோ சில அசம்பாவிதங்கள் நடந்திருக்கும். நமது முதல் அமைச்சர் அவர்கள் நெஞ்சத்தை இரும்பாக ஆக்கிக் கொண்டார்கள். உணர்ச்சிவசப்படாமல் நிதானத்தோடு இருந்தார்கள். ஒன்றும் இல்லாத காரியத்திற்கு அதிகமாகப் பேச மாட்டார்கள். அடக்கமாக இருந்து அவருடைய கண்ணுக்கு எதிரிலேயே கொடியை இறக்கினாலும், ஆவேசமாகப் பேசினாலும், அதைப்பற்றி உணர்ச்சிவசப்படாமல் இருந்தார்.

"ஒறுக்கும் பதுகை விரலுடையாளன்
பொறுக்கும் பொறையே பொறை"

என்பது தமிழ்ப் பண்பு என்ற முறையில் அமைச்சர்கள் பேரில் தப்பு இல்லை என்று தமிழர்கள் உணர்வார்கள். நடந்த காரியங்களைப் பற்றி மனதில் சிந்தித்துப் பார்த்து, காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் அரசாங்கமும் இந்தக் கிளர்ச்சியில் எவ்வளவு நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டுமோ அவ்வளவு நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்துதான் இருக்கிறார்கள். இனிமேல் இந்த மாதிரி கிளர்ச்சி நடைபெறாமல் இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் சமீபத்தில் திருச்சியைச் சேர்ந்த மாணவர்கள் இன்னும் ஏதோ செய்வதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நல்ல முறையில் கவனித்து இனிமேலும் இந்த மாதிரியான காரியங்களுக்கு இடம் கொடாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

6th March 1965]

MR. SPEAKER : There are 30 hon. Members to speak within 3½ hours. This is for the information of hon. Members. 10-00 a.m.

* திரு. இராம. அரங்கண்ணல் : மன்றத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே என்றும் கண்டிராத அளவுக்கு நடந்து முடிந்திருக்கிற கோர சம்பவங்களைப் பற்றி இங்கே இருக்கிற நாமெல்லாம் வெட்கித் தலைகுனியவேண்டியவர்களாக இருக்கிறோம். பொது வாழ்க்கையிலே ஈடுபட்டவர்களும், பொது வாழ்க்கை புனிதமாக விளங்க வேண்டும் என்று கருதுகிறவர்களும், அற வாழ்வு மிளிரவேண்டும் என்று எண்ணுகிறவர்களும் சமீபத்தில் நடந்து முடிந்த வன்முறைகளை கண்டிக்காமல் இருக்க முடியாது. இந்த வன்முறைகளுக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று இங்கே சில நண்பர்கள், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சகோதரர்கள், குற்றம் சாட்டிப் பேசினார்கள். அவர்களுடைய குற்றச் சாட்டை அவர்களுடன் பணியாற்றுகிற இங்கேயுள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில நண்பர்களே மறுத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. நல்ல மனிதருடைய நல்ல மகளாக விளங்குபவரும், தமிழகத்தில் இவ்வளவு ரகளைகள் நடந்த நேரத்தில் எந்த மத்திய அமைச்சரும் இங்கே வருவதற்கு தயங்கிய நேரத்தில், துணிந்து இங்கே வந்தவருமான மத்திய அமைச்சர் திரு. இந்திரா காந்தி அவர்களே எடுத்துச் சொன்னார்கள், "தெற்கே நடைபெற்ற சம்பவங்களுக்கு எந்தக் கட்சியையும் நாம் குற்றம் சொல்ல முடியாது, 'மாஸ் அப்ஸர்ஜ்'— மக்களாகவே எழுந்த ஒரு கிளர்ச்சியைப் போல நான் தமிழகத்தில் கண்டேன்" என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். பீஹாரில் பேசிய நேரத்தில். நடந்து முடிந்த சம்பவங்களை எந்த அரசியல் கட்சியும் வரவேற்கும் என்று யாரும் கருத முடியாது. இங்கே நடைபெற்ற சம்பவங்கள் நீண்டுகொண்டு போய், பலாத்கார சம்பவங்கள் நடைபெற்று, துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்று, நாம் எதிர்பாராத அளவுக்கு, நெஞ்சு வேகக்கூடிய அளவுக்கு நடந்து கொண்டிருந்த பலாத்கார நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்தது என்று சொன்னால், இந்திய உள்துறை அமைச்சர் நந்தா சொன்னது போல நம்முடைய முதல் அமைச்சர் பாறையைப்போல் இருந்த காரணத்தினால் அல்ல, நம்முடைய அரசாங்கம் ராணுவத்தை அழைத்த காரணத்தினால் அல்ல. ஆங்காங்கு துப்பாக்கியைத் திறந்து விட்ட காரணத்தினால் அல்ல, தமிழகத்தில் நாம் எல்லோரும் விரும்பிய அமைதி ஏற்பட்டதற்குக் காரணம் இரண்டு நல்ல மனிதர்கள். அவர்கள் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் தான். மத்திய அரசாங்க அமைச்சர்களாக இருக்கிறவர்கள் தான். நான் திரு. சுப்பிரமணியம் அவர்களேயும், திரு. ஓ. வி. அழகேசன் அவர்களையும் தான் குறிப்பிடுகிறேன். அந்தப் பெரிய மனிதர்கள் இந்த சிக்கலான நேரத்தில், தமிழகம் தவித்துக்கொண்டிருந்த நேரத்தில் அவர்களுடைய பதவியை துச்சமாக கருதி, அதை விட்டு விலக அவர்கள் முன் வந்தார்கள். அந்தப் பெரிய உள்ளத்தினரை நான் பாராட்டுகிறேன். சாதாரணமாக பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்தாலும் கூட,

[திரு. இராம. அரங்கண்ணல்] [6th March 1965

ஏதாவது ஒரு நெருக்கடியான நேரத்தில் பதவியை விட்டு விலகி வாருங்கள் என்று சொன்னால், அதை விட்டு விலகிவருவதற்குக் கூட முடியாத அளவுக்கு பதவி ஆசை வளர்ந்திருக்கிற இந்த நேரத்தில், உயர்ந்த இடத்தில், கருத்துக்களை உருவாக்கக் கூடிய இடத்திலே இருந்த அந்தப் பெரிய மனிதர்கள் தங்கள் பதவியை விட்டு விலகிய நேரத்தில்தான் தமிழகத்திற்கு ஒரு ஆறுதல் கிடைத்தது. நம்முடைய எண்ணங்களை எடுத்துச் சொல்லுகிறவர்கள், நமக்காக வாதாடக்கூடியவர்கள் இன்னும் இருக்கிறார்கள், யாரும் இல்லாமல் போய்விடவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்ட பிறகு, இங்கே அமைதி மலர்வதற்கான நிலைமை ஏற்பட்டது. எங்களுக்கு இருந்த வருத்தம் எல்லாம் அந்தப் பெருமையை நம்முடைய மாநிலத்தினுடைய முதல் அமைச்சர் அவர்கள் தட்டிக் கொண்டு போய் இருக்கலாமே என்பதுதான். நம் மாநில அமைச்சர் எழுந்து நின்று துணிந்து எங்களுடைய தமிழகத்துக் கோரிக்கைகளை டெல்லி அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமிழகத்தில் இருக்கிற நாங்கள் ராஜிநாமா செய்வோம்—செய்திருக்க வேண்டியதில்லை—வாயால் அவர்கள் சொல்லியிருந்தால் கூட, தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டிருக்க முடியும். நம்முடைய பிரச்னைகளைப்பற்றி வாதாட யார் இருக்கிறார்கள் என்கின்ற அளவுக்குத் திகைத்து நின்ற நேரத்தில் நல்ல வழிகாட்டிய அந்தப் பெரிய மனிதர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்கு முன்பு பேசிய சிவகாசி உறுப்பினர் அவர்கள் வன்முறையை யார் கண்டித்தார்கள் என்று கேட்டார். வன்முறைகளை எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கண்டித்ததை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் 20-ம் தேதி விடுத்த அறிக்கையிலே சொன்னார் :—

"வன்முறைச் செயல்களுக்குக் காரணம் அடக்குமுறையின் கோரத் தாண்டவம் என்று கூறக்கூடும்"—இங்கே கூட பேசப்பட்டது. அடக்குமுறை உந்தி உந்திக் கிளம்பியதன் காரணமாக மாணவர்களுடைய ஆத்திரம் கிளரப்பட்டது. மாணவர்களுடைய ஆத்திரம் கிளரப்பட்ட காரணத்தினாலே, கலவரங்கள் நடைபெற்றன, ரயில் பெட்டிகள் நாசமாக்கப்பட்டன, ரயில்வே ஸ்டேஷன் நாசமாக்கப்பட்டது என்று எடுத்துக் கூறப்பட்டது. அது ஒரு காரணமாக இருக்கலாமே ஒழிய, அது நியாயமானது என்று யாரும் சொல்ல முடியாது. அதையும் எங்கள் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"வன்முறைச் செயல்களுக்குக் காரணம் அடக்குமுறையின் கோரத்தாண்டவம் என்று கூறக்கூடும். காரணம் சொல்லலாம். ஆனால், காரணம் சொல்லுவது பரிகாரம் ஆகிவிடாது. இதன் விளைவுகள் சரியன்றோ, நடக்கவேண்டியது தானென்றோ விடும் பார், ஒப்பார். சொத்துக்களுக்குச் சேதம், பொதுப்பணியாளர்களான போலீஸ் துறையினர் மாண்டது, நினைக்கவே நெஞ்சு கலக்கும் நிகழ்ச்சிகளாகும். இப்படிப்பட்ட வன்செயல்களை தி.மு.க. ஒருபோதும் நினைத்தும் பார்க்காது. கண்டிக்கவும் தயங்

6th March 1965] *[திரு. இராம. அரங்கண்ணல்]*

காது. இப்படிப்பட்ட செயல்கள் சமூகத்தையே நாசமாக்கும். நாம் உருவாக்க நினைக்கும் அன்பான அரசியல் வழியைப் அடைக்கும்" என்று எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே விவாதத்தை தொடங்கிவைத்துப் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் நண்பர் வீரபாகு அவர்கள் அழகான வார்த்தைகளை நம்முடைய கவனத் திற்குக் கொண்டு வந்தார்கள். மறைந்த மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் "Democracy is our way of life" கூறியதைக் குறிப்பிட்டு நாம் எல்லோரும் ஏற்று அந்த ஜனநாய கத்தை வளர்ப்பதற்கு பாடுபடவேண்டும் என்று எடுத்துச் சொன் னார்கள். நான் இங்கே பணிவுடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன். ஜனநாயகத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். நான், இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறவர், செயலாளரும் துணைத் தலைவராகவும் இருக்கிறவர், இன்னும் இங்கே வீற்றிருக்கிற நண்பர்களிலே பலர், திராவிடக் கழகத்திலிருந்து, எங்களுடைய மூல ஸ்தானத்தி லிருந்து, அதிலே ஜனநாயகம் இல்லாத காரணத்தினாலே தான் வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தோம். அன்றைய தினத்திலிருந்து எங்களுடைய அமைப்பில் நாங்கள் ஜனநாயகத்தைக் கட்டிக் காத்துவரவேண்டும் என்று மிகவும் ஆசைப்படுகிறோம். எவ்வளவோ அமளிகள் பல சட்டமன்றங் களில் நடைபெற்ற போதிலும், தமிழகத்தில் ஜனநாயக பாரம் பரியத்தை உருவாக்க வேண்டும், அதற்கு நாமெல்லாம் பாடுபட வேண்டும் என்று முனைந்திருக்கிறோம். ஆகையினால் எங்களுடைய ஜனநாயக உணர்ச்சியை யாரும் குறை சொல்லவேண்டாம். எங்களையெல்லாம் ஜனநாயகப் பண்புள்ளவர்களாக ஆக்கு வதற்கு, எங்களுக்கு நல்ல வழி காட்டுவதற்கு, இந்த நாட்டில் முதியவர்களாக, பெரியவர்களாக விளங்குபவர்கள் எங்களுக்கு அந்த நல்ல வழியை காட்டாமல் இருக்கிறார்கள் என்று வருந்த வேண்டியிருக்கிறதே தவிர, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கலவர நிகழ்ச்சிகளில் ஏராளமான தவறுதல் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தவறுகளையெல்லாம் இப்பொழுது நாம் உட்கார்ந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். எல்லாக் கட்சிகளும் வன் முறைகளைக் கண்டிக்கின்றன. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். நம் முடைய முதல் அமைச்சர் அவர்கள் நேற்றுக் குறிப்பிட்டார்கள். குண்டர்கள் சட்டம் கொண்டுவருவது பற்றி யோசித்துக் கொண் டிருப்பதாகச் சொன்னார்கள். சட்டத்தினால் மட்டும் சன்மார்க் கத்தை நாம் நிலைநாட்டிவிட முடியாது. குண்டர்கள் சட்டம் என்று சொல்லி, அதன் காரணமாக நாம் விரும்பாதவர்களை ஆளும் வட்டாரத்தில் இருப்பவர்கள் விரும்பாதவர்களைப் பிடிப்பதற்கு அந்தச் சட்டம் பயன்படுமே ஒழிய, சட்டத்தினால் மட்டும் நாட்டில் நீதியையும், நியாயத்தையும், நல்ல உள்ளத்தையும்

ஏற்படுத்திவிட முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் கூட இங்கே ரௌடிகள் பற்றி பேசினோம். ரௌடிகள் என்றால் யார்? அவர்கள் இங்கிலாந்திலிருந்து வந்தவர்களா? அமெரிக்காவிலிருந்து அழைத்துவரப்பட்டவர்களா? அவர்களும் இந்த நாட்டிலிருக்கிற தமிழர்கள் தான். அவர்களுடைய தீய உள்ளத்தை மாற்றுவதற்கு, அவர்களுடைய நல்ல உள்ளங்களை வளர்ப்பதற்கு நம்மால் ஆன காரியங்களை நாம் செய்யவேண்டும். இந்த நாட்டில் ரௌடிகள் இருக்கிறார்கள், திருடர்கள் இருக்கிறார்கள், கள்ளக்கடத்தல்காரர்கள் இருக்கிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு யார் காரணம் என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் எது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதையும் அலட்சியப்படுத்திவிடக் கூடாது. அதற்கான மூல காரணங்களையெல்லாம் நாம் அத்தனை எதிர்க்கட்சியினரும் சேர்ந்து ஆற அமர உட்கார்ந்து, அவைகளையெல்லாம் ஆலோசித்து, தக்கமுடிவுகளைக் காணவேண்டும். அந்த வகையில் பார்க்கிற நேரத்தில், இந்திய துணை கண்டத்தின் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் விடுத்த ஆலோசனை மிகவும் நல்ல ஆலோசனை என்று படுகிறது. ஒரு கமிஷன் நியமிக்கவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் கமிஷன் நீதிபதிகள் அடங்கிய கமிஷனாக நியமிக்கப்பட்டு, அந்தக் கமிஷனில் அங்கத்தினராக எல்லா எதிர்க்கட்சியினரும் பொறுப்பு ஏற்க வேண்டும். இப்படி எதிர்காலத்தில் வன்முறைகள் ஏற்படுகிறபொழுது அந்த வன்முறைகளை எதிர்த்து போராடுவதற்கு, தீய சக்திகளை, ரௌடிகளை எதிர்த்துப் போராடுவதற்கு எல்லா கட்சியினரும் ஒன்றுபட வேண்டும் என்ற வகையில் நல்ல ஆலோசனைகள் பெறுவதற்கு அந்தக் கமிஷனை நியமிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில், வெறுப்பை மட்டும் வளர்த்து கழகத்தை வளர்க்கவேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. காங்கிரஸ் பெரியவர்களுக்கு பல தடவை நாங்கள் மரியாதை செய்திருக்கிறோம். இன்றைய தினம் சென்னை மாநகரத்தின் வீதியில் சென்றால், நிமிர்ந்து நிற்கின்ற திரு. காமராஜ் சிலை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் காலத்தில் தான் கார்ப்பரேஷனால் திறக்கப்பட்டது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

பெரியார் சத்தியமூர்த்தி அவர்களுடைய சிலையை கார்ப்பரேஷன் கட்டடத்தில் வைத்தோம். அப்படிச் சிலைகளைத் திறந்து வைத்திருக்கிறோம் என்றால், அது காங்கிரஸ்காரர்கள் மீது இருக்கும் மரியாதையால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு, சுப்பிரமணிய சிவா, வ.உ.சி., திரு.வி.க., இவர்களுடைய படங்களையும் கார்ப்பரேஷன் கட்டடத்தில் திறந்து வைத்திருக்கிறோம். சந்தர்ப்பம் கிடைக்குமானால், நமது முதல் அமைச்சர் முதல், மற்ற காங்கிரஸ்காரர்கள் எல்லோருடைய தியாகத்தையும், நல்ல எண்ணத்தையும் பாராட்டத் தவறியதில்லை. அரசாங்கமும் ஆளும் கட்சியும் என்ன செய்கிறது? அதுவும் கடந்த இரண்டு வருஷ காலமாக எங்களிடத்திலிருந்து

6th March 1965] [திரு. இராம. அரங்கண்ணல்]

வந்த ஓரிருவர் அங்கே வந்ததிலிருந்து ஆளும் தரப்பினருடைய நடவடிக்கைகளும் செயல்களும் உருமாறிவருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைத் தடுக்க ஆளும் கட்சியினர் எல்லா விதமான முயற்சிகளும் எடுத்து வருகிறார்கள். இது ஜனநாயகத்தில் செய்யப் படவேண்டிய காரியமா? எதாவது தேர்தல் என்றால், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை எப்படி நசுக்கலாம், இவர்களை எப்படி அடக்கலாம் என்றுதான் குறிப்பாக கடந்த இரண்டு வருஷ காலமாக, இன்னும் சொல்லப் போனால் தலைவர் காமராஜர் முதல் அமைச்சர் பதவியிலிருந்து சென்றதிலிருந்து, நமது கனம் முதல் அமைச்சர், முதல் அமைச்சர் பதவி ஏற்றநாளிலிருந்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. ஒருக்கால் இவரைப் பயன் படுத்துகிறார்களோ, என்னவோ நமக்குத் தெரியாது. இந்த ஈராண்டு காலமாக என்னென்ன நடந்து வந்திருக்கிறது என்பதனை இங்கே அமர்ந்திருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடவேண்டாம், இந்த நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சக்தியாக வேரூன்றி இருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஐந்து லட்சம் அங்கத்தினர்களைக் கொண்டது, ஐயாயிரம் கிளைகளைக் கொண்டு இருக்கும் ஒரு கழகம் சாதாரணமானது அல்ல. அதிலே உள்ளவர்கள் ஒரு கொள்கைக்காக உயிரையே தியாகம் செய்யவும் தயங்க மாட்டார்கள், தங்களையே மாய்த்துக் கொள்ளக் கூடிய சின்னச்சாமி, அரங்கநாதன், சிவலிங்கம் போன்றவர்கள் இருக்கிறார்கள் என்றால், எங்கள் இயக்கத்தின் சக்தியையும் எண்ணங்களையும் கண்டு சிரிப்பதிலோ, அலட்சியப் படுத்துவதிலோ எந்தப் பயனும் இல்லை. இந்த இயக்கத்தைத் தடுக்க முடியாது. எங்களை அலட்சியப்படுத்துவது சரியாகாது. முதல் அமைச்சர் எங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய வயதையும், எங்களுடைய வயதையும் சராசரியாக ஒப்பிட்டுப் பார்த்தால், நாங்கள் சிறியவர்கள், மரியாதை தர வேண்டியதில்லை. ஆனாலும், அன்பான மொழி, முக்கியமான பிரச்சினைகளில் எங்களையும் கலந்துக் கொள்ளும் ஒரு தனித் தன்மை இவற்றைக் கையாள வேண்டாமா? சிறியவர்களாகிய எங்களை அவர்கள் வளர்த்து விட வேண்டாமா? ஜனநாயகத்தில் ஊன்றி எதிர்காலத்தில் நல்ல பணிகள் செய்யத் தக்க அளவுக்கு வளர்க்க வேண்டாமா? அவர்களிடத்தில் அடிக்க மட்டுந்தான் கரத்திலே வலிவு இருக்கிறதா? அணைக்க அந்தக் கரத்துக்கு ஆற்றலில்லையா? இதயத்தில் நல்ல எண்ணம் இருக்கக் கூடாதா?

நடந்திருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி, எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் என்ன சொன்னோம்? ஜனவரி 26-ம் தேதி, துக்கநாள் கொண்டாடப் போகிறோம் என்று சொன்னோம். அதைத் தெளிவாகச் சொன்னோம். எங்களுடைய தீர்மானம் என்ன?" பட்டியலில் குறிக்கப்பட்டவர்கள் மட்டுந்தான் இதில் கலந்துக் கொள்வார்கள். வேறு எங்காவது கூட்டம் நடத்த

[திரு. இராம. அரங்கண்ணல்] [6th March 1965

வேண்டுமென்றால், தலைமைக் கழகத்தின் உத்தரவு பெற்றுத்தான் செய்ய வேண்டும். தமிழகத்தில் கிளைகளான 5000 இடங்களிலும் கூட்டங்கள் நடத்த வேண்டியதில்லை. அடையாளமாக வீடு களில் கழகக் கொடிகளைக் கட்டினால் போதும். சட்டைகளிலே கருப்புச் சின்னங்களை அணிந்தால் போதும்" என்றுதானே அறிஞர் அண்ணா தெரிவித்திருந்தார்கள்? அதுதானே எங்கள் கழக செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானம்? அந்த அளவுக்குக் கூட இந்த நாட்டிலே எங்களுக்கு உரிமை இல்லையா? என்னென்ன சொன்னார்கள் காங்கிரஸ்காரர்கள்? கனம் சபாநாயகர் அவர் களே, தங்கள் அனுமதியின் பேரில் சிலவற்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஜனவரி 17-ம் தேதி ரூளேயில், காளத்தி யப்ப முதலித் தெருவில் நடந்த கூட்டத்தில், முதல் அமைச்சரும் அங்கே இருந்தார்கள். என்னுடைய பழையநாள் நண்பர் கண்ணதாசன் அவர்கள் என்ன சொன்னார்கள்? "திராவிட முன் னேற்றக் கழகத்தினர் கறுப்புக் கொடியும், கறுப்புத் தோரணமும் கட்டினால் அவை நெருப்பில் எரியும். தடுத்தால் தடுப்பவரின் கை மூறியும்" என்று சொன்னார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : On a point of order, Sir. If any specific reference is made to a person who is not in the House and who is not able to deny it, specific reference to that person should not be made. All that can be said is that some member said it outside. It is not proper to make any reference to a person who is not here to deny it.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, ஜனநாயகத் தைக் காப்பதில் நமது தொழில் அமைச்சர் காட்டும் இந்தப் பண்பைப் பாராட்டி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் அதே கூட்டத்தில் நம் முதல் அமைச்சரும் பேசியிருக்கிறார்கள். "தேசத் துரோகிகளுக்கு மக்கள் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்!" என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் தலைவர் என்ன சொன்னார்கள்? "துக்க நாள் அன்று கண்டனக் கூட்டங் களில் கலந்து கொள்ளும் தோழர்கள், தலைமைக் கழகத்தின் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்றோர் மட்டுமே கண்டனக் கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டும். கறுப்பு சின்னத்தை அடையாளமாக சட்டையில் அணிந்தும், தமது வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றியும் துக்கத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டும். கலந்து கொள்வோர் முன்கூட்டி கைது செய்யப் பட்டால், கலந்து கொள்வதாக இருந்த கூட்டம் நடைபெற்ற தாகவும், கண்டனம் தெரிவித்துக் கொள்ளப் பட்டதாகவும் கருத வேண்டும். மேற்கொண்டு எதுவும் செய்யக் கூடாது." இதுதான் எங்கள் அண்ணா குறிப்பிட்டிருந்தது. ஆகவே, இந்த துக்க நாளை நடத்துவதில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கொஞ்சம் கூட அமைதிக்குப் பங்கம் வராமல், எவ்வளவு ஜாக்கி ரதையாக இருந்து இருக்கிறோம் என்பதை இங்கே அமர்ந்திருக் கிறவர்கள் அறிவார்கள். முன்பு இதே சட்ட மன்றத்தில், ஜனவரி

6th March 1965] [திரு. இராம. அரங்கண்ணல்]

21-ம் தேதி, சுதந்திராக் கட்சி அங்கத்தினர் திரு. சீமைச்சாமி கேட்டார்கள்: "அமைதிக்குப் பங்கமின்றி துக்கதினம் கொண்டாடுவோம் என்று தி.மு.க. அறிவித்துள்ளபோது, அரசாங்க நடவடிக்கைக்கு என்ன அவசியம்?" என்று. நமது மரியாதைக்குரிய முதல் அமைச்சர், "அமைதியாகக் கொண்டாடினாலும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பதிலளித்தார்கள். நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமா? இந்த அரசாங்கத்தில் சேக்கிழார் பரம்பரையைச் சேர்ந்த முதல் அமைச்சர் இருக்கும்போது அவர் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வரவேண்டுமா? திரு. சீமைச்சாமி அவர்கள் மீண்டும் கேட்டார்கள், "அமைதியாகத் துக்கம் கொண்டாடுவோம் என்று தி.மு.க. அறிவித்த பிறகும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பழிவாங்கும் எண்ணமல்லவா?" என்று. அதற்கும் நமது முதல் அமைச்சர் என்ன சொன்னார்கள்? "திருமண வீட்டிற்கு போகிறவன் அந்த வீட்டில் திருமணம் நடைபெறும்போது எதையோ நினைத்துக் கொண்டு அழுகிறேன் என்றாலும் விடமாட்டார்கள். வீட்டைவிட்டு அப்புறப் படுத்துவார்கள்." என்று சொன்னார்கள். அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகள் என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 22-ம் தேதி இந்த மாநகரத்தைச் சேர்ந்த போலீஸ் கமிஷனர் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை, வீடுகளிலே கொடிகளைக் கட்டி துக்க தினத்தைக் கொண்டாடும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று அறிக்கை விட்டார்கள். அதற்கு மேற்பட்டு என்ன நடந்தது? முதலிலே நாங்கள் 100 இடங்களில் கூட்டம் போடுவதாக இருந்தோம். குழப்பம் வந்து எங்களால் செயல் படமுடியாமல் போய்விடும் என்று போலீஸ் அதிகாரி எங்களிடத்தில் தெரிவித்தார். அப்படியானால், 100 இடங்களில் நடத்துவதற்குப் பதிலாக, அடையாளமாக, ஒரு இடத்தில் நடத்தினால் போதும் என்று அந்த அளவுக்கு இறங்கி வந்தோம். அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது என்றுதான் அந்த அளவுக்கு இறங்கி வந்தோம். ஆனால், என்ன நடந்தது? என்ன செய்தாலும் இவர்களைத் தண்டிக்க வேண்டும், கண்டிக்க வேண்டும், அடக்கவேண்டும் என்று திட்டமிட்டார்கள். தேசிய காங்கிரஸ் அணியினர் கூட்டம் 25-ம் தேதி நடைபெற்றது. என்ன என்ன தீர்மானங்கள் செய்தார்கள் என்று கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒன்று முதல் 40 வட்ட தேசிய அணியினர் அறிவகம் முன்பு மறியல் செய்வார்கள் என்று தீர்மானம் செய்தார்கள். 41 முதல் 75 வட்ட தேசிய அணியினர் அன்பகம் முன்பு மறியல் செய்வார்கள் என்றும், 75 முதல் 100 வட்ட தேசிய அணியினர் முரசொலி முன்பு மறியல் செய்வார்கள் என்றும், சென்னை ஏழாவது வட்டத்தில் கறுப்புக் கொடியைக் கண்டால் கொளுத்துவது, இதற்காகத் தீவட்டி ஊர்வலம் நடத்துவது என்றும் முடிவு செய்தார்கள். இந்தக் காரியங்கள் நடந்ததே, அதில் எத்தனை காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியில் கண்ணியவான்கள் இருக்கிறார்கள். மறுக்க வில்லை. ஆனால், உண்மையிலேயே உணர்ச்சி வசப்படுப

வர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அவர்களும் மறுக்க முடியாது. அப்படி எத்தனை காங்கிரஸ்காரர்களை கைது செய்திருக்கிறார்கள்? அன்றையதினம் எங்களுடைய தலைவரின் இல்லத்திலும், இன்னும் அமைப்புச் செயலாளர் திரு. நடராசன் அவர்களுடைய இல்லத்திலும், மற்றும் 'முரசொலி' அலுவலகத்திலும், எல்லா இடங்களிலும் வீட்டின் மீது ஏறி அங்கெல்லாம் இருந்த கறுப்புக் கொடியை அவிழ்த்திருக்கிறார்கள். சபாநாயகர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியைப் பெற்று நான் இந்தச் சபை முன்னால் இந்தப் புகைப் படங்களைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். (புகைப்படங்கள் காட்டப்பட்டன). நம்முடைய கனம் உறுப்பினர் திரு. இராசேந்திரன் அவர்களுடைய இல்லத்திலே பறந்து கொண்டிருந்த கருப்புக் கொடியைப் போலீசார் ஏறி—படத்தைப் பாருங்கள், போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்—இழுத்து எறிந்திருக்கிறார்கள். இது தனிப்பட்டவர்களுடைய உரிமையைப் பறிக்கின்ற சங்கதியாகும். அதற்கு நம்முடைய அரசாங்கம் ஒப்புதல் அளித்ததா? போலீஸ்காரர்கள் தனிப்பட்டவர்களுடைய வீடுகளிலே ஏறி எதை வேண்டுமானாலும் செய்யலாமா?

MR. SPEAKER: Is the matter not before the Court?

SRI RAMA. ARANGANNAL: Yes, Sir.

MR. SPEAKER: Therefore, the hon. Member should not refer to it.

திரு. இராம. அரங்கண்ணல்: தங்கள் தீர்ப்பை ஏற்கிறேன்! அப்படிச் செய்யலாமா? தனிப்பட்டவர்களுக்கு இங்கே வாழ்வதற்கு உரிமை கிடையாதா? நான் குற்றம் சாட்ட விரும்புவது போலீஸ் இலாகாவினரை எப்படியோ பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வளர்ச்சியைத் தடுக்கவேண்டும் என்கிற எண்ணம் நம்முடைய. . .

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். கனம் அங்கத்தினர் காட்டிய படத்தில் போலீஸ்காரர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் படத்திலே இருப்பவர் உண்மையான போலீஸ்காரரா? அல்லது நடிகர் வீட்டிலே. . . .

கனம் சபாநாயகர்: இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்களுடைய நடிப்பினை நான் நன்றாக உணருவேன்.

நான் சொல்ல வருவதெல்லாம், ஒரு கட்சியின் வளர்ச்சியைத் தடுத்து இன்னொரு கட்சியை அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்—இந்த நாட்டிலே வாழ வைத்துவிட முடியாது. பரஸ்பரம் ஒத்துக்கொண்டுதான் வாழவேண்டும். கடுமை வேண்டாம்; கனிவு காட்டுங்கள். பகைமை வேண்டாம்; பாசம் காட்டுங்கள்,

6th March 1965] [திரு. இராம. அரங்கண்ணல்]

வேகம் வேண்டாம்; விவேகம் காட்டுங்கள். நாமெல்லோரும் சகோதரர்கள். ஆனால், கொள்கைகளினாலே நாம் பிரிந்திருக்கலாம். அந்தக் கொள்கைகளுக்காக நாம் வாதாடுவோம்.

சந்தர்ப்பம் கிடைத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிடலாமா என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதற்கு உதாரணமாகச் சொல்கிறேன். நானும், அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் ஏழு பேர்களும் நுங்கம்பாக்கம் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தங்கியிருக்கிறோம். கூட்டத்திற்குச் செல்லும் நேரத்தில் எங்கள் மீது திராவகத்தை ஊற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் வந்தது. இதெல்லாம் நல்லதா? என்று முதல் அமைச்சர் அவர்கள் உண்மையாகவே எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட வன்செயல்களால் யாருக்கு என்ன லாபம்? எப்படி இந்த நாட்டை நாம் நல்ல முறையில் நடத்தப் போகிறோம்? நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் இது தான். திராவிட முன்னேற்றக் கழகம் மரியாதை காட்டி, மரியாதையான எதிர்க் கட்சியாக வாழ விரும்புகிறது. வன்செயல்கள் எங்கெங்கே தலை காட்டினாலும் அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு—எங்களைப் பொறுத்த வரையில் சொல்லிக் கொள்வேன்—அழைப்பீர்களானால் உயிரையே கொடுப்பதற்கும் நாங்கள் தயாராயிருக்கிறோம். இவ்வளவு ரகளை நடந்த பிறகு, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித்தலைவர்களை அழைத்து, "எல்லோருமாகச் சேர்ந்து இந்த ரகளையை நிறுத்துவதற்குப் பாடுபடுவோம்" என்று அறிக்கை விட்டிருக்கக் கூடாதா? அங்கங்கே இருக்கின்ற எங்களுடைய கழகத்தைச் சார்ந்த நாங்கள் ஒத்துழைப்பு தருவதற்கு முன்வந்திருக்க மாட்டோமா? எங்களுக்கே பயங்கரமாக அல்லவா இருந்தது. எங்காவது போனால், "நீயும் வா" என்று சொல்லி, எங்களையும் எங்காவது கொண்டுபோய் அடைத்துவிடுவார்களோ என்ற நிலைமை தானே இருந்தது? முன்பு என் மீது வழக்குப் போட்டார்களே, அதுபோல் செய்துவிடுவார்களோ என்ற நிலைமை தானே இருந்தது? * * * எந்த குற்றமும் செய்யாமல் வன்முறைகள் வளர்ந்து கொண்டே சென்ற நேரத்தில் தனது 'முரசொலி' பத்திரிகையில் 'அமைதி மலர்ந்திடுக' என்று எழுதி, அமைதியைக் கடைப்பிடிக்கும்படியாகப் பத்திரிகையில் நாட்டுக்கு வேண்டுகோள் விடுத்த எங்களுடைய துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் இன்றையதினம் டிஃபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸ்களின் கீழ் பிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டிருக்கிறார். நான் கடைசியாகச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER: All these matters are before the Court. If the hon. member says one thing. Members on the opposite side will say something contra. It is not as if I am against the hon. Member. If he says something and the hon. Minister says another thing, it may influence the Officers who are investigating the case.

*** Expunged as ordered by the chair.

[திரு. இராம. அரங்கண்ணல்] [6th March 1965

திரு. இராம. அரங்கண்ணல்: நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம் இது தான். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னுடைய மயிலாப்பூர்த் தொதியைச் சார்ந்தவர்கள். தள்ளாத வயதில் பொல்லாத கெட்ட பெயருக்கு அவர் ஆளானதற்கு உள்ள படியே—நான் மட்டுமல்ல—அவருக்கு வேண்டியவர்கள், அவருடைய நண்பர்கள் கூட என்னிடத்திலே வருத்தம் தெரிவித்திருக்கின்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்—மற்ற உறுப்பினர்கள் சொல்வது போல் அல்ல, சொந்த முறையிலே சொல்லிக்கொள்வேன்—முதியோரான நீங்கள் உங்கள் மீது ஏற்பட்டிருக்கிற இந்தப் பழியைப் போக்கிக்கொள்ளுவதற்கு எஞ்சியிருக்கிற காலங்களிலே, இந்த நாட்டுக்கு நல்ல அன்பு வழி மலர்வதற்காகப் பாடுபடும் வகையில் நீங்கள் பாடுபடவேண்டும். இந்தப் பதவி சாதாரணப் பதவி, உங்களுக்கு. எவ்வளவோ ஆண்டு காலம் இந்தப் பதவியை வகித்திருக்கிறீர்கள். நம்முடைய மயிலாப்பூர் தொகுதியில் திருவள்ளுவர் கோயில் காலணாக் காசு கூட வருமானம் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது. அந்தக் கோயிலிலே நீங்கள் வந்து அமர்ந்து, வினோபா அடிகளைப் போல, திருவள்ளுவருக்குப் பாடுபடுகின்ற விதத்தில் எல்லாக் கட்சிகளையும் இட்டுச் செல்கின்ற ஒரு பெரிய மனிதராக வாழ்கின்ற வகையிலே, உங்களுடைய எஞ்சிய காலத்தைச் செலவிடலாம். வேண்டாம் இந்தப் பதவி, உங்களுக்கு. உங்களை ஆட்டிப்படைக்கின்றவர்களுக்கு எந்த விதமான கெட்ட பெயரும் சேரப் போவதில்லை, எல்லாம் உங்களுக்குத் தான் வரும் என்பதை முதல் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. எம். தண்டாயுதபாணி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1965-66-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் வருவாய் 163 கோடியே 63 லட்சம் ரூபாயாகவும், செலவு 170 கோடியே 60 லட்சம் ரூபாயாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. துண்டு விழுகின்ற ஒரு பகுதி 6 கோடியே 97 லட்சம் ரூபாய். இந்தத் துண்டு விழுகின்ற பகுதி ஏன் என்று பரிசிலனை செய்தால், அகவிலைப்படியை உயர்த்திக் கொடுத்திருப்பதன் அடிப்படையிலே தான் இந்தத் தொகை துண்டு விழுகிறது. இதற்குப் புது வரி போடாது இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பது உண்மையிலேயே பாராட்டுதற்குரியது ஆகும்.

குறிப்பாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தருவாயில் நாம் இன்று இருக்கிறோம். கடந்த காலத்தில் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளைச் சிறப்பாக, குறிப்பிட்ட காலத்திற்கு உள்ளாகவே நாம் செயல்படுத்தியிருக்கிறோம் என்பது இந்த நிதி நிலை அறிக்கையிலுள்ள விவரங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. திட்டம் வெற்றி பெறுவதற்கு நாட்டில் அமைதியான சூழ்நிலை இருப்பது மிக மிக அவசியம் ஆகும். குறிப்பாக,

6th March 1965] [திரு. எம். தண்டாயுதபாணி]

கடந்த காலத்தில் சென்னை மாநிலத்தில் நடந்த கலவரங்கள், போராட்டங்கள் எந்த அடிப்படையிலே நடந்தன என்பதை நாம் நன்ருகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவின் ஒற்றுமைக் காக இந்தியை நாம் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நியதிக்கு நாம் உட்பட்டோம். எந்த ஒற்றுமைக்காக இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள யத்தனித்தோமோ 10-30 a.m. அதற்கு நேர் மாருன நிலையை இன்று அது ஏற்படுத்தியிருக்கிறது. அதற்குக் காரணம், மொழிக் கொள்கையை நாம் கட்சிப் பிரச்சினை யாக்கி, கட்சிக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கிருேம். குறிப்பாக, டில்லியில், ராஜ்ய சபையில் திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகையில், 'இந்தியை நாங்கள் வெறுக்கவில்லை, பழிக்கவில்லை, ஆனல் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அதைத் திணிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று தெளிவாகக் கூறியிருக்கிருர். அதே தலைவர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே கூட மும் மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு அதிலே கையொப்ப மிட்டிருக்கிருர். குறிப்பாக இந்தி திணிப்பைப் பொறுத்த வரையில் ஆளும கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இந்தி பேசாத பகுதியில் இருக்கிற மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்பதில் நாம் எல்லோரும் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாகத் தான் இருக்கிருேம். இந்த நிலையை வற்புறுத்தி சட்டமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக நமது முதல் அமைச்சர் அவர்கள் நல்ல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். அதன் பயனுக அந்த நிலை சட்டமாகவே நிறைவேற்றப்படும் என்று அறிந்து சந்தோஷப்படுகிருேம். ஆகவே வீணுக இந்த மொழிப் பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலுடையதாக ஆக்கக் கூடாது. எப்படியாவது இந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் முயற்சி செய்வதாகத் தோன்று கிறது. எனக்கு முன்பாகப் பேசிய திரு. அரங்கண்ணல் அவர்கள் தங்கள் கட்சிக்கும், இந்தக் கிளர்ச்சிக்கும் சம்பந்தம் இல்லை என்பதாக, தங்கள் கட்சித் தலைவர் விட்ட அறிக்கைகளை எல்லாம் இங்கே படித்துக் காட்டினுர்கள். அந்த அறிக்கைகள் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் பயன்பட்டு இருக்க லாம். குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மொழிப் பிரச்சினை சம்பந்தமான இந்தக் கலவரங்களை அதிகமாகத் தூண்டிவிட்டவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் தான் என்ருல் மிகையாகாது. அவர்களுடைய கட்சித் தலைவர் விடுத்த அறிக் கைகளை எல்லாம் அவர்கள் எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டார் கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்களது அறிக்கைகளை அவர்கள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வில்லை. தங்களுக்கும் இந்தக் கலவரங்களுக்கும் சம்பந்தம் கிடையாது என்று இவர்கள் கூறலாம். அறிக்கைகள் விடலாம். ஆனல் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வேண்டு மென்றே இவர்கள் மாணவர்களை முன்னேவிட்டு இந்தக் கிளர்ச்சி களைத் தூண்டிவிட்டார்கள் என்பதை என்னுல் சொல்ல முடியும். தனி மனிதர் சுதந்திரத்தைப் பற்றி சுதந்திராக் கட்சித் தலைவர்

அவர்கள் நன்ருகக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கும் சுதந்திராக் கட்சிக்காரர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சாலேயில் போகிற ஒவ்வொரு காரையும் நிறுத்தி, இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்காக பண உதவி பெற்று, 'இந்தி ஒழிக' என்று காருக்குள் இருக்கிறவர்களே சொல்லச் சொல்லி, அந்தக் காரின் மேல் இந்தி ஒழிப்பு சுலோகங்களே எழுதி அனுப்பினர்கள் என்ருல் இது தனி மனிதர் சுதந்திரத்தை மதித்து நடக்கின்ற செயலா என்று கேட்க விரும்புகிறேன். பன்னிரண்டு, பதின்மூன்று, பதினன்காம் தேதி எல்லாம் இந்த நாட்டில் சட்டம், நீதி ஒழுங்கு எல்லாம் இருக்கின்றதா என்றே சந்தேகமாக ஆகிவிட்டது. இந்தக் கிளர்ச்சி மாணவர்களுடையது என்ற காரணத்தினுல்தான் பூரணமான, தேவையான பாதுகாப்பை பொது மக்களுக்குக் கொடுக்க இந்தச் சர்க்கார் தயங்கிற்று என்று சொன்னுல் அது மிகையாகாது. எவ்வளவுதான் அவர்கள் தங்கள் கட்சிக்கும், இந்தப் பிரச்சினேக்கும் சம்பந்தம் இல்லேயென்று கூறினுலும் மக்களுக்கு உண்மை நன்ருக தெளிவாகத் தெரியும், யார் பொறுப்பு என்று. இந்த நிலேயை நாம் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு பதினன்கு மொழியும் ஆட்சிமொழியாக வேண்டும் என்பதாக எல்லாம் பேசிக் கொண்டே போவதில் பயன் இல்லே. நமது சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிற முறையான செயல்களே இது பாதிக்கத்தான் செய்யும். அவ்வாறு செய்வது நல்லதல்ல என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்த நிதி நிலே அறிக்கையில் விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உணவு உற்பத்தியில் நம்முடைய பற்ருக்குறை நிலேயைப் போக்க கடந்த காலத்தில் திட்டமிட்டே நாம் செயல்பட்டு வந்திருக்கிருேம். விவசாய அபிவிருத்தி என்ருல் நீர்ப்பாசன வசதிதான் மிகவும் முக்கியமானது. குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் ஓரத்தநாடு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய பகுதிகளில் பாசன வசதியைப் பெருக்கக் கிணறுகள் வெட்ட வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அதற்காகக் குறிப்பிட்டுள்ள தொகையை இரண்டாயிரத்தில் இருந்து ஐயாயிரம் அளவில் உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருப்பதை நான் உண்மையில் வரவேற்கிறேன். உர விநியோகத்தைப் பற்றிய வரையில் தனிப்பட்டவர்களுக்குக்கூட லேசென்சு வழங்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு சிறிய கிராமத்திலும்கூட உர உற்பத்தியைப் பெருக்க வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது தஞ்சை ஜில்லாவில் உற்பத்தி செய்யப்படுகிற விதை நெல்லேப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிருர்கள். எக்கரா ஒன்றுக்கு ஏ.டி.டி. 27 நம்பர் விதை பயிரிட்டால் நாலாயிரம் பவுண்டு விளேச்சல் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்று தெளிவுபடுத்தியிருக்கிருர்கள். திரு. சீமைச்சாமி அவர்கள் பேசும்போது எப்படி உற்பத்தி செய்ய முடியும் என்பதாகக் குறிப்பிட்டார்கள் . . .

(Sri K. Cheemaichami was heard to say something, sitting.)

6th March 1965]

MR. SPEAKER : If the hon. Member Sri Cheemaichami wants to seek any clarification, he may rise up from his seat and ask any question.

திரு. கரு. சீமைச்சாமி: நான் நேற்று பேசுகின்றபோது ஏ.டி.டி. 20-ஆம் நம்பர் நெல்லை விளைவித்தால் அதனால் கிட்டுகின்ற இரண்டாயிரம் பவுண்டு எப்படி ஏக்கராவுக்கு நாலாயிரம் பவுண்டாக மாறும் என்பது தான்.

MR. SPEAKER : Unless it is a point of order or unless an unparliamentary expression has been used, a Member should not interrupt another Member.

திரு. எம். தண்டாயுதபாணி: ஏக்கராவுக்கு நாலாயிரம் பவுண்டு என்பது மிகமிக அதிகம் என்று அவர் எண்ணுவதாகத் தெரிகிறது. நாலாயிரம் பவுண்டு என்பது, 57 கிலோ கிராம் அல்லது 43 பட்டணம் படி கொண்ட மூட்டை 32 தான் வரும். வேறு வகையில் சொன்னால் மா ஒன்றுக்கு 30 கலம் ஆகும். ஏற்கனவேயே மா ஒன்றுக்கு 21 கலம் வரையில் எங்கள் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. பல நாட்கள் தொடர்ந்து ஆடுதுறையில் ஆராய்ச்சி செய்து வந்ததன் காரணமாக இந்த ஏ.டி.டி. 27-ம் நம்பர் விதை தயாரிக்கப்பட்டு இருக்கிறது. நிச்சயமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கும் அதிகமாகவே இந்த விதையை உபயோகப்படுத்தினால் உற்பத்தி செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வந்திருக்கிற திரு. சீமைச்சாமி அவர்கள் அமைச்சர் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களைத் தவறாகப் புரிந்து கொண்ட காரணத்தினால் ராஜிநாமாச் செய்வதாகக் கூறினார்கள். அதற்கு அவசியம் இல்லையென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு மூட்டை ரூபாய் 22.44 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால் உணவு தானியக் கார்ப்பரேஷன் தற்போது கொள்முதல் செய்ய முடியாத காரணத்தினால் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக டி.சி.எம்.எப். மூலமாக கொள்முதல் செய்கிறார்கள். தனிப்பட்டவர்கள் லாபம் இடையில் சம்பாதிக்கிறார்கள். விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை என்ற நோக்கத்தோடுதான் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொள்முதல் செய்கிறோம். அவர்கள் லாபம் சம்பாதிப்பதற்காக 21 ரூபாய்க்கு நெல் வாங்கி வருகிறார்கள். அதையே கலெக்டர்களுக்கு 22.44-க்கு விற்கிறார்கள். இந்த நிலை இருக்கக் கூடாது. ஒதுக்கப்படுகிற நெல்லை கொள்முதல் செய்ய யாருமே முன்வராத காரணத்தினால் இதுபோன்ற நிலை ஏற்பட்டது. ஆகவே வாங்குவதற்கு யாரும் முன்வராத நிலையில் தேங்கி இருக்கும் நெல்லை விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கு வாங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையை மிகவும் பாராட்டி, ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையை எடுத்துக் கொண்டால் நம்முடைய அரசாங்கம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை எவ்வளவு வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறது என்பதைக் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களில் இருந்தே தெரிந்துகொள்ளலாம். வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால் முன்பு 60 லட்சம் டன்னுக இருந்ததை இப்போது 65 லட்சம் டன்னுக உயர்த்த அமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருப்பதில் இருந்தே இத்துறைக்கு எவ்வளவு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை உணரலாம். அதே மாதிரி மின்சாரத்தை எடுத்துக் கொண்டாலும் தொழில் வளர்ச் சிக்கும், விவசாய வளர்ச்சிக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கக் கூடிய வகையில் 56 கோடி யூனிட்டாக இருந்த நம்முடைய உற்பத் தித்திறனை 150 கோடி யூனிட்டாக உயர்த்தியிருக்கிருேம் என்ருல் இது மிகமிக பெருமைபடத்தக்க சாதனையாகும். அதுபோல கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும் நாம் பல பல கல்லூரிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் பல கோடி ரூபாய் செல விட்டுத் திறந்திருக்கிருேம். இவ்வாண்டு இன்னும் 22 கல்லூரிகள் திறக்கப்படப்போகின்றன. அதில் 3 கல்லூரிகள் மாலை நேரக் கல்லூரிகள் என்பதை அறிகிறபோது மாணவ சமுதாயம் நமது முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியிலே அரசாங்க ஊழியர் களுக்கு, குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் முதல் மாதம் 1,200 ரூபாய் வாங்கக்கூடிய மேலதிகாரிகள் வரை எல்லோ ருக்கும் சம்பள உயர்வு கொடுத்திருப்பது அதாவது டி.ஏ. கொடுப் பதிலே ரூ. 5½ கோடி அதிகமாகச் செலவாளுலும் நான் அதை வரவேற்கிறேன். இது துண்டு விழுகின்ற ஒரு வரவு செலவுத் திட்டமாக இருந்தாலும்கூட புதுவரிகள் எதுவும் இல்லை என்று சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். நமது முதல மைச்சர் அவர்கள் அழகான ஒரு பட்ஜெட்டை சமர்ப்பித்தி ருக்கிருர்கள் என்றுதான் சொல்லவேண்டும். 1957-வது ஆண்டிலே தமிழ்நாட்டின் வருமானம் 56 கோடியாக இருந்தது இன்று, அதாவது 1964-65-ஆம் ஆண்டிலே 159 கோடி ரூபாயை எட்டிப் பிடிக்கும் அளவுக்கு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. இந்த நிதி நிலை அறிக்கையிலே கவனம் செலுத்தாமல் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி, அந்த அபாக்கிய நிலையைப்பற்றிப் பேச நேர்ந்தது துர்ப்பாக்கியம் என்று நினைக்கிறேன். அந்த முக்கியமான நிகழ்ச்சியைப் பார்க்கும்பொழுது அது எல்லோருக்கும் தெரியும். அப்படி நடப்பதற்குக் காரணம் என்ன? இன்றைக்கு நம்முடைய அத்தனை பேருடைய கவனமும் அதில் இருக்கிறது.

முதலிலே இந்தி நுழைகிறது, நுழைகிறது என்று அடுத்த நாளே வீட்டுக்குள்ளே நுழைந்துவிடுவதுபோல் சொன்னுர்கள். இதைப் படித்தவர்கள் சொன்னுல்கூட பரவாயில்லை. வயலிலே வேலை செய்கின்றவர்கள்கூட இந்தியைப் படிக்கவேண்டிய அவசியம்

6th March 1965] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

இல்லாதவர்களும்கூட பயந்துவிடும் அளவுக்கு இந்தி நுழைகிறது நாளைக்கே நுழைகிறது என்று பயத்தைக் கிளப்பினார்கள். மாணவர்கள் சமுதாயம், ஆசிரியர்கள் சமுதாயம், பெற்றோர்கள் சமுதாய[illegible] மற்றும் ஊரிலே இருக்கக்கூடிய எல்லோருடைய மனத்தி[illegible] பீதியைக் கிளப்பிவிட்டார்கள். இது திட்டமிட்டு நடத்த[illegible] ஒரு கிளர்ச்சியாகும். மாணவர்களுக்கு இந்தி படித்தால்தான் வேலைவாய்ப்புக்கிட்டும் என்று பயம்; மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு இந்தி படித்தால்தான் பிரமோஷன் கிடைக்கும், இல்லாவிட்டால் கிடைக்காதோ என்ற பயம்; பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் நன்றாகப் படித்து முன்னுக்கு வர முடியாமல் போய்விடுமோ என்ற பயம். இப்படியாக இந்தி நாளைக்கு நுழையப்போகிறது என்று சொல்லி மக்களிடையே பீதியைக் கிளப்பிவிட்டார்கள்.

பேதி கால், பீதி முக்கால் என்று சொல்வார்கள். அதாவது ஊரிலே ஒரு வியாதி வந்து விட்டால் வடக்குத் தெருவில் 20 பேர், தெற்குத் தெருவில் 40 அங்கு 20 பேர் செத்தார்கள் என்று சொல்லி ஆக மொத்தம் 100,200 பேர்கள் செத்துவிட்டார்கள் என்று பீதியைக் கிளப்புவார்கள். அதுபோலத்தான் இந்தப் பீதியைக் கிளப்பி விட்டார்கள். மாணவர்களையும் பெற்றோர்களையும் பீதியால் கிளப்பிவிட்டது மட்டுமல்லாமல், திட்டமிட்டுச் செய்யபட்டது என்பதையும் நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகம் என்ற அழியாத செல்வத்தை நமது பண்டித நேரு அவர்கள் நமக்காக விட்டுச் சென்றார். சீரும் சிறப்பும் கொழிக்கும் இந்த வளமான ஜனநாயகத்திலே, இந்த நாட்டை ஆளக்கூடிய தகுதியில்லாத எதிர்க் கட்சிகள், பலாத்காரத்தை ஏற்படுத்தி, கிளர்ச்சிகளை உண்டுபண்ணி ஜனநாயகத்தை அழிப்பதற்கு முயற்சி செய்தார்கள். 1967-ல் பதவிக்கு வருகிறோம், வருகிறோம் என்று சொல்பவர்கள் 1965-க்குள்ளே கொஞ்சம் சீக்கிரமாக அந்த ஆசை நடந்துவிட்டால் போதும் என்று நினைக்கிறார்கள். எனவே அப்படி நினைப்பவர்கள் மாணவர்களோடு சேர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். தலைவர்கள் எல்லாம் துணை செய்தார்கள். எத்தனை பெரும்பெரும் தலைவர்கள் 'விடாதீர்கள் பிடியுங்கள்! சபாஷ்! நன்றாக நடத்துங்கள். உங்களுக்கு நான் தலைமை வகித்து நடத்தலாம் என்று நினைக்கிறேன்' என்று எல்லாம் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. சோஷலிஸ பாணி அமைக்க விரும்பும் காங்கிரஸ் ஆட்சியிலே எவ்வளவு அவஸ்தைக்குள்ளாக வேண்டியிருக்கிறது என்று நினைத்த பணம் படைத்தவர்களும் காங்கிரஸ் கட்சியை ஒழித்துவிடவேண்டுமென்று தூபம் போட்டார்கள். ஜனநாயகத்திலே பணநாயகத்தை வைத்துக்கொண்டு ஆள வேண்டும் என்று நினைப்பவர்களும் இதிலே பங்கு கொண்டார்கள். லஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமென்று ஓயாது எங்கெல்லாம் ஊழல் இருக்கிறதோ அதையெல்லாம் போக்குவதற்கு அதிகாரிகளை வைத்து தீவிரமாக நடவடிக்கை எடுப்பதால் கள்ளப் பணக்காரர்கள், பிளாக் மார்க்கெட்காரர்கள் அவர்கள் அத்தனை பேரையும்

இந்த நடவடிக்கை பாதித்துவிடுமோ என்று பயந்து பதுக்கல் காரர்கள் எல்லாரும் கூட இந்த கிளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தார்கள் என்பதை மறக்க முடியாது.

கிளர்ச்சியின்போது நடந்தது என்ன? காலையிலே ஒரு நோட்டீஸ், மாலையிலே ஒரு நோட்டீஸ். நோட்டீஸ் [illegible]ட்டவனுடைய கையெழுத்துக்கூடக் கிடையாது. அது எந்[illegible]டத்தில் அச்சடிக்கப்பட்டது என்ற பிரிண்டிங் பிரஸ் உடைய பெயர் இல்லாமலே சட்ட விரோதமாக நோட்டீஸ் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குக்கூட நமது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையே என்று நான் வருத்தம் அடைகிறேன். இவ்வாறு ஒரு சதித் திட்டம் தீட்டித் தான் இந்தக் கிளர்ச்சி நிச்சயமாக நடத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல முடியும். மாணவர்கள் என்ன செய்வார்கள்? ஒன்றும் தெரியாதவர்கள். ஊர்வலம் என்றால், சரி ஊர்வலம் தானே, செகரட்டேரியட் வரையில் தானே, சும்மா போய்விட்டு வருவோம் என்றுதான் போயிருப்பார்கள். உண்மையிலே முக்கியமாக சுமார் 10 அல்லது 20 மாணவர்கள்தான் அரசியல் சூழ்ச்சிக்கு அகப்பட்டுக்கொண்டவர்களாக இருப்பார்கள். மீதமுள்ள குழந்தைகள் எல்லாம் ஏதோ ஊர்வலம் தானே போய்விட்டு வருவோம் என்றுதான் போய் இருப்பார்கள். அவர்களுக்கு அந்த சீரியஸ்னெஸ் தெரியாது. இதற்கு ஆசிரியர்கள் முன்வந்து வழியனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் மறுக்க முடியாது. எனவே இத்தனை பேரும் சேர்ந்து நடத்திய ஒரு திட்டமிடப்பட்ட கிளர்ச்சி தான் இது. 1967-லே பதவிக்கு வருவோம் என்பவர்களுடைய ஆசையின் முன்னேட்டம்தான் இந்த கிளர்ச்சி.

போலீஸ்காரர்கள் என்றால் அமைதியை நிலைநாட்டுவதுதான் அவர்களுடைய வேலையாகும். லா அண்ட் ஆர்டரை நிலைநாட்ட வேண்டிய வகையிலேதான் அவர்கள் நடந்துகொள்வார்கள். எதிர்த் தரப்பிலே உள்ளவர்கள், போலீஸ்காரர்கள் அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்று சொல்கிறார்கள். தனக்குத் தனக்கு கஷ்டம் வந்தால்தான் தெரியும் போலீஸ்காரர்களுடைய அருமை. போலீஸ்காரர்கள் எல்லோரும் விஞேபாஜியாக மாறிவிட்டால் எப்படி இந்த நாட்டிலே சட்டத்தை, அமைதியை நிலைநாட்ட முடியும்? கன்னியாகுமரியில் துப்பாக்கியால் சுட்டதற்கு பணம் கொடுத்தார்கள் என்று சொல்லி மாணவர்களைத் தூண்டினார்கள். போலீஸ் எக்செஸ் என்று சொல்கிறார்கள். திருநெல்வேலியில் காங்கிரஸ் கொடியைக் கொளுத்தினார்கள். அதைப் போலீஸார் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அங்கேயிருந்த காங்கிரஸ்காரர்கள் 'எங்களை விடுங்கள், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று சொன்னார்கள். அப்பொழுதும் போலீஸார்கள் அவர்களை அனுமதிக்கவில்லை. இங்கே போலீஸார் யாருக்குப் பக்க பலமாக இருந்தார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

போலீஸார் நடுநிலைமையிலேதான் இருக்கவேண்டும். பலாத்காரத்திற்கு இடம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்காக அவர்கள் தங்களுடைய சொந்த நலன்களையே அர்ப்பணித்தார்கள். எங்கள் ஊரில் டெபுடி சூப்பரின்டெண்டெண்ட்

6th March 1965] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

அவர்களுடைய தொப்பியில் சாணியை வைத்து அவருடைய இரண்டு கால்களிலும் ஒன்றில் 'இந்தி' என்றும் இன்னொன்றில் 'ஒழிக' என்றும் எழுதி நடக்கச் சொன்னார்கள். அவரும் நடந்தார். இந்த விதத்தில் போலீஸார்கள் அகிம்சாவாதிகளாக மாறி விட்டால் நாட்டில் அமைதி எப்படி இருக்க முடியும்? நாட்டின் ஆட்சியை நாம் கனம் பக்தவத்சலம் அவர்களிடம் விட்டு வைத்திருக்கிறோம் என்றால் நம்முடைய உடல், பொருள், உடைமை களுக்கெல்லாம் பங்கம் இல்லாமல் அவர்கள் ஆட்சியை நடத்து வார்கள் என்றுதான் விட்டு வைத்திருக்கிறோம். இந்த நாட்டி னுடைய செல்வம் நீர் வளமோ, பொருள் வளமோ அல்ல; குழந்தைச் செல்வந்தான் இந்த நாட்டினுடைய செல்வம் என்பதை உணர்ந்த நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அவர்களிடம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டாமென்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டின் சுதந்தரத்திற்காகப் பாடுபட்டவர் களுடைய பாரம்பரையிலே வந்தவர்களாதலால், மாணவர்கள் இன்றில்லாவிட்டாலும் நாளை திருந்திவிடுவார்கள் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். குழப்பம் நடந்த அன்று தெருக்களில் யாரும் நடமாடவில்லை; வெளியே வரவே அஞ்சினார்கள். பயமான அமைதி நிலவிற்று. ஏதோ சரித்திரத்திலே கூறியிருப்பதுபோல், அந்தக் காலத்திலே மன்னர்கள் வெற்றி பெற்று வந்தால் நாட்டில் வீடு புகுந்து கொள்ளையடித்து வேட்டையாடுவார்கள் என்று சொல்வதுபோல் அன்றைய தினம் நிலைமை இருந்தது. போகிற வருகிற கார்களையெல்லாம் நிறுத்தி ரூபாய் கேட்கவேண்டியது; பெட்ரோலை எடுத்துக் கொள்ளவேண்டியது; இந்தி எதிர்ப்பு வாசகங்களை அதிலே எழுத வேண்டியது. புதுக் கார்களாக இருந் தாலும் எழுதினார்கள். இந்த மாதிரி எல்லாம் அராஜகம் நடந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'காங்கோ வருகிறது; கெய்ரோன் நிலைமை ஏற்படபோகிறது' என்றெல்லாம் கூட எதிர்க் கட்சிக்காரர்கள் எழுதினார்கள். அதையெல்லாம் கேட்டுக்கொண்டு கூட தீரத்துடன் தன்னிடம் கொடுத்த பொறுப்பை நல்ல முறையில் செய்வேனே தவிர, ராஜினாமாச் செய்யமாட்டேன், பயந்து ஓடிவிட மாட்டேன் என்று தீரத்துடன் இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிலைமையைச் சமாளித்தார் கள். அதற்கு அவரைப் பாராட்டவேண்டும். அவர்கள் ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்வதன் அர்த்தம் என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கனம் சண்முகம் அவர்கள் 'ராஜினாமாச் செய்யுங்கள்; மன்னிப்புக் கேளுங்கள்' என்று சொன்னார்கள். திரு. ராஜேந்திரன் அவர்கள் மற்றவர்கள் ரசிக்கத்தக்க அளவுக்கு நடித்துக் காட்டக்கூடிய குணச்சித்திர நடிகர் ஆகையால், 'ராஜினாமாச் செய்யவேண்டாம்; இந்தியை வர விடாமல் செய்யுங்கள்' என்று அழகாகச் சொன்னார். அதுதான் எல்லோரும் ஒப்புக்கொள்ள கூடிய ஒன்று. ராஜினாமாச் செய்து விட்டு ஓடிவிட மந்திரிகள் எல்லாம் கோழைகள் அல்ல. எதிர்க் கட்சிக்காரர்கள் அவரை மிகவும் கேவலமாகவும், கிண்டலாகவும் பேசினார்கள். அவர் தன்னுடைய இளகிய நெஞ்சத்தை இரும் பாக்கிக் கொண்டு தன்னுடைய கடமையைச் செய்தார். மாணவர்

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [6th March 1965

சமுதாயத்தை அழித்துவிட வேண்டுமென்ற எண்ணம் கொண்டவரா நாட்டிலே ஆண்டுக்கு இரண்டு கல்லூரிகளைத் திறப்பார்? 'அ' என்ற அட்சரம் தெரியாதவன் இருக்கக் கூடாது என்ற அளவிலே கல்விக்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்? ஆங்கில அறிவு முன்னேற்றத்திற்குத் தேவை இல்லையென்று கருதியா ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்கிலப் பள்ளிகளைக் கொண்டு வந்தார்? அந்த முறையில் நாட்டு மக்கள் முன்னேற வேண்டும்; மாணவர் சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற அளவிலே பணியாற்றிக்கொண்டு வருபவர் ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று சொன்னால், எதற்காக ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று நான் கேட்கிறேன். அவரை ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று இவர்கள் சொல்லி அதைக் கேட்டு அவர் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நாங்கள் சொன்னால் அவர்கள் ராஜிநாமாச் செய்வார்கள்; மக்கள் சொன்னால் அவர்கள் ராஜிநாமாச் செய்வார்கள்; நீங்கள் சொல்லி அவர் ராஜிநாமா செய்ய வேண்டியதில்லை. நீங்களே பின்னால், இத்தனை பொறுப்புகளையும் விட்டுவிட்டு ஓடிவிட்டார் என்று சொல்வீர்கள். அவர்கள் நல்ல முறையிலே நிலைமையைச் சமாளிக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டதற்காக பாராட்டி அவருடைய நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: 'நீங்கள்' என்று சொல்வது இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. இப்போதுதான் கொஞ்சம் ட்ரெயினிங் ஆகிக்கொண்டிருக்கிறது. I allot seven minutes for each hon. Member who wish to take part in the discussion.

***திரு. ஏ. சுவாமிதாஸ்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று மக்கள் மனத்திலே குடி கொண்டிருக்கிற பிரச்சினைகள் இரண்டு. ஒன்று உணவுப் பிரச்சினை; இன்னொன்று மொழிப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சில சிக்கல்களை எடுத்துக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். எங்கள் மாவட்டத்தில் நாங்கள் உணவாகக் கொள்கிற நெல்லுக்கு நிர்ணயித்திருக்கின்ற விலையானது மிகக் குறைவு. மட்டரக நெல் என்று தரம் பிரித்து குறைந்த விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். உண்மையிலேயே அங்குள்ள மக்கள் எல்லோரும் அங்கே விளைகின்ற அரிசியைத்தான் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். பிற இடங்களில் இருந்து வருகிற அரிசி உயர்ந்த ரகமாக இருந்தாலும் நாங்கள் எங்கள் பகுதியிலே இருக்கின்ற அரிசியைத்தான் உயர்ந்ததாகக் கருதுகிறோம். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையும் நெல்லுக்கு உயர்ந்த ரக நெல்லுக்கு விலை நிர்ணயித்திருப்பது போல் சரியான விலை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இன்று நெல்லைக் கொள்முதல் செய்து விற்பனை செய்கிறார்கள். கொள்முதல் செய்யும்போது குவின்டாலுக்கு 43 ரூபாய் 50 பைசா என்று வாங்குகிறார்கள். அதில் இருந்து கிடைக்கிற அவுட்டர்ன் அரிசியை 7 ரூபாய் கூடுதலாக வைத்து விற்கிறார்கள். எந்த வியாபாரியும் இவ்வளவு கூடுதலான விலை வைத்து விற்பதில்லை. வாங்குவதிலிருந்து மூன்று ரூபாய்க்கு

6th March 1965] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

மேல் வைத்து விற்பதில்லை. அதை விடவும் வருந்தத்தக்கது வேறு ஒன்றும் உள்ளது. அரிசியை விற்கும்போது ஒரு சாக்குக்கு 75 பைசா விதம் அட்மினிஸ்ட்ரேடிவ் சார்ஜஸ் வசூலிக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ஒரு நாளைக்கு இரண்டாயிரம் சாக்குக்கு மேல் வினியோகம் செய்கிறார்கள். ஒரு சாக்குக்கு 75 பைசா என்று பார்க்கும்போது ஒரு ஆண்டுக்கு 5,40,000 ரூபாய் அட்மினிஸ்டிரேட்டிவ் சார்ஜ் ஆக வசூலிக்கிறார்கள். இந்த முறையைக் கட்டாயம் மாற்றியமைக்க வேண்டும். இப்படி இருந்தால் இதிலே என்ன ஏழைகளுக்கு இலாபம் இருக்கிறது? இதை மாற்றுவதோடு எங்களுடைய நெல்லுக்கு விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கமே இந்த வியாபாரத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொள்வதை விட்டு தனியாரும் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். அப்படி அனுமதி கொடுத்தால் நல்ல அரிசி, தரமான அரிசி மக்களுக்குக் கிடைக்கும். அதோடு கூட மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசி கொண்டு போக உரிமை வழங்கவேண்டும்.

கனம் திரு. வெ. ராமையா : மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசி கொண்டு போக அனுமதி வழங்க வேண்டுமென்று சொல்கிறீர்களா?

திரு. ஏ. சுவாமிதாஸ் : ஆம். அடுத்த மாநிலத்திற்குக் கொண்டு போகாமல் தடை செய்யலாம். அங்கே எல்லையில் பட்டாளத்தைப் போட வேண்டுமென்றாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஒரே நாட்டுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு அரிசி கொண்டு போவதைத் தடை செய்வதை வரவேற்க முடியாது. எங்கள் மாவட்டத்தில் ஒரு தனியான நிலைமை இருக்கிறது. திருநெல்வேலிக்குப் போனால் எந்தச் சிறிய ஊரை எடுத்துக் கொண்டாலும் தெருவிலே அரிசி விற்கிறார்கள். கன்னியாகுமரியில் அவ்வாறு அரிசி விற்கமுடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதனால் அங்கு அரிசி பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. விலை குறைவாக இருந்தாலும் மக்களுக்கு வாங்க வசதி இல்லை. எங்கு பார்த்தாலும் செக் போஸ்ட் போட்டிருப்பதுபற்றிப் பலர் எடுத்துச் சொன்னார்கள். கேரள எல்லைப் புறத்தில் எவ்வளவு செக் போஸ்டுகள் வேண்டுமென்றாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஊருக்குள்ளேயே கொண்டு போவதைத் தடை செய்வதை வரவேற்க முடியாது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, அந்த மாவட்டத்தில் ஓரளவு நெல் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னாலும் நெல்லை அதிகமாக உற்பத்தி செய்ய (இன்சென்டிவ் ஸ்கீம்) தீவிர சாகுபடித் திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தையும் உள்படுத்தி 11-00 a.m. அதிகமாக உணவு உற்பத்தியைச் செய்ய முற்படவேண்டும். அதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, எங்கள் மாவட்டத்தில் பல பிரச்னைகள் இருக்கின்றன. அங்கு ரயில் இல்லை. ரயிலை பார்ப்பதற்கு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நிச்சயமாக அங்கு ரயில் வந்து

சேரவேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அப்படி கட்டாயம் வரவேண்டுமென்றால் இந்த முயற்சிக்கு நம் தமிழ் நாட்டு அரசாங்கமே அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருகிற ஆண்டு ஏழு கல்லூரிகள் திறக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி திறப்பதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும்.

நேரம் இல்லாததால் மொழிப் பிரச்னையைப்பற்றி சுருக்கமாக ஒன்றை மட்டும் கூறிவிட்டு முடித்துக் கொள்கிறேன். இந்தப் போராட்டத்தை தூண்டிவிட்டது எதிர்க்கட்சிக்காரர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தினர் என்று பலர் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு அப்படி அவர்கள் சொல்வதில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி அவர் கள்தான் தூண்டி விட்டார்கள்; அப்படி தூண்டி விட்டு மக்கள் எல்லோரும் கிளர்ச்சி செய்தார்கள் என்று சொன்னால் மத்திய அமைச்சரவையில் இருக்கிற நம் மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்களும், திரு. அழகேசன் அவர்வகளும் ராஜினாமா செய்திருக்க வேண்டிய தேவை இல்லை. இவர்கள் தூண்டிவிட்டா அவர்கள் ராஜினாமா செய்தார்கள்? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்களை குற்றம் சாட்டுவதில் பயன் இல்லை. எல்லோரும் இந்த மொழிப் பிரச்னையில் கவலை கொண்டிருக்கிறார்கள். இந்தி நம் நாட்டில் புகுந்து விடக் கூடாது என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் கூட அப்படி வரவிடாமல் பார்த்துக் கொள்வேன், இங்கிலீஷ் தொடர் மொழியாக இருக்க பாடுபடுவேன் என்றெல் லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு கட்சி இப்படிச் செய்தது, இன்னொரு கட்சி இப்படிச் செய்தது என்றெல்லாம் குறை கூறுவதை விட்டு விட வேண்டும். இனிமேல் நடப்பதைப் பார்க்க வேண்டும். மாணவர்கள் கிளர்ச்சி செய் தார்கள். பலர் ஜெயிலில் இருக்கிறார்கள். பலர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. மாணவர்களைப் பொறுத்தவரையில் அமைதியான முறையில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்கள் பள்ளிக்குச் செல்லும் நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். எட்டாம் தேதி பாடசாலைகள் திறக்க இருக்கின்றன. மாணவர்கள் என்ன தவறு செய்திருந்தாலும் அதையெல்லாம் மன்னிக்க வேண்டும். அவர்கள் மீது போடப்பட்டிருக்கிற அத்தனை வழக்குகளையும் பின்வலிக்க வேண்டும். காயம் அடைந்தவர்கள், இறந்தவர்கள் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமானால் அதைச் செய்து நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி வருங்காலத்தில் மாணவர்கள் அமைதியாக கல்வி கற்க வழிவகை செய்து கொடுக்க வேண்டும். 1965-ம் ஆண்டு இருக்கிறதே அது தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் ஒரு கரிய வருஷம், துயரம் நிறைந்த வருஷம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இயற்கையின் கோர தாண்டவம் தனுஷ்கோடியில், பல துப்பாக்கிப் பிரயோகங்கள் தமிழ் நாட்டில் நடந்திருக்கின்றன. ஒன்று குறிப்பாக சுட்டிக்

6th March 1965] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

காட்ட ஆசைப்படுகிறேன். நம் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் பதவியேற்ற பின்னர் தமிழ் நாட்டில் நாம் எதிர் பாராதவிதமாக பல துன்பங்கள் ஏற்பட்டதை ஒரு துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். பல தீய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னால் முதல் அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் ஒரு அரசியல் தீர்க்கதரிசிபோல் இருக்கிறது. வருங்காலத்தை அறிந்தவர் என்று கூறலாம். இத்தகைய தீய நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நேரும் போது அதை தான் சுமக்காமல் தட்டிக் கழித்துவிட வேண்டுமென்ற எண்ணம் கொண்டோ என்னவோ தெரியவில்லை, திரு. பக்தவத்சலம் அவர்களிடம் அந்த முதல் அமைச்சர் பதவியை கொடுத்துவிட்டுச் சென்றார்கள். என் சிற்றறிவுக்கேற்ற ஒரு ஆலோசனையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இந்த அமைச்சர் அவையிலிருந்து வெளியே செல்ல வேண்டாம். அவர்கள் இங்கேயேயிருந்து பணியாற்றட்டும். முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்களை அழைத்து இந்தப் பதவியை அவர்களிடம் ஒப்படைத்து 'நான் பார்த்தது போதும், நீங்கள் கொஞ்ச நாள் இந்தக் கஷ்டத்தை அனுபவியுங்கள்' என்று கூறினால் நன்றாக இருக்கும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI M. WILLIAM: Mr. Speaker, Sir, in welcoming the Budget, I wish to say a few words. The Budget is welcomed by all sections of the people. The reasons for that are that there are good features in the Budget. Though the Budget is a deficit one, no new taxes are proposed to be imposed. The increased Dearness Allowance to all State Government employees including those in the salary group of Rs. 600—1,200, to the employees working in Local Bodise and also to the teachers in Aided Schools is to be welcomed by one and all. In this connection, I wish to add that the Dearness Allowance may also be given to the non-teaching staff in the aided institutions. They form only a handful and the amount may come to less than Rs. 50,000 or so. If that concession is given to the non-teaching staff also, that will be greatly appreciated and welcomed.

We see from the Budget a review of the works under the Third Plan. Even the Planning Commission which visited this State has been impressed with the progress that has been made in regard to the Plan schemes and we are only too glad to appreciate the progress that has been made. Almost all the schemes have been implemented according to schedule. Some of the schemes have been implemented even before the scheduled time.

Much importance is given to agriculture especially the popularisation of the A.D.T. strain, 27 short-term paddy which is expected to yield about 4,000 lbs. That strain of paddy may also be popularised in other districts especially in the Kanyakumari district. If that yield comes about, I am certain that the food crisis could be easily solved and there is no need even for the Food Corporation.

[Sri M. William] [6th March 1965

Then coming to the language problem and also the events that have taken place recently, I only wish to say that the whole matter must be considered dispassionately. Of course, the mass movement though started on non-violent lines had become violent. Whoever may be the persons who might have taken the initiative in the movement, the movement has ended in letting an orgy of violence. We are really sorry that much damage has been done to the properties belonging to the public and private sectors. Such a thing should have been avoided. But anti-social elements have entered the movement and they had done all the mischief. What would the authorities in power do under such circumstances? Suppose the Opposition Members occupy the Treasury Benches Will they keep quiet and simply look at those untoward happenings occurring all over the State? Certainly not. They will also try to take all repressive measures to stop those untoward incidents. The Communist Party, when in power in the Travancore-Cochin State, had also stated that they would not resort to firing and they would not adopt repressive measures. But what happened when they came to power? They also adopted such measures. So if it comes to that, one will be forced to enforce law and order. Similarly, such measures have been taken by our Hon. the Chief Minister. So, we cannot condemn him on that account and we cannot say that he must resign and give place to others. That is not the proper way of functioning in a democracy. We may point out the errors committed by the Government. That is the way of approach and then only democracy will flourish in the country.

Then coming to the language problem, I am also one of those who would firmly say that English should be continued as far as possible. Hindi could be imposed only when our State is prepared to accept it. Our late Prime Minister also gave a solemn assurance to that effect. The present Prime Minister also has given that assurance. But what is the meaning of this assurance when the Ministry of Information and Broadcasting issued circulars on 26th January 1965 that Hindi should be introduced in all proceedings? So, the Hindi chauvinists are responsible mostly for the troubles in our State also. It is their zeal in the matter to impose Hindi by all means, which is responsible for the recent agitation in our State. A provision has been made in sub-clause (3) of Article 343 of the Constitution enabling the Parliament to extend the use of English not only for a period of 15 years but even after 15 years. I wish to point out that the Official Language Act was passed hastily. It was not circulated to any of the State Legislatures. If it was circulated then, the provision " shall " would have been introduced. Any way, the Hon. Chief Minister is not for imposing Hindi here. It may come gradually. The Hon. Chief Minister is insisting that English also should be continued so long as our State does not require Hindi. Such a provision should find a place in the Official Language Act and we all must stand as one in strengthening the Chief Minister's hands to achieve that object.

6th March 1965] [Sri M. William]

With regard to Kanyakumari district, I have to say one or two words. We are allotting a lot of amount for improving irrigation. So far as our district is concerned, there are no irrigation wells, but there are thousands of tanks—rainfed tanks. Those tanks were deepened annually by the Travancore-Cochin Government when we were in the Travancore-Cochin State. But most of the tanks have been neglected now. The Panchayats are entrusted with the maintenance of those tanks, but their finances are very meagre. I, therefore, request that our Government may be pleased to give liberal grants to the Panchayats so that this work may be attended to properly.

As regards the taking of rice from one place to another or from one taluk to another taluk, I wish to state that all the check posts should be centred round the border separating the Kerala State and the Madras State. The price of paddy should also be enhanced. If these things are attended to, there will not be necessity for setting up the Food Corporation or for any of the expenditure involved in the construction of godowns.

(The time bell was rung.)

***திரு. சொ. வெங்கிடசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, **1964-65-ம்** ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கடந்த ஜனவரி மாதம் கூட்டம் இங்கே நடைபெற்றபொழுது, இயற்கையின் சீற்றம் காரணமாக தனுஷ்கோடி, ராமேஸ்வரம் புயலால் பாதிக்கப்பட்டு பல நூறு மக்களையும், பல சொத்துக்களையும் இழந்து தவித்த துயரங்கள் எல்லாம் தீருவதற்கு முன்பாக இன்றைய தினம் கூட்டம் நடைபெறுகின்ற இந்த நேரத்தில் பல உயிர்களை செயற்கையின் காரணமாக துப்பாக்கிச் சூட்டுக்கும் தீ வைப்புக்கும் பலிகொடுத்து செயற்கையில் துன்பத்தை வரவழைத்துக் கொண்டு இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மன்றம் கூடியிருக்கிறது. அதற்கான காரணம் என்ன, ஏன் இந்த நிலை ஏற்பட வேண்டும் என்பதுபற்றி ஆராய்ந்து அதை முதலிலேயே முடிவு எடுத்திருந்தால் இத்தகைய நிலைமைகளைத் தடுத்திருக்கலாம். அதற்குப் பதிலாக இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையின் மீது பேசவேண்டிய சந்தர்ப்பத்தில், இந்தி வேண்டுமா வேண்டாமா என்று பேசுகின்ற அளவுக்கும், மொழிப் பிரச்னைபற்றியே இந்த விவாதத்தில் எல்லோரும் பேசுகின்ற அளவுக்கு மாணவர்களுடைய போராட்டம் நடந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. மாணவர்கள் ஏன் போராட்டம் நடத்தினார்கள், அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதனை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தி வந்தால் மாணவர்களுடைய வருங்காலம் எப்படி அமையப் போகிறது, என்ன நிலை ஏற்படும் என்கின்ற ஐயம் மாணவர்களின் உள்ளங்களில் ஏற்பட்டதின் காரணமாகத்தான் இந்தியை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் அடியோடு அழிந்துவிடும் ஆகவே இந்தி வரக்கூடாது என்று மட்டும் நினைத்து அவர்கள் போராட்டத்தை நடத்தவில்லை. ஒரே காரணத்தைத் தான் அவர்கள் கூறினார்கள். ஆங்கிலம் பொது மொழியாக இருக்க வேண்டும். ஆட்சிமொழியாக இருக்கவேண்டும், இந்தி ஆட்சி

[திரு. சொ. வெங்கிடசாமி] [6th March 1965

மொழியாக இருப்பதற்கு தகுதியானது அல்ல என்கின்ற காரணத்தை சொல்லித்தான் அவர்கள் போராட்டம், கிளர்ச்சி, இவைகளை எல்லாம் நடத்தினார்கள். இந்த மாணவர்களின் போராட்ட காலத்தில் பல பலாத்கார செயல்கள் நடைபெற்றன என்பது உண்மைதான். மாணவப் பருவத்தில் எல்லோரும் மிக துடிப்பாக இருப்பார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த முறையில்தான் அவர்கள் போராட்டத்தை வேகத்துடன், அதே நேரத்தில் மிக கட்டுப்பாடுடனும் நடத்தினார்களே தவிர, ஏதோ எதிர்கட்சியினர் தூண்டிவிட்டு போராட்டத்தை நடத்த வில்லை. மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்றால் அதிலுள்ள கோரிக்கைகளை கவனித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்விதமில்லாமல் தண்டனை கொடுப்பது, பாதுகாப்பு என்கின்ற பெயரில் மாணவர்களை சுட்டுக்கொல்வது போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. முதலாவது மதுரையில் தான் மாணவர்களுடைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் மாணவர்கள் மதுரையில் வெட்டுப்பட்டார்கள். அவ்விதம் அங்கு மாணவர்கள் வெட்டுப்பட்ட பிறகுதான் மற்ற பிற இடங் களிலும் மாணவர்கள் வீறு கொண்டெழுந்து தாங்களும் போராட் டத்தை நடத்தினார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. மறைக்கவும் முடியாது. ஆனால் மதுரையில் நடந்த சம்பவத்தில் யார் யார் வெட்டினார்களோ அவர்கள்மேல் இன்று வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. அதே நேரத்தில் அரிவாளால் தாக்கியதின் காரணமாக ஒரு மாணவன் கண்ணை இழந்து இன்றைக்கும் ஆசுபத்திரியில் படுத்துக்கொண்டு இருக்கிறான். இதையெல்லாம் பார்த்த பின்னால்தான், எங்கு பார்த்தாலும் மாணவ சமுதாயம் வீறு கொண்டெழுந்து பல பலாத்கார செயல்களில் ஈடுபட்டிருக்கிறது. பலாத்கார செயல்கள் நடைபெறவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. அதல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர்கள் தூண்டிவிட்டார்கள், வயதிலே பெரிய வர்கள் தூண்டிவிட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. மத்திய அரசாங்கத்தில் சொல்லுகின்றார்கள், இங்கே இருக்கின்ற அமைச்சரவைதான் இத்தனை குழப்பத்திற்கும் காரணம் என்று. அங்கே போய் எந்த எதிர்கட்சியினர் சொன்னார்கள்? அது மட்டு மல்ல. அங்கிருக்கின்ற அமைச்சர் சுப்பிரமணியமும்கூட இதில் கலந்து கொண்டிருக்கிறார் என்று பிரதமர் சாஸ்திரி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு அங்கத்தினர் குறுக்கிட்டு சொல்லுகிறார், அங்கே போய் அந்த அங்கத்தினருக்கு எந்த எதிர்கட்சியினர் தூண்டிவிட்டார்கள்? மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையில் இந்தி வரக்கூடாது, ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பதைத்தான் மாணவர்கள் தங்கள் கோரிக்கையாக வைத்துக்கொண்டு தங்கள் போராட்டத்தையும் கிளர்ச்சியையும் நடத்தினார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. விருப்பு வெறுப்பு இல்லாமல் மாணவ சமுதாயத்திற்கு இதனால் எந்த விதமான தீங்கும் ஏற்படாமல் எப்படி தீர்த்து வைப்பது என்பதை எல்லோரும் கலந்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயம். ஆனால் இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதில் எதிர்கட்சிகளை எல்லாம் நல்ல முறையில்

6th March 1965] [திரு. சொ. வெங்கிடசாமி]

கலந்துகொண்டு தக்க முடிவு எடுத்திருந்தால், இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் தவிர்த்திருக்க முடியும். அதற்கு இந்த அமைச்சர்கள் தவறிவிட்டார்கள், இந்த அரசு தவறிவிட்டது. அதற்குப் பதிலாக எதிர்கட்சிகள் எல்லாம் இந்தி எதிர்ப்பு மகா நாடு கூட்டி, அந்த மகாநாட்டில் தீர்மானங்கள் போட்டு கிளர்ச்சியை தூண்டிவிட்டது என்று சொல்கிறது இந்த அரசாங்கம். ஆனால் இதுவரை எதிர்கட்சிகளுடைய கோரிக்கைக் காக என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது இந்த அரசாங்கம்? இவ்வளவு கிளச்சிகளுக்குப் பின்னால்தான் மும்மொழி திட்டத்தை கொண்டு வரலாம் என்கின்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அதிலும் இன்னும் நல்ல முடிவு எடுக்கப்படவில்லை என்று சொல்வதையும் காண்கின்றோம். இந்த நிலை முன்னமேயே இருந்திருந்தால் இந்த சம்பவங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கவே முடியாது என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது. வாதத்திற்கு வேண்டு மென்றால் காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்தான் இதைத் தூண்டி விட்டார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மை நிலை அதுவல்ல என்பது அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்றே எண்ணுகிறேன். காந்திஜி, லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே போன்றவர்கள் இந்தி மொழியில்தான் இந்த தேசத்தினுடைய சுதந்திரத்திற்காக மக்களை தட்டி எழுப்பி னார்கள் என்றும், அதன் மூலமாகத்தான் தேச ஒற்றுமையை வளர்த்தார்கள் என்றும் சொல்லப்பட்டது. அதே நேரத்தில் காந்திஜி அவர்கள் லண்டனில் சென்று வட்ட மேஜை மகா நாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக சென்று இந்திய சுதந்திரத் தைப்பற்றி எந்த மொழியில் பேசினார்கள் என்று கேட்கிறார்கள். அதே போன்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் இந்தியாவி னுடைய ஆத்மீக தத்துவங்களைப்பற்றியெல்லாம் அயல்நாடுகளில் சென்று எந்த மொழியில் பேசினார்கள் என்றும் பலர் கேட்கின்றார் கள். பிரசித்திபெற்ற நேரு—மறைந்த மாவீரர் நேரு அவர்கள்—நேரான கொள்கை உள்ளவர் நேரு—கூர்மையான அறிவுடையவர் நேரு என்றெல்லாம் போற்றக்கூடிய பண்டித நேருவுக்கு கிடைத்த பெருமை ஆங்கிலத்தில் அவர்கள் சரளமாக பேசக்கூடிய வன்மை பெற்றிருந்ததுதான் என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்த மாநில அரசில் இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள், தொழில் அமைச்சர் அவர்கள், இவர்கள் அடிக்கடி இந்தியாவின் பிரதிநிதிகளாக அயல்நாடுகளுக்கு செல்வது எந்த மொழியின் துணை கொண்டு என்றும் கேட்கின்றார்கள். அந்த அளவுக்கு நம் மிடையே 200 ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கிலம் ஊறி வளர்ந்து விட்டது. அத்தகைய மொழியை நாம் ஒழித்துவிட்டால் நிச்சய மாக நாம் வளரவே முடியாது. இத்தகைய எண்ணங்கள் மாணவ சமுதாயத்தின் இடையே வளர்ந்ததின் காரணமாகத்தான் இத் தகைய போராட்டம் ஏற்பட்டது. அதோடு விஞ்ஞானம், கலைகள், கணிதம் இவைகளை எல்லாம் முறையோடு கற்றுக்கொண்டிருப்பது ஆங்கிலத்தில். இதை எல்லோரும் மறைமுகமாக ஒத்துக்கொள் கிறார்கள். ஆகவே இந்த மொழியை யாரும் புறக்கணிக்க முடியாது. ஆகவே ஆங்கிலம் இந்த நாட்டின் பொது மொழியாக இருக்க வேண்டும் என்று மாணவ சமுதாயம் கருதுகிறது அதன் பயனை

[திரு. சொ. வெங்கிடசாமி] [6th March 1965

அதை எடுத்துக் கூறினர்கள். ஆனல் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்து அரசாங்கத்திற்கு ஏற்கவில்லை பிறகுதான் அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இத்தனைக்கும் அரசாங்கம் தான் காரணமே தவிர மற்றவர்கள் காரணமாக இருக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிக்கொள்கிறேன். அதோடு இந்த அரசாங்கம், இன்னும் சொல்லுகிறேன். எதிர்கட்சிகளை அழைத்து மொழிப் பிரச்னையில் கலந்துகொள்ளாவிட்டாலும், உயர் மட்டத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும், கல்வித் துறையில் இருக்கக் கூடிய அதிகாரிகளையும் கூட்டி, இங்கு இந்தி வேண்டுமா, இங்கே ஆங்கிலம் நீடிக்க வேண்டுமா என்ற ஆலோசனை கேட்கக் கூடிய நிலையை ஏற்படுத்தி, நல்ல முடிவு எடுத்து, மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தக் கூடிய நிலையை எடுத்திருக்கலாம். ஆனல் அந்த நிலையை எடுத்துக் கொள்ளவில்லை. அதுதான் போகட்டும். இப்போது அவசர நிலை என்ற பெயரால் எத்தனையோ காரியங்களை ஒத்திப் போடுகிறோம். எத்தனையோ திட்டங்களை ஒத்திப் போடுகிறோம். பல வேலைகளை ஒத்திப் போடுகிறோம். அவசர நிலை காரணமாகப் பல பேர்களை கைது செய்கிறோம். அதைக் காரணம் காட்டியாவது, அவசர நிலை முடிந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி இப்போது இந்தியை நிறுத்தி வைக்கலாம் என்று சொல்லியிருக்கலாமே. அதை ஏன் செய்யவில்லை என்பது ஐயமாக இருக்கிறது. மாணவர்கள் சிறு பிள்ளைகள் என்று நினைக்க வேண்டாம். அவர்கள் வளர்ந்தவர்கள், வாலிபர்கள், படித்தவர்கள். அவர்கள் கேட்கிறார்கள் இத்தனை கேள்விகளையும். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டக் கடமைப்பட்டவர்கள் என்ற நம்பிக்கையோடு. அந்த அளவுக்கு எத்தனை கேஸ்கள் இருந்தாலும் அத்தனையையும் வாபஸ் பெற்று, மீண்டும் அவர்கள் கல்லூரிகளுக்கு நல்ல முறையில் சென்று பயில வழிவகைகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. வீ. ராமநாதன்:** *மதிப்புக்குரிய மாமன்றத் தலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1965-66-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.*

"காய் நெல் அறுத்து கவளம் கொள்ளே" என்ற புறநானூற்றுச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக வரியில்லாத வரவு—செலவுத் திட்டம் நிகரில்லாத சிறப்பு உடையது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். யானை புகுந்த களம் போல் இல்லாமல் தேனை ஒத்த பழம் போல் இனிக்கிறது இந்தத் திட்டம். முத்தான மூன்று திட்டங்களை முடித்துவிட்டுச் சத்தான நான்காவது திட்டத்திற்கு வித்தாக அமைவது இந்த வரவு—செலவுத் திட்டம். துண்டு விழுகின்ற நிலை இருந்தாலும், பற்றாக்குறையைத் துணிவான நடவடிக்கையால் கணிசமான முறையில் ஈடு செய்ய வல்லது இந்தத் திட்டம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தத் திட்டத்தைப் படிக்கிற நேரத்தில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் வருகின்றன. ஆனால் எங்களது பகுதியில் ஒரு முக்கிய திட்டமாகிய குடகனாறுத் திட்டம் இதில் வரும் என்று எண்ணி எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அது வரவில்லை. அடுத்த நிதிநிலை அறிக்கையிலாவது வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்று இந்த மாமன்றத்தில் பொதுவாக நிதிநிலை அறிக்கையின் மீது பேசினாலும், அங்கத்தினர்களெல்லாம் அண்மையில் தமிழகத்தில் நடந்த கலவரங்களைப்பற்றித்தான் எல்லோரும் பேசினார்கள். நானும் எங்கள் மாவட்டத்தில் கரூரில் நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கரூர் என்னுடைய தொகுதியில் இல்லை என்றாலும்கூட, என்னுடைய ஊர் இருக்கிற தாலுகாவின் தலைநகர் 10-ம் தேதி நடந்த நிகழ்ச்சியின்போது நான் கரூரில் இருந்தேன் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அன்று காலை மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். காலையில் 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் 10 மணிக்கு முடிந்து விட்டது. அதன் பிறகு மாணவர்கள் சென்று விட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டு ஒரு சில ரௌடிகளும், சமூக விரோதிகளும், தேசத் துரோகிகளும் அங்கே இருக்கிற தாலுகா ஆபீஸையும், அங்கே இருக்கிற முன்சிப் கோர்ட்டையும் அங்கே இருக்கிற டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் நிலையத்தையும் தகர்த்து லட்சக் கணக்கான ரூபாய் அளவுக்குச் சேதம் ஆக்கினார்கள். அதுமட்டுமல்லாமல் ரயில்வே ஸ்டேஷனைக் கொளுத்தினார்கள். கரூர் என்பது பெட்ஷீட் உற்பத்தி செய்கிற கேந்திர ஸ்தானம். தனிப்பட்ட வியாபாரிகள் லட்சக்கணக்கான ரூபாய்களுக்குச் சரக்குகளை வெளியூர்களுக்கு அனுப்புவதற்காக பார்சல் ஆபிசிலே கொண்டு வைத்திருந்தார்கள். அந்தச் சரக்குகளைத் தீயவர்கள், கொடியவர்கள், நெருப்பிலிட்டுப் பொசுக்கினார்கள். அருகில் இருந்த முன்சீப் கோர்ட்டை அழித்தார்கள். நீதி மன்றத்தை அழிக்கும் துரோகிகள் கூட இருக்கிறார்கள் என்று எனக்கு அன்றுதான் தெரியும். அத்தனை ரெக்கார்டுகளையும் தீயிலிட்டுக் கொளுத்தினார்கள். கொளுத்தியது மாத்திரமல்லாமல் நீதி மன்றத்தை இடித்துத் தரை மட்டமாக ஆக்கினார்கள். இப்படிப்பட்ட துரோகிகளை விட்டு வைத்திருக்கலாமா? இப்படிப் பட்ட துரோகிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்களே என்று பார்த்துத்தான் தமிழ் தாய் கண்ணீர் வடிக்கிறாள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

அன்று நடந்த தேச விரோத சக்திகளை யார் தூண்டிவிட்டார் கள் என்று நான் கூறவில்லை. எந்தக் கட்சி தூண்டிவிட்டது என்று நான் கூறவில்லை. நான் கூறுகிற நிகழ்ச்சியிலிருந்து யாரால் இது ஏற்பட்டது என்று இந்த மன்றமே முடிவு செய்துகொள்ளவேண்டு மென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அன்று நாச வேலை செய்த துரோகிகள் என்ன செய்தார்கள் என்றால், தனிப்பட்டவர் களுடைய உடமைகளைக் கூட நெருப்புக்கு இரையாக்கினார்கள். அங்கு இருக்கிற தனியார் துறையில் நடத்தப்படுகிற பெரிய பஸ் கம்பெனியிலிருந்து ஒரு 60,000 ரூபாய் பெறுமானம் உள்ள பஸ்ஸைக் கொளுத்தினார்கள். அதுமட்டுமல்லாமல், காங்கிரஸ்

[திரு. வீ. ராமநாதன்] [6th March 1965

தியாகி திரு. கோவிந்தராஜப் பிள்ளை என்பவர் கடைக்குச் சென்று சூறையாடினார்கள். அந்த ஊரில் இருந்த டவுன் காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. சீனிவாசம் பிள்ளை என்பவரை எங்கே என்று தேடினார்கள். அவர் கிடைத்திருந்தால், அவருக்கு திருப்பூரில் சப்-இன்ஸ்பெக்டருக்கு நேர்ந்த கதியே ஏற்பட்டிருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும் என்ன செய்தார்கள் என்றால் காங்கிரஸ் கொடியை வெட்டி, வீழ்த்தி நெருப்பு வைத்தார்கள். திராவிடக் கழகக் கொடிகளை வெட்டி வீழ்த்தி நெருப்பு வைத்தார்கள். 10 மணி முதல் மாலை 2 மணி வரையில் வெறியருடைய ஆட்சிதான் கரூரில் நடந்தது. இந்த நான்கு மணி நேரத்தில் அவர்கள் நினைத்திருந்தால் யார் வீட்டை வேண்டுமானாலும் இடித்து நிரவியிருக்கலாம். அப்படிப்பட்ட கொடூரச் செயலுக்குப் பிறகு போலீசார் நடவடிக்கை எடுத்தார்கள். நடவடிக்கை எடுத்து மூன்று பேர்களைச் சுட்டார்கள். அந்த மூன்று பேர்களில் இரண்டு பேர்களுடைய விவரத்தை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதன் பிறகு இந்தக் கொடூரச் செயல்களுக்கு யார் காரணம் என்று தெரியும். கரூர்-நீவிமேடு, சின்னுபள்ளித் தெரு, செ. கனகமுடி என்பவரின் மகன் சந்தானம் என்பவன் தாலுகா ஆபீசை கொளுத்தும்போது சுடப்பட்டான். அவன் கள்ளச் சாராய வழக்கில் சிறை சென்றிருக்கிறான். மேலும் சட்ட எரிப்புப் போராட்டத்திலும் சிறை சென்றிருக்கிறான். அடுத்து, கரூரை அடுத்த திருக்காம் புலியூரைச் சேர்ந்த மருதை என்பவன் ரயில்வே பார்சல் ஆபீஸ், புக்கிங் ஆபீஸ் ஆகிய இடங்களைக் கொள்ளை அடித்தபோது சுடப்பட்டான். அப்போது அவனுடைய பாக்கெட்டில் கொள்ளை அடித்த 700 ரூபாய் பணம் இருந்தது. ரெயில்வே ஸ்டேஷனில் புக்கிங் ஆபீசைக் கொளுத்தி கொள்ளை அடித்துச் சுடப்பட்ட அவன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன். ஆகவே இது போன்ற கொடிய செயல்களுக்கு யார் காரணம் என்று மன்றத்தின் தீர்ப்புக்கு விட்டு விடுகிறேன். நிலைமை இப்படி இருக்கும்போது நமது ஒப்பற்ற முதல் அமைச்சரைப் பார்த்து ராஜினமா செய்யவேண்டுமென்று கூறுகிறார்கள். நம் முதல் அமைச்சர் அவர்கள் இது போன்ற துரோகச் செயல்களைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டுமா? மாணவர்கள் மீது ஒரு சிலர் பழி சுமத்துகிறார்கள். மாணவர்களை அவர்கள் அம்பாக உபயோகப்படுத்தினார்கள். அவர்கள் வில்லாக இருந்து அரசாங்கத்தைப் பார்த்துக் குறி வைத்துச் சுட்டார்கள். அந்த அம்பு வில்லோடு சேராமல் குறி வைக்கப்பட்ட பொருளோடு சேர்ந்துவிட்டது. அதற்குக் காரணம் முதல் அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே "இந்தி ஆட்சிமொழி ஆவது பற்றி அமரர் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிகள் தேசத் தலைவர்களால் மனப்பூர்வமாக மீண்டும் ஒப்புக்கொள்ளப்பட்டு அவை விரைவிலேயே சட்டப் புத்தகத்தில் பொறிக்கப்படும்" என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்த வாக்குறுதி மாணவ சமுதாயத்திற்கு நல்ல வழிகாட்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழ் நாட்டிலே நடந்த இப்பேர்ப்பட்ட வன்முறை

11-30 a.m.

செயல்களை எல்லாம் அடக்கிய பெருமை நமது முதல் அமைச்சர்

அவர்களைச் சாரும். நான் அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். மலேஷியாவில் கொரில்லாக்களை அடக்கியது போல, தமிழ் நாட்டில் கொலைக்கும், கொள்ளைக்கும் காரணமாக இருந்த கொரில்லாக்களின் கொட்டமடக்கிய கொற்றவர் நமது முதல் அமைச்சர் வாழ்க என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. என். துரைபாண்டி:** கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த பட்ஜெட்டை ஆதரித்து நான் சில கருத்துக்களை கூற முன்

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

வந்திருக்கிறேன். பட்ஜெட்டை எடுத்துக்கொண்டால், ஏழைகள், பணக்காரர்கள், படியாதவர்கள், விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும் பொருத்தமாக பட்ஜெட் இருப்பதினால், இதை யாரும் குறை சொல்ல முடியாமல் இருப்பதின் காரணத்தினால், பட்ஜெட்டில் உள்ள விஷயங்களைப்பற்றிப் பேசாமல், சமீப காலத்தில் நடைபெற்ற கலவரங்களைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். கலவரம் எப்படி நடந்தது என்றால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கோணங்களிலிருந்து அதைப் பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே இந்த நாட்டில் இந்தி திணிக்கப்படுகிறது, இனி நாம் வீட்டில் தமிழ் பேச முடியாது, தாய் மொழி பேச முடியாது 'அம்மா' என்று கூப்பிட முடியாது என்ற அளவுக்கு ஊர்களில் எல்லாம் பொய்யான வதந்திகளை பரப்பி விட்டார்கள். அதை அடுத்து பள்ளி மாணவர்களும், இவ்வளவு காலமும் நாம் படித்த படிப்பு வீணாகி விடுமோ, நாம் பள்ளியை விட்டு வெளிவந்த பிறகு உத்தியோகம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அளவுக்கு அவர்களுக்கும் பயம் உண்டாகியிருக்கிறது. வக்கீல்கள் சங்கமும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். வக்கீல்களும் அந்த அளவுக்கு இருக்கிறார்கள். குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் இந்தக் கலவரத்திற்கு காரணம் என்று கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வக்கீல். அவர்கள்தான் தூண்டிவிட்டார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்தி எதிர்ப்பு மகாநாடு கூட்டுவதற்கு அவர்கள்தான் முக்கிய காரணமாக இருந்தார்கள் என்பதை திருநெல்வேலி ஜில்லாவில் இருப்பவர்கள் உணர்கிறோம். பையன்கள் அறியாத வயதினர், அவர்கள் இந்த நாட்டில் நன்றாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசாங்கம், அதிலும் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள், பள்ளி மாணவர்கள் வருங்காலத்து செல்வங்கள், இந்த நாட்டின் செல்வம், அவர்கள் நன்றாக வாழவேண்டும் என்று கருதி அவர்களின் நலனுக்காக பல கல்லூரிகள், தொழில் கல்லூரிகள், பள்ளிகள் அத்தனையும் அமைத்து, சர்க்கார் உபகாரச் சம்பளம் ஏராளமாகக் கொடுத்து, படிக்க வாய்ப்பு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். மாணவர்களை சுட்டுத் தள்ளவேண்டும், வருங்கால செல்வத்தை ஒழிக்கவேண்டும் என்று நினைத்தால், ஆளும் கட்சியில் இருக்கிற காங்கிரஸ்காரர்கள் நினைத்தால், இந்த

[திரு. என். துரைபாண்டி] [6th March 1965

அளவுக்கு அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்திருக்க முடியாது. ஆனால், எதிர்க்கட்சி நண்பர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்திலிருந்து எதைக் கொண்டு வந்தாலும், அதை எதிர்க்கவேண்டுமென்று கருதி, நல்லதாக இருந்தாலும் எதிர்க்கவேண்டும், கெடுதலாக இருந்தாலும் எதிர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, இந்த அரசாங்கம் என்ன செய்தாலும் அதை எதிர்க்கிறார்கள். வாழ்க்கை நன்றாக நடத்த வேண்டும் என்றால் பிள்ளைகளுக்குக் குறைத்துப் பெறவேண்டும். மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறுவது நல்லதல்ல என்று சொன்னால், சர்க்கார் பிள்ளையே பெறக்கூடாது என்று சட்டம் கொண்டு வருகிறது, மதமே அழிந்துவிடும், நாட்டில் புருஷன் மனைவி பேசக்கூட உரிமை இல்லை என்று பிரசாரம் செய்தார்கள். தங்கக் கட்டுப்பாடு வந்தபொழுது, தாலிக்கு தங்கம் இல்லை, இந்த நாட்டில் தாலி கட்ட முடியாது, மனைவி, புருஷன் யார் என்றே தெரியாமல் போய்விடும் அம்மாதிரி நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது என்று அப்பொழுது பிரசாரம் செய்தார்கள். தேர்தல் நெருங்கும்போது 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுப்போம்' என்று பரப்புகிறார்கள். தொழிலாளர்கள் மத்தியில் அவர்கள் சம்பளம் காணுமல் தவித்துக் கொண்டிருக்கும்பொழுது, விலைவாசி கூடிவிட்டது என்று பிரசாரம் செய்கிறார்கள். உணவுப் பஞ்சம் உண்டாகிவிட்டது என்று சொல்லிக்கொண்டு உண்ணுவிரதம் இருக்கிறார்கள். உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதற்கு கார்களிலும், ரயில்களிலும் சரக்குகளை ஏற்றினால், தண்டவாளத்தை பெயர்க்கிறார்கள். ஆட்சியில் ஏதாகிலும் அபிவிருத்தி உண்டாகி மக்கள் அதை மனப்பூர்வமாக ஆதரித்துவிடப் போகின்றார்களே, அவர்கள் மனத்தை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்படியெல்லாம் பிரசாரம் செய்கிறார்கள். எரிகிறபொழுது பிடுங்கினது மிச்சம் என்பது கொள்கையாகிவிட்டது. எந்தக் கட்சியை எடுத்துக் கொண்டாலும் இப்பொழுது கொள்கை இல்லை, யானையைக் கொடுத்துவிட்டு, அதற்குரிய மற்ற சாமான்களைக் கொடுக்காமல் இருப்பதுபோல் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டாலும், அதற்குப் பின், மொழியைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மொழிப் பிரச்னையைப்பற்றியும் ஒழுங்காக இருக்கிறார்களா என்றால் இல்லை

திரு. கோ. சி. மணி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார் எல்லாக் கட்சிகளுக்கும் கொள்கை இல்லை என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்களே ? காங்கிரஸ் கட்சிக்கு கொள்கை இல்லையா என்று கேட்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : It is not a point of order.

திரு. என். துரைபாண்டி : ஏதாகிலும் குழப்பம் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இப்படிச் செய்கிறார்கள். ஒரு மாணவனின் தகப்பனார், பிள்ளை நன்றாகப் படிக்கவேண்டும், பள்ளிக்குப் போகவேண்டும் என்று புத்திசொல்கிறார். அந்த வீட்டிலேயே இருக்கும் பல் இல்லாத பாட்டி 'எனது தகப்பனார் படிக்கவா செய்தார்கள், உத்தியோகம் செய்தார்களா ? எனது பாட்டனார் படித்தார்களா, உத்தியோகம் செய்தார்களா' என்று

6th March 1965] *[திரு. என். துரைபாண்டி]*

பேரனிடம் சொல்லுகிறாள். அப்பொழுது அந்தப் பையனுக்கு பல் இல்லாத பாட்டி நல்லவள் என்று படுகிறது, தகப்பனார் கெட்டவர் என்று தோன்றுகிறது. அந்த சூழ்நிலையைப் போல், இந்த அரசாங்கம் மாணவர்கள் நன்றாகப் படிக்கவேண்டும், பல மொழி கள் படித்து நாட்டில் முன்னேறவேண்டும் என்று சொல்லுகிறது. ஆனால், 'படிக்காதே' என்று ஒரு சாரார், பல் இல்லாத பாட்டியை போல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பையனும் பாட்டியைப் போற்றி கொண்டிருக்கிறான் வருங்கால சந்ததி களுக்கு இது அழகா, வருங்கால செல்வங்கள் இதனால் வளருமா என்பதை யோசிக்கவேண்டும். இந்த மன்றத்தில் . . .

(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. எம். எஸ். மணி: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர் களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டி, என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத் தில் சொல்ல விரும்புகிறேன். பேசிய அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் கொந்தளிப்பான சூழ்நிலை இருந்தது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலை எற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 25-ம் தேதி சம்பவத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். ஜனவரியில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் பேசப்பட்ட பொழுது குடியரசு தினத்தை துக்கதினமாகக் கொண்டாடக்கூடாது. அதற்கு முன் தினம் வேண்டுமானால் கொண்டாடி தொலைந்து போங்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். குடியரசுத் தினத்தன்று கழகத் தோழர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய வீடுகளிலே கறுப்பு கொடியை உயர்த்தி, அன்றையதினம் இந்தி ஆட்சி மொழியாவதை எண்ணி தங்கள் துக்கத்தை உணர்த்த கொடி கட்டினார்கள். அத்தனை கொடிகளும் அறுக்கப்படுவதற்கு முன்னாலே, திருச்சியில் ஒரு காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு கவிஞர் அப்பொழுது பேசினார். கூட்டத்தில் அவர் என்ன பேசினார் என்றால் 'கொடி கட்டுபவர்கள் அத்தனை பேர்களின் கையை வெட்டுங்கள், காலை வெட்டுங்கள், நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்' என்று பேசினார்கள். இந்த பாலாத்காரச் செயலைப் பற்றி திருச்சி கலெக்டரிடம் புகார் செய்திருக்கிறேன். இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கலவரங்கள் நடந்ததைப் பற்றி பல கனம் அங்கத்தினர்கள் பேசி னார்கள். உண்மையைச் சொல்லப் போனால், எவ்வளவு கொடுமை கள் நடந்திருக்கின்றன என்று புலப்படும். உதாரணமாக, முரசொலிக் கட்டிடத்தின் மீது கறுப்பு கொடி கட்டியிருக்கிறார் கள். அதை அறுத்துவிட்டு, அங்கே வேலை செய்யும் இரண்டு சப்-எடிட்டர்களையும் தாக்கி இருக்கிறார்கள். அடியார், விசுவ லிங்கம் என்ற இரண்டு பேர்களையும் தாக்கியிருக்கிறார்கள். இப்படி சப்-எடிட்டர்கள் கூடத் தாக்கப்படலாமா? ஏதோ அங்கே வேலைசெய்கிறார்கள் என்பதற்காக அவர்களையும் சேர்த்துக் கொள்வதா?

[திரு. எம். எஸ். மணி] [6th March 1965

திருச்சியில் மாணவர் போராட்டம் நடந்தது. 144-வது செக்ஷனைப் பிரயோகித்தார்கள். 5,000-க்கும் அதிகமான மாணவர்கள் ஊர்வலமாகப் போனார்கள். பெரிய கலவரம் வரும்போல இருந்தாலும், திருச்சி கலெக்டர் மிக மிகப் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டார்கள். போலீஸ்காரர்களை ஆயுதங்களையும், லத்திகளையும் வான்களிலேயே வைத்து வரச்சொல்லி விட்டு மாணவர்களுக்குப் பின்னால் அவர்கள் எங்கே போகவேண்டும் என்று கேட்டு, அவர்களை காலேஜ் வரை கொண்டு விட்டு அன்றைக்கு அமைதியைக் காப்பாற்றினார். ஆனால் அது அங்கிருந்த காங்கிரஸ்காரர்களுக்குப் பொறுக்கவில்லை. உடனே அமைச்சருக்கு தந்தி கொடுத்து, இந்தக் கலெக்டர் இதில் தலையிட வேண்டாம் என்று சொல்லி, ஒரு கலவரமான சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதன் காரணமாக மறுநாள் மாணவர்களுக்கும் போலிசாருக்கும் மோதல் ஏற்பட்டது. முதலிலே கலவரம் போஸ்டாபீசில் ஏற்பட்டது. அங்கே மறியல் செய்ய அனுமதி கொடுக்கவில்லை. அங்கே ஆந்திரா போலீசார் வைக்கப் பட்டிருந்தார்கள். போலீசார் மாணவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். மாணவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஆகவே, ஓடினார்கள். இரண்டு பர்லாங்கிற்கப்பால், கற்கள் இருந்தன. அடிபொறுக்க முடியாமல், கற்களை எடுத்து போலீசார் மீது எறிந்தார்கள். போலீசாரைத் தாக்கினார்கள். தாக்குப் பிடிக்கமுடியாமல், போலீசார் பின்னே ஓடிவந்தார்கள். அந்த ரோட்டிலே சின்ன போஸ்டாபீஸ் இருக்கிறது. அதைத் தாக்கினார்கள். போஸ்டாபீஸ் எரிந்ததற்குக் காரணம் என்ன? போலீசார் மாணவர்களை தடியால் அடித்தார்கள். கலெக்டர் தலையிட மறுத்த காரணத்தினாலே, அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. மத்தியானம் 12 மணிக்கு போஸ்டாபீஸ் தாக்கப் பட்டது. பிறகு மத்தியானம் 12 மணிக்கு மேல் துப்பாக்கி சூடு ஏற்பட்டது. அங்கே போலீஸ் பந்தோபஸ்து போட்டுவிட்டார்கள். பக்கத்தில் இருந்த ஆல் இண்டியா ரேடியோவில் பணி செய்யும் ஒரு ப்யூன் தபால் கொடுக்க பெரிய கடைவீதி வழியாக வந்தான். அந்தப் பகுதியில் ஜனங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது அவனுக்குத் தெரியாது. அந்த நேரத்தில் ப்யூன் வருவதைப் பார்த்த போலீசார் சுட்டார்கள். அந்தப் ப்யூன் செத்தான். அதுமட்டுமல்ல, அங்கே இன்னொரு தெருவில் தேவா என்ற 16 வயதுப் பையன் ஒருவனும் இறந்திருக்கிறான். இந்த இரண்டு கொலைக்கும் யார் காரணம்? என்ன காரணம்? துப்பாக்கிப் பிரயோகத்திற்கு, அதன் மேல் நடைபெற்ற போராட்டத்திற்கு வெறிபிடித்த போலீஸ் அதிகாரி ஒருவர்தான் காரணம். முதல் நாள் நடந்த தாக்குதலுக்காக, ஐந்து பேரையாவது சுடுவேன் என்று சொல்லி சுட்டிருக்கிறார் அந்த அதிகாரி. அப்படிச் சுடுகிற நேரத்தில் நானும், நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும், டி.ஐ.ஜி. அவர்களும் கலெக்டர் வீட்டில் இருந்தோம். இந்த நிலவரங்களைச் சமாளிக்க நாங்களும் வெளியே போக முடியவில்லை. வெளியே வந்தால் தடைசெய்யப்படும் நிலைமை இருந்ததால், நாங்களும் போகமுடியவில்லை. இதைக் குறித்துத்

6th March 1965] [திரு. எம். எஸ். மணி]

தான், திருச்சியிலே தமிழ் அறிஞர் விசுவநாதன், "நம்முடைய பக்தவத்சலம் ஆட்சியிலே வெளியில் இருப்பதைவிட உயிருக்கு அபாயம் இல்லாமல் உள்ளே இருப்பது மேல்" என்று சொன்னார்கள். அதற்காக அவர் இன்றைக்கு சிறைச்சாலையில் இருக்கிறார். அது மட்டுமல்ல, திருச்சியிலே எந்த அச்சகத்திலேயும் எந்த நோட்டீசும் போடமுடியாது. அப்படிப் போலீசார் அச்சக முதலாளிகளை பயமுறுத்தியிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டாமா? திருச்சியிலே கலவரம் செய்தவர்கள் ரௌடிகள், மதுரையிலே கலவரம் செய்தவர்கள் ரௌடிகள், கோவையிலே கலவரம் செய்தவர்கள் ரௌடிகள் என்று சொன்னால், இந்தப் பதினேழு ஆண்டுக் காலத்திலே உங்கள் ஆட்சியில் ரௌடிகளைத் தான் உற்பத்தி செய்து கொண்டிருந்தீர்களா? இதை மாற்ற முடியாதா? நமது முதல் அமைச்சர் சற்றுப் பொறுமையாக அமைதியாக, அறிக்கை கொடுக்காமல் இருந்திருந்தால், கலவரம் இந்த அளவுக்கு ஏற்பட்டிருக்காது. கலவரம் செய்தவர்கள் ஒரு புறம் இருக்க, அப்பாவிகளான ரிக்ஷாக்காரர்களைப் பிடித்து சிறையில் அடைத்திருக்கிறார்கள் போலீசார்கள். கேட்டால், போலீசாரே மனச்சாட்சியை விற்றுவிட்டுத்தான், இப்படிச் செய்கிறோம் என்று பகிரங்கமாகக் கூறுகிறார்கள். வழக்குப் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆதலால் இன்றையதினம் அப்பாவிகளின்மீது வழக்குகள் நடைபெறுகின்றன. போலீசார் திறமைசாலிகள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அப்படி இருக்கும்போது, ராணுவத்தை வரவழைக்கக் காரணம் என்ன? இது சரியானதா? இம்மாதிரிப் பயன்படுத்தி விட்டால், எதிர் காலத்தில் நிலைமை மாறினால் அதற்கு யார் பொறுப்பு? எனவே இம்மாதிரி அடக்கு முறையைக் கையாண்ட முதல் அமைச்சரை "வைர நெஞ்சம் படைத்தவர், இரும்பு இதயம் கொண்டவர்" என்று பாராட்டுகிறார்கள். எனவே முதலமைச்சர் இங்கே இருப்பதை விட, சைனாக்காரனை விரட்ட அவரை ராணுவ தளபதியாகப் பணியாற்ற எல்லைக்கு அனுப்பிவைக்கலாம் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் நினைக்கிறார் போலும்; மாமியார் மெச்சுவதற்காக, தாயாரைத் தடியால் அடித்த தர்மவானைப் போல, டெல்லியின் பாராட்டுதலைப் பெறுவதற்காக நம்முடைய முதலமைச்சர் இப்படிப்பட்ட காரியத்தில் இறங்கிவிட்டார்கள். எதிர் காலத்தில் இதன் பலன்களை அனுபவித்தே ஆக வேண்டும். (மணி அடிக்கப்பட்டது). கடைசியாக ஒன்றே ஒன்று. சபையிலே பேசிய கனம் ஆளுங்கட்சி அங்கத்தினர்கள், தங்களைத் தவிர யாரும் இந்த நாட்டை ஆளுவதற்கு இல்லை என்று சொன்னார்கள். அது எப்படி இருக்கிறது என்றால், ஊதுவத்தி ஸ்டாண்ட் நம்மால் தான் ஊதுவத்தி எரிகிறது என்று நினைத்ததாம். அதுபோலத் தான், இந்தியாவே நம் கையில்தான் இருக்கிறது என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள் போலும். இப்பொழுது கேரளாவில் முடிவு தெரிந்திருக்கிறது. எனவேதான் சொல்லுகிறேன், ஜனநாயகத்திற்கு மதிப்பு அளிக்கவேண்டுமென்று.

[திரு. எம். எஸ். மணி] [6th March 1965

இந்த சந்தர்ப்பத்திலே இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். கலைஞர் கருணாநிதி சற்று ரத்தக் கொதிப்பு உள்ளவர் என்பது முதல் அமைச்சருக்குத் தெரியும். அவர் கண் நோய் உள்ளவர் என்பதும் தெரியும். அப்படி உடல் பாதிக்கப்பட்ட ஒருவரை, சட்டசபையில் எங்கள் கட்சி துணைத்தலைவரை, பாளையங் கோட்டைச் சிறையில் வைத்திருககிறீர்கள். அங்கே பெரிய ஆஸ்பத்திரி கிடையாது. மருத்துவ வசதி கிடையாது. ஆகவே, ஜெனரல் ஆஸ்பத்திரி உள்ள பகுதியில் அவர்களை வைக்க வேண்டும். இல்லையென்றால், அவருடைய உயிருக்கு ஏதாவது அபாயம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டால், என்ன நிலைமை ஏற்படும் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. வீ. ராமனுதன் : கனம் அங்கத்தினர், கேரளாவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை என்ன என்று அறிவிப் பார்களா ?

(பதில் இல்லை).

* **திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர் :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 1965-66-க்கான வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது, 4, 5 நாட்களாக விவாதம் நடக்கிறது. வரவு செலவு திட்டத்திலே குறிப்பாக யாரும் ஒன்றும் அதிகமாகச் சொல்லவில்லை. ஆகவே, வரவு செலவு திட்டத்தில் எந்தவித மான குறைபாடுகளும் இருப்பதாகத் தெரியவில்லை. அதை ஏக மனதாக எல்லோரும் ஒப்புக்கொண்டு விடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஓட்டு எடுக்க வேண்டிய அவசியம் கூட இருக் காது என்று நினைக்கிறேன்.

ஆகவே, சமீபத்தில் நாட்டிலே நடந்த கிளர்ச்சிகளைப் பற்றித் தான் பேச வேண்டியிருக்கிறது. அப்படி சம்பவங்கள் நடந்த இடங்களில் மணப்பாறையும் ஒன்று. மணப்பாறையில் நடந்த வற்றை நான் நேரில் பார்க்கவில்லை. ஒன்பதாம் தேதி இரவு மாணவர்கள் 'நாளைக்கு ஒரு போராட்டம் நடத்தப்போகிறோம், ஊர்வலம் நடத்தப்போகிறோம்' என்று சொன்னார்கள். அங்கே இருப்பது ஹைஸ்கூல்தான். ஒரு பெரிய காலேஜும் இல்லை. 'ஹைஸ்கூல் மாணவர்கள் ஊர்வலம் போகவேண்டும், நாளைக்கு உங்களுக்கும் ஒரு மாலை போட்டு, நீங்களும் நாங்கள் சொல்வதைச் சொல்லவேண்டும்' என்று ஒருசிலர் என்னிடம் சொன்னார்கள். நான் அன்று 5½ மணிக்கே ஊருக்குப் போய்விட்டேன். மணப் பாறையிலிருந்து கிராமத்திற்குச் சென்றேன். அங்கே கிராமத்தி லும் சில வாலிபர்கள், மாணவர்கள் அல்ல, பெரிய வாலிபர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வாலிபர்கள்தான் என்னிடம் அதேமாதிரியே சொன்னார்கள். நான் அங்கிருந்து தோட்டத்திற்குப் போய்விட்டேன். வெளியிலே போகச் சந்தர்ப்பம் இல்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்து பார்த் தால், ஊரில் உள்ள போஸ்டாபீஸ் கொளுத்தி எரித்து விடப்

6th March 1965] [திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்]

பட்டிருந்தது. அதையெல்லாம் செய்தது மாணவர்கள் அல்ல. எல்லாம் இந்த வாலிபர்கள்தான், என்று பக்கத்தில் இருந்தவர் கள் சொன்னார்கள். மணப்பாறைக்கு வந்தேன். அங்கே என்ன நடந்தது? அவர்கள் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். குறிப்பாக, நான்கைந்து பேர்கள் ரயில் வருவதைத் தேக்கி இருக்கிறார்கள். எப்படித் தேக்கியிருக்கிறார்கள்? மாணவர்கள் திருச்சியிலிருந்து அந்த ரயிலில் ஏறிவந்ததாகச் சொல்கிறார்கள். மணப்பாறையிலுள்ள மாணவர்கள் கொஞ்சம் பேர்கள் அங்கே போனதாகச் சொல்கிறார்கள். 'சமூக விரோதிகள்' என்று சொல்கிறார்களே, அவர்கள்தான் போய் இன்ஜினிலே ஏறிக் கொண்டார்களாம். டிரைவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "டிரைவர், இன்ஜினை நிறுத்து" என்றும், "டிரைவர், இன்ஜினை ஓட்டு" என்றும் உத்தரவிட்டார்களாம். "அப்படி ஓட்டி நிறுத்து முடியாது, ஓட்டு என்றால் ஓட்டுகிறேன், நிறுத்து என்றால் நிறுத்து கிறேன்" என்று டிரைவர் கும்பிட்டுக் கேட்டிருக்கிறார். "நிறுத்து என்றவுடன் நிறுத்தவேண்டும்" என்று சொல்லி, அவருடைய மண்டையில் கல்லால் அடித்து ரத்தம் ஒழுகியிருக் கிறது. லோகல் டெபுடி சூபரின்டென்டு ஆப் போலீஸ் பரிசுத்த மானவர். அவர் மெட்ராசிலிருந்து புதிதாக அங்கே மாற்றலாகி யிருக்கிறார். அவர் ரயிலில் மாட்டிக்கொண்டார். அவர் எவ்வளவோ கும்பிட்டுப் பார்த்திருக்கிறார். முடியவில்லை. ஸ்டேஷனுக்குப் போனவுடனே ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் உட்கார்ந்து கொண்டார் அங்கே உட்கார்ந்து கொண்டதைப் பார்த்து ஸ்டேஷனுக்கு மேலே ஏறி, ஓட்டைப் பிரித்து மேலே போட்டிருக் கிறார்கள், டெபுடி சூபரின்டென்டு ஆப் போலீஸ் வெளியே வந்துவிட்டார். 'கைது செய்த மாணவர்களை விடுதலை செய்ய வேண்டும்' என்று முன் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் அந்தப் பெரிய மனிதர்கள் என்று சொல்லக்கூடியவர்கள். அவர்கள் மாணவர்கள் அல்ல. விடுதலை செய்யவில்லையென்றால் ஏதேதோ செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள் அந்தப் பெரிய மனிதர்கள். மணப்பாறையில் அன்று சந்தை. பொள்ளாச்சி சந்தைக்கு அடுத்த பெரிய சந்தை மணப்பாறை சந்தை. பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடக்கூடிய சந்தை நாள் அது. அந்த போலீஸ் அதிகாரியை 'மார்ச் செய்' என்று சொல்வதும் மார்ச் செய்யும்போது, 'நில்' என்று சொல்வதும், அவருடைய தொப்பியைத் தொடுவதும், 'ஐ ஆம் ஸாரி' என்று சொல்வதும் இப்படியெல்லாம் செய்திருக்கிறார்கள் அங்கே. எனக்கு இங்கி லீஷ் தெரியாது. அங்குள்ளவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். அந்தத் தொப்பியை எடுத்து அவருடைய கையில் கொடுப்பதும், கையில் கொடுத்ததைப் பிறகு பிடுங்கித் தலையிலே வைப்பதும், இப் படியெல்லாம், அவரை எவ்வளவு அவமானப்படுத்த முடியுமோ அவ்வளவு அவமானப்படுத்தி அவரைப் போலீஸ் ஸ்டேஷனிலே விட்டிருக்கிறார்கள். அவர்கள் எதுவும் சொல்வதற்கு முன்னால், அந்தப் பெரிய மனிதர்கள் ஸப்-ஜெயிலிலே ஏறி ஓட்டைப் பிரித்து விட்டார்கள். கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த மாணவர் கள் வெளியே வந்துவிட்டார்கள். இதற்கிடையிலே, ஸ்டேஷன்

[திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்] [6th March 1965

மீது கற்களை வீசியெறிய ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு தான் இரண்டு கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் போலீசார் போட்டார்கள். அதற்கு அரை மணிக்குப் பிறகு, ரயில்வே ஸ்டேஷனைக் கைப்பற்றிவிட்டோம், இனிமேல் போலீஸ் ஸ்டேஷனைக் கைப்பற்ற வேண்டும் என்று கற்கள் வீசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தான் ஷூட்டிங் நடந்தது. ஏதோ நல்ல வேளையாக, அங்கே அதிகமாகச் சாகவில்லை. ஷூட்டிங்கையும் நிதானமாகச் சுட்டிருக்கிறார்கள். இதற்குப் பிறகு 'வான்' வந்திருக்கிறது. இரயில்வே கேட்டைக் காலிகள் பூட்டிச் சாவியைக் கையிலே வைத்துக் கொண்டுவிட்டார்கள். அதன் காரணமாக, அந்த 'வான்' திரும்பிப் போய்விட்டது. அதை மறந்துவிட்டார்கள். பிறகு பெத்தமேட்டு பட்டியில்போய், சிலவற்றைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள். ஸப்-இன்ஸ்பெக்டர் பயந்து, பக்கத்து ஊரிலே போய் ஒரு வீட்டில் மறைந்துகொண்டார். அந்தக் குண்டர்கள், அந்த ஊருக்குள்ளே, அந்த வீட்டிலே போய், அந்த ஸப்-இன்ஸ்பெக்டரையும், இரண்டு போலீஸ்காரர்களையும் அந்த வீட்டிலே அடைத்து விட்டார்கள். அந்த வீட்டைப் பிரிப்போம், இடிப்போம் என்றெல்லாம் பயமுறுத்தியிருக்கிறார்கள். அந்த ஊரில், ஒரு சமூகத்தார் கட்டுப்பாடாக வசிக்கும் ஊராகும். அது கிறிஸ்துவ சமூகத்தார் வசிக்கும் ஊர். அந்த ஊரில் ஓரிடத்தில் இரண்டு அபாய அறிவிப்பு மணிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு மணிகளும் சேர்ந்தாற்போல் ஒலித்தால், அந்த ஊரில் இருக்கிற 500 பேர்களும், ஒரு மைலுக் கப்பால் எங்கிருந்தாலும், தடிக் கம்போடு வரவேண்டுமென்ற நியதி இருக்கிறது. நெருப்பு, திருட்டு போன்ற சம்பவம் ஏற்படக்கூடிய நிலை அந்த ஊரில் ஏற்படும்போதெல்லாம் அந்த மணிகளை அடிப்பதுண்டு. அந்தப் பழக்கத்தில், அந்த வீட்டுக்காரர் அந்த இரண்டு மணியையும் அடித்துவிட்டார். அந்த ஊரில் உள்ள எல்லோரும், கம்யூனிஸ்டுக் கட்சியாக இருந்தாலும், வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும், அந்த ஊர்க் கட்டுப்பாட்டின்படி, தடிக் கம்புகளுடன் வந்து, விரட்டியடித்துவிட்டார்கள். அவர்கள் ஓடிவிட்டார்கள். அதோடு அவர்கள் பந்தோபஸ்து செய்து ஸ்டேஷனுக்கு அனுப்பி விட்டார்கள். இதற்குள்ளே, போஸ்ட் ஆபீசைக் கொளுத்தி, ஓட்டைப் பிரித்து, ஜன்னல் கம்பிகளை அறுத்துவிட்டார்கள். அதைச் செய்ததும் அந்தப் பெரிய வாலிபர்கள்தான். இதையெல்லாம் முன்னேற்றக் கழகம்தான் சொன்னது. நான் சொல்லத் தயாராயில்லை. பக்கத்திலே இருக்கும் கிளைக் கழகங்கள் சேர்ந்து கூடி, "திராவிட முன்னேற்றக் கழகத்தார் மணப்பாறையில் செய்த வன்முறைச் செயலால் நாங்கள் கிளைக் கழகத்தைக் கலைத்துவிட்டோம்" என்று செயற்குழுவினர் கூடி, அறிக்கை விட்டுவிட்டார்கள். அது மத்தியக் கழகத்திற்கும் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். பக்கத்தில் இருக்கும் முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகங்களைக் கலைத்துவிட்டு, 'திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் வன்முறைச் செயலால் நாங்கள் அதிலிருக்கும் பொறுப்பிலிருந்து ராஜீனாமா செய்துவிட்டோம்' என்று அவர்கள் அறிக்கை விட்டார்கள்.

6th March 1965] [திரு. என். பி. எம். சின்னய்யா கவுண்டர்]

நோட்டீஸ் நிறைய விட்டார்கள். நான் இரண்டு நோட்டீஸ் பார்த்தேன். அந்த நோட்டீஸ் மத்தியக் கழகத்திற்கு வந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது.

'முதலமைச்சர் அவர்கள் ராஜினமா செய்யவேண்டும்' என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னர். 'முதலமைச்சர் பஜனை செய்யட்டும்' என்று சொன்னர் இன்னெரு கனம் அங்கத்தினர். 'முதலமைச்சர் இராணுவத் தளபதியாகலாம்' என்று வேறேரு கனம் அங்கத்தினர் சொன்னர். இதிலிருந்தெல்லாம் என்ன தெரிகிறது? நன்கு அனுபவம் வாய்ந்த, சாமர்த்தியம் வாய்ந்த இந்த முதலமைச்சர் பதவியில் இருக்கும்போது, எப்படிக் கிளர்ச்சி செய்தாலும் அவர் கண்டுபிடித்து விடுவார், நடைபெற்ற கலவரத்தையெல்லாம் சீக்கிரமாக அவரால் அடக்க முடிந்தது என்று அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறர்கள். அதனல்தான், அவரைப் பஜனைக்குப்போகச் சொல்வதும், இராணுவத்திற்குப் போகச் சொல்வதுமாக இருக்கிறர்கள். எப்படியாவது அவரைப் பதவியிலிருந்து போகச்செய்யவேண்டுமென்று பார்க்கின்றர்கள். முன்பிருந்த முதலமைச்சரே தேவலை என்று சொல்கிறர்கள். தற்போதைய முதலமைச்சர் அவர்கள் இருபது வருஷ அனுபவம் வாய்ந்தவர். இவரே பதவியில் இருந்துகொண்டிருந்தால், எந்தக் கலவரத்தையும் அடக்கிவிடுவார் என்று தெரிந்து கொண்டிருக்கிறர்கள். அவரிடம் எதுவும் பலிக்காது என்று தெரிந்துகொண்டிருக்கிறர்கள். நாட்டு மக்கள் அவரிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறர்கள் என்றும் அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறர்கள். ஆகவேதான், பஜனைக்குப் போ, இராணுவத்திற்குப் போ என்று அவரைப் பார்த்துச் சொல்கிறர்கள். நம்முடைய முதலமைச்சர் இதற்கெல்லாம் பயப்படக்கூடியவர் அல்ல. இன்னும் ஐந்து வருஷம் வேண்டுமானலும் அவரால் இருக்க முடியும். எந்த மந்திரிசபையிலும் அவர் மந்திரியாக இருந்திருக்கிறர். ஆகவே, அவர் அனுபவமிக்கவர். சமீபத்தில் நடந்த சமூக விரோதச் செயல்கள் எதனல் ஏற்பட்டது என்பது எல்லோரும் யோசித்து, முடிவு கட்டவேண்டிய விஷயம். சமூக விரோத சக்திகள் யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். . . (மணி அடிக்கப்பட்டது).

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார். முதலமைச்சர் அவர்களை வேண்டுமென்றே, தவறுதலாகவோ பஜனை மடத்திற்குச் செல்லவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இருதய பூர்வமாகச் சொன்ன வார்த்தையைத் திசை திருப்பிவிடவேண்டாமென்று நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

*** திரு. பி. ஜயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல முன் வருகின்றேன். தமிழகத்தில் கடந்த மாதம் 25-ந் தேதிக்குப் பிறகு என்ன என்ன கோளாறுகள் நடைபெற்றன என்பதைப்பற்றி

[திரு. பி. ஜயராஜ்] [6th March 1965

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். இந்த நாட்டிலே மொழிக் கொள்கையை வைத்து, மாணவர்களை முன் வைத்து, மாணவர்கள் ரூபத்திலே பல கிளர்ச்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. கிளர்ச்சிகள், எரிப்புகள் எல்லாம் நடைபெற்றன. இந்தி தமிழகத்திற்கு வேண்டியதில்லை என்ற உணர்ச்சியை மாணவர்கள் வெளிப்படுத்தும் வண்ணம் ஊர்வலம் வருவதென்பது சம்பிரதாயத்திற்குரியதே. இருப்பினும் இந்த நாட்டிலே ரயில்வே ஸ்டேஷன்களையும், தபாலாபீஸ்களையும், சர்க்காருக்குச் சொந்தமான பஸ்களையும் கொளுத்தி சேதப்படுத்துவதென்றால், அதை எந்த அரசாங்கமும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அத்தகைய நிலைமை ஏற்பட்ட பிறகு, இந்தத் தமிழகத்தில் அதிகமான அளவுக்குப் பொருட்சேதம் ஏற்பட்டாலும் கூட, அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், தனிப்பட்ட நபருக்கும், அவர்களுடைய பொருளுக்கும், உயிருக்கும் அதிகச் சேதம் ஏற்பட்டுவிடுமே என்ற காரணத்தால், நமது முதலமைச்சர் அவர்கள் நமது மாநில போலீஸ்காரர்களை வைத்து ஓரளவுக்கு நிலைமையைச் சமாளித்துப் பார்த்தார்கள். ஆனால், மாணவர் ரூபத்தில் மாற்றுக் கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சிக்காரர்களும் செய்திருக்கும் அக்கிரமங்களை அவர்கள், இன்று வரையில் ஒப்புக்கொள்ளவில்லை. 'நாங்கள் இல்லை' என்று சாமர்த்தியமாகச் சொல்கிறார்களே தவிர, 'எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் செய்திருக்கலாம்' என்று அவர்களில் யாரும் ஒப்புக்கொள்வதற்கு முன்வருவதில்லை. காரணம், எனது தொகுதியைச் சேர்ந்த ஒரு ஊரில், இடதுசாரிக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒருவர் காங்கிரஸ் கொடி பறந்துகொண்டிருந்ததை மாணவர்களைத் தூண்டிவிட்டு, கொடியை இறக்கச் செய்து, அந்த இடத்தில் கறுப்புக் கொடியை ஏற்றச் சொல்லியிருக்கிறார். அதிலே இரண்டு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சேர்ந்திருக்கிறார்கள். அதைப் பார்த்தபோது, அங்கிருந்த பொது மக்கள், போலீசாருக்கு ரிபோர்ட் செய்த பிறகு, உடனே சப்-இன்ஸ்பெக்டர் வந்து விசாரித்து யார் என்று கண்டு பிடித்தார். அப்பொழுது மாணவர்கள், "கறுப்புக் கொடி எங்களிடம் இல்லை. கடை வைத்திருந்த அவர் கறுப்புக் கொடி கொடுத்து ஏற்றச் சொன்னார். நாங்கள் ஏற்றினோம்" என்று சொன்னார்கள். மாணவர்களையும் பெற்றோர்களையும் வரவழைத்து, கறுப்புக் கொடியை இறக்கிவிட்டு, அங்கே திரும்பவும் காங்கிரஸ் கொடியை ஏற்றவேண்டும் என்று சொன்னதும், புதிதாக கொடியை வாங்கிக்கொண்டு, அந்தக் கொடியை ஏற்றினார்கள். ஆக, அந்தச் செயலுக்குக் காரணமாக இருந்தவர் இடது சாரிக் கம்யூனிஸ்டுகள். குறிப்பாகப் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. டெபுடி சூபரின்டென்டு ஆப் போலீஸிடம் அந்தத் தகவல்கள் இருக்கும். அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரும், 'எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் ஒன்றும் செய்யவில்லை, எங்கள் கட்சி சம்பந்தப்படவில்லை' என்று சொல்வதென்றால், அது எவ்வளவு உண்மைக்கு மாறானதாக இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படிச் செய்திருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியுமா? இப்படிச் செய்தால்

6th March 1965] [திரு. பி. ஜயராஜ்]

நாட்டிலே சுமுக நிலையை எப்படிக் காண முடியும்? "நமது முதல் அமைச்சர் அவர்கள் தான் குற்றம் செய்தார், அதனால் அவர்கள் தான் உடனடியாக ராஜினாமா செய்யவேண்டும்" என்று சில நண்பர்கள் சொல்கிறார்கள். திருவண்ணாமலைத் தொகுதியைச் சார்ந்த கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, "ஒன்றே ஒன்று சொல்கிறேன்" என்று சொன்னபோது, அவர் ஏதோ பெரிய ஒரு திட்டம் கொடுக்கப்போகிறார் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். அவர் அப்படியொன்றும் திட்டம் கொடுக்கவில்லை. "ஒன்றே ஒன்று சொல்கிறேன், அதுவும் இன்றே சொல்கிறேன், தயவு செய்து ராஜினாமா செய்யுங்கள்" என்று சொன்னார்கள். முதலமைச்சர் ராஜினாமா செய்வதின் மூலமாக அவர்கள் அடுத்த மந்திரி சபை அமைத்து விடலாம் என்று எண்ணுவாரானால் அது முடியாத காரியம் என்று நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். காரணம், நாட்டில் நிறைவேற்றப்படும் நல்ல திட்டங்கள் மக்களுக்குத் தெரியும். அவர்கள் நகரங்களைப் பொறுத்த மட்டிலும்தான் கணக்கெடுத்துப் பார்க்கிறார்கள். கிராமங்களிலே சென்று பார்த்தால், இந்தி என்பது என்ன என்று அங்குள்ள அவர்களுக்குப் புரியவில்லை. 12-00 noon. தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று சொல்வதன் மூலம் ஒரு பீதியை உண்டாக்கிவிட்டார்கள். அதன் காரணமாக மாணவர்கள் எதிர்ப்பு கோஷங்களைப் போட்டுக்கொண்டு கிளம்பியபோது அதை வன்முறைப் போராட்டமாக மாற்றியது எதிர்க் கட்சிக்காரர்கள் தான் என்றால் அதில் பிழை இல்லை. திடீரென்று இத்தகைய ஒரு கலவரத்தை, குழப்பத்தை உண்டாக்கினால் சர்க்கார் ஸ்தம்பித்துவிடும் என்று அவர்கள் எண்ணினார்கள். இதன் மூலம் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்திவிடலாம் என்று கனவு கண்டார்கள். அது முடியாது போய்விட்டது. அரசியல் கட்சிகளின் சூழ்ச்சிக்கு மாணவர்கள் இலக்காகிவிட்டார்கள் என்ற காரணத்தினால் சர்க்கார் அவர்களிடத்தில் அனுதாபத்தோடு நடந்து கொள்வதைக் கண்டு மாணவர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. கலாசாலைகளும், பள்ளிகளும் இம்மாதம் 8-ஆம் தேதி திறக்கப்படுகிறபோது அவர்கள் அமைதியாகச் செல்லவேண்டும். வருங்காலத்தில் பெரிய அறிஞர்களாகவும், தலைவர்களாகவும் வருவதற்கு ஏற்றபடி பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் எந்த மொழியைக் கற்று நேருஜி அவர்கள் உலகம் எல்லாம் புகழக்கூடிய தலைவராக ஆனார், மகாத்மாஜீ அவர்களும், விவேகானந்தர் அவர்களும் எந்த மொழியின் மூலம் உலகப் புகழ் பெற்றார்கள் என்பதாகக் கேட்டார்கள். நாம் அதை உணர்ந்து கொள்ளாமல் இல்லை. அந்த மொழியைக் கற்றுக்கொள்ள தண்டனையும் விதிக்கவில்லை. ஆனாலும் பாரத தேசத்திற்கு என்று ஒரு மொழி வேண்டாமா? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாம் இந்திதான் இந்த தேசத்தின் தேசிய மொழி என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய தினம் ஆங்கிலம்தான் தேசிய மொழி என்றால் பிற நாட்டவர்கள் நம்மை என்ன நினைப்பார்கள்? ஆகவே முடியாத காரியத்தைப்பற்றிப்

[திரு. பி. ஜயராஜ்] [6th March 1965

பேசிக்கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. நா. இராசாங்கம்** : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்தச் சபையில் நடைபெறுகிற பட்ஜெட் விவாதத்தில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களுமே பட்ஜெட்டைப்பற்றிப் பேசாமல் இரண்டு வாரத்திற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியே பேசினார்கள். காரணம் என்ன? இந்த மொழிப் பிரச்சினை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது. இந்திதான் இந்த தேசத்தின் ஆட்சிமொழி என்பது கருத்தரங்கு மூலமாக எழுப்பப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பிரச்சினை அல்ல. நான்கு பெரிய மனிதர்கள் கூடி ஆங்கிலேயன் போன அந்தச் சமயத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிற விருவிருப்பில் இந்திதான் தேசிய மொழி என்று வைத்துவிட்டார்கள். இதுபற்றி எல்லாத் தரப்புக் கருத்துக்களையும் நன்கு கேட்டு அறிந்து செய்தார்கள் என்று சொல்ல முடியாது. நாட்டுக்கு எல்லை எது என்று தெரியாமல் அவசரம் அவசரமாக, ஆட்சி கிடைத்ததே என்று ஆட்சி பீடத்தில் ஏறிய அவர்களுக்கு இந்த மொழிப் பிரச்சினை எவ்வளவு சிக்கலானது, இதை எவ்வளவு ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று யோசிக்கக்கூட நேரம் இல்லை என்றால் அது தான் உண்மை. அதற்குப் பிறகு இதுபற்றி இன்னும் பதினைந்து வருடங்களுக்குப் பிறகுதானே இந்தி வரப் போகிறது என்று சொல்லி வந்தார்கள். பதினைந்து வருடத்திற்குப் பிறகு வரும் என்று சொல்லிவரப்பட்டபோதே இதை எதிர்த்து வந்தார்கள் மக்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தமிழுக்காகப் பாடுபட்டு வருகிறது என்று சொன்னால் அதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. காங்கிரஸ்காரர்கள் தமிழுக்காகப் பாடுபட வில்லையா? அவர்கள் தாய் மொழி இல்லையா? அவர்கள் தமிழர்கள் இல்லையா? தமிழர்களுடைய தமிழ் வேதத்திலும், தேவாரம், திவ்யப்பிரபந்தம் ஆகிய நூல்களிலும் நல்ல தேர்ச்சியும், அனுபவமும் உள்ள நமது முதல் அமைச்சர் அவர்கள் தமிழர் இல்லையா? அவருக்கு மட்டும் தமிழ்ப்பற்று இல்லையா? ஏதோ இன்றைய தினம் அவர்கள் இருக்கிற கட்சியின் கொள்கை அது என்ற காரணத்தினால் கட்டுப்பட்டு இருக்கலாமே தவிர இன்றையதினம் அவர்கள் மட்டும் இந்தித் திணிப்பை மனப்பூர்வமாக விரும்புகிறார்களா? ஆகவே இந்தித் திணிப்புப் போராட்டம் என்பது யாரும் தூண்டிவிட்டு, தலைமை தாங்கி நடத்திய போராட்டம் அல்ல. எடுத்துச் சொல்ல முடியாமல் நாமே கட்டுப்பட்ட காரணமாக எழுந்த மக்கள் எழுச்சிதான். இதை யாரும் மறுக்க முடியாது. இந்தியை எதிர்ப்பவர்கள் இன்றைக்குக் காங்கிரஸ் கட்சியில் இல்லையா? ஆகவே சும்மா இங்கே அந்தக் கட்சி கிளப்பிவிட்டது, இந்தக் கட்சி கிளப்பிவிட்டது என்று உண்மையைப் புரிந்து கொள்ளாமல் சொல்லுவதில் பயன் இல்லை.

என்னைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும், நான் என்ன ஒரு ரௌடியா? கொலையாளியா? எனக்குக் கொலை செய்யும் சக்தி இருக்கிறதா? வீட்டில் நான் படுத்துக் கொண்டிருந்தேன். பிற்

6th March 1965] [திரு. நா. இராசாங்கம்]

பகல் 2 மணிக்கு போலீஸ்காரர் ஒருவர் என் வீட்டிற்கு வந்து "ஐயா உங்களைப் பார்க்க வேண்டும் என்கிறார்." என்றார். "யார் ஐயா?" என்று கேட்டதற்கு 'சப் இன்ஸ்பெக்டர்' என்றார். படுக்கையில் கிடந்த என்னை வலுக்கட்டாயமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். அங்கே இருந்த சப் இன்ஸ்பெக்டர் "ஊரில் இந்தி சம்பந்தமாகக் கலவரம் ஏற்படும் போல் இருக்கிறது. நீங்கள் இரண்டு நாள் இங்கேயே இருக்க வேண்டும்" என்றார். வெளியில் இருப்பதைவிட அங்கு இருப்பதே மேல் என்று தங்கினேன். மறு நாள் காலையில் செய்தித் தாளில் என்ன செய்தி வந்தது? "குறிஞ்சிப்பாடி தொகுதி எம்.எல்.ஏ. ராஜாங்கம் அவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கி வந்து சர்க்கார் அலுவலகங்களில் இருந்தவர்களை வேலை செய்ய ஒட்டாமல் தடுத்தார், மாணவர்களைத் தூண்டிவிட்டார், அவர் போலீசாரால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்" என்கிற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்துள்ளது, இதை நான் சிறைச் சாலைக்குள் இருந்து கொண்டே பார்க்கிறேன். இதுதான் நியாயமா? உள்ளபடியே சொல்கிறேன். நமது முதல் மந்திரி அவர்கள் ஆட்சி என்பது அல்ல, யார் ஆண்டாலும் இத்தனை அநீதியாகக் கொடுமைப்படுத்துகிற ஆட்சி எதுவாக இருந்தாலும் அது தானே அழிந்துதான் போகும். இந்த அக்கிரமங்களுக்கு எல்லாம் காரணம் இந்தச் சர்க்காரா? இல்லை. காங்கிரஸ் கட்சி தான். ஒரு கட்சி தன் இஷ்டப்படி சர்க்காரை ஆட்டிவைக்க முடியும் என்றால் சர்க்கார் சிப்பந்திகளைக் கொண்டு தம் இஷ்டப்படி கொடுரங்களை நாட்டில் விளைவிக்க முடியும் என்றால் நாட்டில் ஜனநாயகம் எங்கே இருக்கிறது? சட்டம், நீதி என்பது எல்லாம் எப்படி இருக்க முடியும்? இன்றைக்கு அவர்கள் அப்படிச் செய்யலாம். நாளைக்குப் பதவிக்கு வரக்கூடிய கட்சியும் இதேமாதிரியாகச் செய்வது என்றால் நாடு என்ன ஆகும்? நிர்வாகம் என்ன ஆகும்? இதுதான் ஜனநாயக நிர்வாகமா? எந்தக் கட்சியாக இருந்தாலும் இந்த மாதிரியாக அரசாங்கத்தை ஆட்டி வைப்பது என்றைக்கும் கெடுதியானது, எல்லோருக்கும் ஜனநாயகம் நன்றாகச் செயல்படவேண்டும் என்பதில் பொறுப்பு இருக்கிறது. எல்லோருக்கும் அமைதி தேவை. கட்சி, கட்சிக்கட்டுப்பாடு என்பதற்காக மனச் சாட்சியைக் கொன்றுகொண்டா பேச முடியும்? நான் என்னுடைய மனச்சாட்சி பூர்வமாகச் சொல்கிறேன், எங்கள் கட்சிக்கும் நாட்டில் நடந்த சம்பவங்களுக்கும் பொறுப்பு துளிக்கூட இல்லை. கட்சி மெஜாரிட்டியை வைத்துக் கொண்டு மக்கள் கருத்தை அறிந்து கொள்ளாமலே, அவர்களை அடக்கிவிடலாம் என்று நினைத்த ஆதிக்க மனப்பான்மையை எதிர்த்து எழுந்த மக்கள் எழுச்சிதான் இது. இந்தித் திணிப்பை மக்கள் எதிர்க்கிறார்கள், காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களே எதிர்க்கிறார்கள். ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டுக்காக பேசும்போது வேதாந்தம் பேசி என்ன பயன்? வேதாந்தமா நிற்கும்? நேருஜி அவர்கள் இருக்கும்போதே மக்கள் இதை எதிர்த்து வந்திருக்கிறார்கள். அவர்களும் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்பதற்கு வாக்குறுதி கொடுத்தார்கள். நாம் கேட்பது வெறும் வாக்குறுதிகள் தானா? சட்டம். நாம் கேட்பது சட்டத்தின் மூலம் ஏற்

[திரு. நா. இராசாங்கம்] [6th March 1965

படுத்திக் கொடுக்க வேண்டிய உறுதி. சட்டம் இல்லையென்றால் நாங்கள் இங்கே இப்போது உட்கார்ந்திருக்க முடியுமா? நீங்கள் 138 பேர்கள் என்பதனால் காங்கிரஸ்காரர்கள் அங்கே உட்கார்ந்து ஆட்சி செலுத்த முடியுமா? சட்டம் ஒழுங்கான முறையில் வரையறை செய்யப்படவேண்டும் என்று கேட்க உரிமை இல்லையா? மாணவர்கள் என்றால் யார்? அவர்களை என்னமோ அப்படி இப்படி நினைத்துப் பேசுவது மிக மிக வருத்தமாக இருக்கிறது. எம்.ஏ., பி.ஏ., பி.எல்.; படிக்கிறவர்களுக்கு எல்லாம் நாமா போய்ச் சொல்லித்தர முடியும்? அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இன்னது செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறார்கள். அவர்கள் மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நடக்கிறார்கள் என்று சொல்வதற்கு அவர்கள் என்ன சின்னப் பிள்ளைகளா? மாணவர்களுடைய சக்தி எத்தகையது என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இங்கிலாந்து தேச மன்னர் பரம்பரையில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க முடியாமல் உலகமே திக்கு முக்காடிக் கொண்டிருந்தபோது ஒரு மாணவன் தான் லைப்ரரியில் இருந்த சட்டப் புத்தகத்தில் எங்கோ ஓர் மூலையில் இருந்த ஷரத்தை எடுத்துக் காட்டி இந்த வகையில் தனக்குப் பட்டம் வேண்டாம் என்று எட்வார்ட் முடி துறந்து சென்றாலும் அவன் சம்பி ஆறும் ஜார்ஜுக்கு முடி சூட்ட வேண்டுமென்றால் எட்வர்டுக்குப் பிறக்கிற பிள்ளைக்குத்தானே உரிமை போய்ச் சேரும் என்று எடுத்துக் காட்டினான். அதற்குப் பிறகுதானே எனக்குப் பிறக்கிற பிள்ளைகள் எதற்கும் வாரிசு உரிமை கிடையாது என்பதாக எட்வர்டிடம் எழுதி வாங்கிக் கொண்டு ஜார்ஜுக்கு முடி சூட்டவேண்டும் என்பதாக ஏற்பாடு செய்தார்கள். இப்படி உலகத்தால் தீர்க்க முடியாது இருந்த பிரச்சினையை அன்று தீர்த்து வைத்தது ஒரு மாணவன்தான் என்பதை நீங்கள் உணரவேண்டும். நாமேவா இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கப் போகிறோம்? இன்றைய மாணவ உலகம்தான் நாளைக்கு இந்த நாட்டை ஆளப் போகிறது, இதில் கட்சிப் பிரச்சினையே இல்லை. நம்முடைய சந்ததிக்கு இழுக்கு இல்லாமல் அவர்களுடைய நியாயமான பிரச்சினையை சட்டபூர்வமாகத் தீர்க்க இந்தச் சர்க்கார் முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பி. பழனிசாமி**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1965-66-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பு இந்த நாட்டிலே பல திட்டங்கள் போட்டும், பல முன்னேற்றங்கள் செய்தும், மக்கள் நல்ல சுபிட்சமாக இருந்தும்கூட அது சிலருடைய கண்ணுக்கு இன்னும் தெரியவில்லை.

அடுத்து சமீபத்திலே ஆட்சிமொழி சம்பந்தமாக நடைபெற்ற சம்பவத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். தூண்டுதலால் மாணவர்கள் சர்க்காருக்கும், நாட்டுக்கும் அவர்களுடைய இந்தி எதிர்ப்பைக் காட்டும் முறையில் ஊர்வலம் சென்றிருக்கலாம். ஆனால், ஒன்றுமறியாத குழந்தைகளை எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே ஏவிவிட்டிருக்கிறார்கள். இதை யாரும் மறுக்கவும்

6th March 1965] [திரு. கே. பி. பழனிசாமி]

முடியாது; மறக்கவும் முடியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அசெம்பிளியில் ஜனவரி மாதம் 25-ஆம் தேதியன்று சொன்னார்கள். நம்முடைய நாட்டுக்குச் சுதந்தரம் வந்தது. நாம் எல்லாம் சுதந்தர வீரர்களாக இருக்கின்றோம். அயல் நாட்டுக்காரர்களைத் துரத்தி இருக்கிறோம். இப்பொழுது சுதந்திர மாக இருக்கிறோம். அந்த நேரத்திலே நம்முடைய ஆட்சிமொழிப் பிரச்னையைக் கவனமாகப் பார்க்கவேண்டிய பொறுப்பு இருக் கிறது என்று சொன்னார்கள். அதைக் கேட்காமல் யாரோ இறந்து விட்டது மாதிரி ஏன் கறுப்புக் கொடி காட்டவேண்டுமென்று கேட்டார்கள். எதையோ இழந்து போய் விட்டமாதிரி ஏன் துக்க நாள் கொண்டாடவேண்டும் என்று கேட்டார்கள். இன்று முதலமைச்சர் ராஜிநாமா செய்ய வேண்டும் என்கிறார்கள். ஏன் ராஜிநாமாச் செய்யவேண்டும். அவர் என்ன கெடுதல் செய்தார்? அவர் ஏதாவது தப்புப் பண்ணினாரா? என்ன செய்துவிட்டார்கள் என்று கேட்கிறேன். நாம் குடியரசு வந்தபொழுதே ஆட்சி மொழி என்பதை ஏற்றுக் கொண்டோம். அதை அமுலுக்குக் கொண்டுவருவதில் என்ன தப்பு? 14 மாகாணங்களிலும் இருப்ப வர்கள் படிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். 1, 2 மாகாணங் களில் உள்ளவர்கள் படிக்கமாட்டோம் என்று சொன்னால் நடக்காது. நாம் சட்டத்தை மாற்ற முடியாது. நாம் சட்டத்தை மாற்றவேண்டுமென்றால் மூன்றில் 2 பங்கு மெஜாரிட்டி இருந்தால் தான் சட்டத்தை மாற்ற முடியும். நமது நேரு அவர்கள் இந்தி யை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டு, ஆங்கிலமும் இருக்க வேண்டுமென்றும் உறுதியளித்தார். தமிழகத்தில் ஏறத்தாழ 3½ கோடி பேர் இருக்கிறார்கள். எதிர்ப்பவர்கள் யார்? அவ்வளவு பேரும் எதிர்க்கவில்லை. படித்த சிலர் சம்பளம் 2,000, 3,000 என்று வாங்க முடியாதே என்று சொல்கிறார்கள். அல்லது சில பணக் காரர்கள் சொல்லலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சொல்லலாம்.

இந்தி வந்துவிட்டது, தமிழ் அழியப்போகிறது, தமிழ் அழிந்து விடும் என்று சொல்கிறார்கள். இந்தி வந்தால், 'தமிழில் அம்மா என்று சொல்வதற்குப் பதிலாக இந்தியில் மாதா என்றுதான் சொல்லவேண்டும்' என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் பீதியைக் கிளப்பிவிட்டு மாணவர்களைத் தூண்டிவிட்டு நாட்டை அமைதியில்லாமல் கலவரத்திலே தள்ளினால் அதை எப்படி சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

கோவையிலே எத்தனையோ கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே 25-ஆம் தேதியன்று எல்லோரும் பள்ளிக்கூடத்திற்குச் சென்றார் கள். கூடிப் பேசினார்கள், 26-ம் தேதி குடியரசு தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டுமென்று கூடிப்பேசினார்கள். அதன் படி என்ன செய்தார்கள்?

குறிப்பாக என்.சி.சி. மாணவர்களைத் தடுத்தார்கள். என்.சி.சி; மாணவர்கள் தேசத்திற்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டும்; மக்களுக்குச் சேவைசெய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் டிரெயினிங் கொடுக்கப்படுகிறார்கள். அந்த பாதிகாப்பு படையை போகக்கூடாது என்று தடுத்தார்கள். அவர்களை அடித்து

விடுவார்களா என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடவே பயந்து கொண்டு யூனியாரம் டிரஸ்களை எல்லாம் மறைத்து வைத்துக்கொண்டு சில பேர்கள் கலந்துகொண்டார்கள். பாரேடில் கலந்து கொண்டு திரும்பி வரும்பொழுது போலீஸ்காரர்கள், போலீஸ் அதிகாரிகள், கலெக்டர் மத்தியிலே இவர்களையெல்லாம் மன்னிப்புக் கோரவேண்டுமென்று சொன்னார்கள். கலெக்டர் அவர்களும், எஸ்.பி. அவர்களும் சொன்னார்கள். நீங்கள் வாபஸ் வாங்குங்கள் என்று. அதற்கு 'நீங்கள் என்ன பில் கலெக்டரா, கலெக்டரா?' என்று கலெக்டரைப் பார்த்துக் கேட்டார்கள் ஐ.ஏ.எஸ். படித்த ஒரு அதிகாரி, நன்றாக விடையளிக்கக்கூடிய ஒரு அதிகாரி, மாவட்டத் தலைவராக இருப்பவர், அவரைப் பார்த்து 'நீ கலெக்டரா, பில் கலெக்டரா' என்று கேட்டார்கள். இப்படிப் பேசுவது முறையா என்று கேட்கிறேன். மாணவர்களுக்கும் உரிமை இருக்கிறது, சக்தி இருக்கிறது அதையெல்லாம் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அதற்காகக் கேவலமாக இப்படிப் பேசுவதா? இதற்கு யார் பொறுப்பு? இளம் பிஞ்சுகளை, இளம் குழந்தைகளைத் தூண்டியது யார்? நம்முடைய பொறுப்பைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நமது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இருக்கிறார்கள். அவரைப்போல் நானும் வரலாம் என்று ஒரு மாணவன் சொல்லலாம். காரணம் ஓட்டுரிமை இருக்கிறது. மற்ற எல்லா உரிமைகளும் இருக்கிறது. மக்களிடத்திலே ஓட்டுப்பெற்று வரக்கூடிய உரிமை இருக்கிறது. அது வேறு விஷயம். அதற்காக இப்படியா பேசுவது? நமது முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் சிறந்த அறிவாளி; நாட்டின் விஷயங்களைப் புரிந்துகொண்டவர். உயர்ந்த லட்சியத்தையும், கடமை, கண்ணியம் எல்லாம் உணர்ந்து நடக்கக்கூடியவர். இந்த நாட்டிலே எழக்கூடிய பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியவர் (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. க. தா. பெருமாள் ராஜு**: நமது முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1965-66-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் மீது நான் சில கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த பட்ஜெட்டிலே விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அது மிகவும் வரவேற்கத்தக்கது. விவசாயத்திலே குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே பல கிணறுகள் தோண்டுவதற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்திருக்கிறது. அதேபோல் கோவை மாவட்டத்திலே, லோயர் பவானிப் பகுதிகளிலே சுமார் 2 லட்சம் ஏகர்களில் விவசாயம் செய்யப்படுகிறது. அதிலே மூன்று மாதங்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. விவசாயம் நல்ல அபிவிருத்தி ஏற்படக்கூடிய சூழ்நிலை அங்கு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே கொடுத்திருப்பது போல் இங்கேயும் கிணறுகள் தோண்டுவதற்கு சர்க்கார் அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே சில நிபந்தனைகள் இருக்கின்றன. அதாவது பம்ப் செட்டுகள் போடுவதற்கு பெர்மிஷன் வாங்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் ஓரளவு தளர்த்தினால் உணவு உற்பத்தியிலே குறிப்பாக ஒரு நல்ல நிலைமை அடைவோம் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கடன்கொடுக்கும் திட்டத்திலே உருவாக்கப் பெறும் திட்டங்களுக்கும் உடனடியாக மின்சாரம் கொடுத்தால்

6th March 1965] *[திரு. க. தா. பெருமாள் ராஜு]*

மிகவும் நல்லது. விவசாயத்திற்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாதது. கிணற்றுப் பாசனம் செய்யக்கூடியவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் மின்சார இலாகாவிற்கு உத்தரவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாளவாடி, பவானி தாலூகா அந்தியூர் யூனியன் போன்ற இடங்களில் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. பல திட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தும் அவற்றையெல்லாம் அமல் நடத்தவில்லை. உடனடியாக அவற்றை அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பட்ஜட்டிலே புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை. கோவை ஜில்லாவிலே போன ஆண்டு நில்வரியாக ஏக்கருக்கு 40 ரூபாய் வசூலித்து வந்ததை இந்த வருஷம் 10 ரூபாய் குறைத்து 30 ரூபாயாக வசூலிக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது, விவசாயிகள் பெரும் பயன் அடைவர் என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தியிருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். கிணறுகள் வெட்டுவதற்கு இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இன்று ஐயாயிரம் ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. தாளவாடி பகுதியில் உள்ள மலைப் பிரதேசங்களில் கூட 100 கிணறுகளுக்கு மேல் பர்மிஷன் கொடுக்கப்பட்டுவிட்டது. அங்கு பாசனத்தை வேறு வகையில் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது மலைப் பிரதேசமாகையால் கிணறு வெட்ட அதிகச் செலவாகும். ஆகவே, அவர்களுக்குக் கிணறு வெட்ட பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை ஜில்லாவில் ப்ரொக்யூர்மெண்ட் செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் வரை உள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதில்லை. தற்சமயம் கூலியெல்லாம் ஏறியிருப்பதால் இரண்டு ஏக்கர் வரை உள்ள விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யாமல் இருக்க சர்க்கார் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுக் குடும்பங்களாக இருப்பதற்கு இன்னும் கொஞ்சம் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பொறுத்தவரை கோபி, பவானி ரெவின்யூ டிவிஷன்களில் கலவரங்கள் எதுவும் ஏற்படவில்லை. அமைதியாக ஊர்வலம் வந்தார்கள். நம்முடைய நாட்டில் பிரிவினைச் சக்தி உருவாகாமல் இருக்க வேண்டுமென்றால் மும்மொழித் திட்டத்தை அமல் நடத்தியே ஆகவேண்டும் என்று கூறி எனக்குப் பேச வாய்ப்பளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு வணக்கத்தைச் செலுத்தி முடித்துக் கொள்கிறேன்.

திரு. முனு. ஆதி: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய ஆளும் கட்சித் தரப்பு அங்கத்தினர்கள் அத்தனை பேரும் நடைபெற்ற

நிகழ்ச்சிகளைப் பற்றி ஆவேசத்துடனும், ஆர்வத்துடனும் பேசினார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் இவ்வளவு ஆவேசமாகப் பேசுவதை நான் பிப்ரவரி 10, 12 தேதிகளில் கேட்க முடியவில்லை. இந்த மன்றத்தில் இப்போதுதான் கேட்க முடிந்தது. திராவிட முன்னேற்றக் கழகந்தான் இந்த வன்செயல்களைச் செய்தது என்று சொல்லுகிற இவர்கள் 10, 12-ம் தேதிகளில் எங்களை ஆதாரத்துடன் பிடித்திருக்க வேண்டாமா? இதை யாரும் தூண்டி விடவில்லை, பொதுமக்களுடைய எதிர்ப்பு அதற்கு இருந்தது. இவ்வளவு நடந்ததற்குக் காரணம் மக்களுடைய எழுச்சிதான். திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிட்டதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிட வேண்டுமென்றால் இன்றைக்குத்தான் தூண்டிவிடவேண்டுமென்ற நிலை இல்லை. பண்டித நேரு அவர்கள் இந்தத் தமிழகத்திற்கு வந்தபோது கறுப்புக் கொடி காட்டினோம். ஆயிரக்கணக்கான பேர் அன்று திரண்டார்கள். தூண்டிவிட வேண்டுமென்றால் அன்றைக்கே நாங்கள் தூண்டி விட்டிருக்க முடியும். விலைவாசிப் போராட்டத்தை நடத்தினோம். இவ்வாறு அப்போதெல்லாம் இல்லாத செயல் இன்று எப்படி வந்து விடும்? எந்த அர்த்தத்தில் பேசுகிறார்கள்? மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள். இதிலே உங்களுடைய கட்சிக்குள்ளேயே அபிப்பிராயப் பேதங்கள் இருக்கின்றன. உங்களுடைய கட்சியிலேயே பலர் இது மக்களுடைய எழுச்சி 'யாராலும் தூண்டி விடப்பட்ட தல்ல' என்று டெல்லியில் இருந்து தமிழகம் வரை பேசுகிறார்கள். நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கெல்லாம் என்னுடைய மாவட்டத்தை சார்ந்த முதலமைச்சர் அவர்கள்தான் முழுக்கப் பொறுப்பாளி யாக்கப்பட்டிருக்கிறார். போலீசு அமைச்சர் அவர்கள் இதற்குப் பொறுப்பாளியாகி இருக்கவேண்டும். அந்தச் சமயத்தில் அவர் தமிழகத்தில் எங்கோ பதுங்கி மறைந்திருந்தார். தடம் தெரியாமல் இருந்தார்.

கனம் திரு. பூ. கக்கன்: நான் எங்கும் மறையவில்லை. இதே தமிழகத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. முனு. ஆதி: இந்த அமைச்சர் மக்களுடைய ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர், போராட்ட நேரத்திலே மக்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டாமா? பாகிஸ்தான் அகதிகள் முகாமிலே கோயம்புத்தூரிலே ஏதோ ஏற்பட்டு விட்டது என்பதற்காக இந்த மந்திரி விமானத்திலே பறந்தார். இவ்வளவு பெரிய கொந்தளிப்பு இந்த நாட்டிலே நடைபெறுகிறபோது இவர் எங்கே இருந்தார்? 25-ம் தேதியிலிருந்து இருந்த இடம் தெரியவில்லை. அன்றைய தேதியிலிருந்து கனம் முதலமைச்சர் அவர்களைத் தவிர மற்ற அமைச்சர்கள் எல்லாம் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. முன்பு சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை என்று சொன்ன முதல் மந்திரி அவர்கள் ஏன் டெல்லிக்குப் பறந்தார்கள்? இன்று அவர்கள் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு ஆங்கிலமொழி நீடிக்க வேண்டுமென்பதற்கான சட்டத் திருத்தம் வேண்டுமென்று வற்புறுத்தி விட்டு வந்திருக்கிறார்கள்.

6th March 1965] [திரு. முனு ஆதி]

"கேரளத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் நிலைமை என்ன ஆயிற்று?" என்று ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். நாங்கள் இப்போதுதான் முதல் முறையாக கேரளத்தில் போட்டியிடுகிறோம். ஆயினும் நல்ல அளவுக்கு வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆனால் உங்கள் நிலை என்ன? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகத்தானே இருக்கிறது? அந்த நிலையில் நீங்கள் எங்களைப் பார்த்துக் கிண்டல் செய்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

நடைபெற்ற சம்பவங்களுக்கெல்லாம் காரணம் சமூக நல விரோதிகள் என்று சொல்கிறார்கள். சமூக நல விரோதிகள் உங்களுடைய 17 ஆண்டு கால ஆட்சியிலே அதிகமாகி விட்டார்களா? உங்களுடைய ஆகஸ்டு சுதந்திரப் போராட்டத்தின்போது தந்திக் கம்பிகளை அறுத்து, தபால்பீசைக் கொளுத்தி, தண்டவாளங்களைப் பெயர்த்தது போல்தான், அதே அடிப்படையில் தான் இப்போதும் போராட்டம் நடந்திருக்கிறதா? சமூகநல விரோதிகள் நூற்றுக்கு ஐந்து பேர் வேண்டுமானால் நாட்டிலே இருக்கலாம்; நூற்றுக்கு எண்பத்தைந்து பேரா இருப்பது?

தமிழகத்திலே இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டதன் காரணமாக கனம் முதலமைச்சர் அவர்கள் மீது ஆளுங்கட்சியினருக்கே நம்பிக்கை இல்லாமல் அவரை வெளியேற்றுவதாக இருந்தது. ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் கடுமையான முறையில் "கனம் பக்தவத்சலம் அவர்கள் விலக வேண்டும்; ராஜிநாமா செய்யவேண்டும்" என்று கூறிய காரணத்தால் அவர்கள் கட்சியிலே இதை ஒரு கவுரவப் பிரச்சினையாக எடுத்து—அவர்களுடைய பக்கத்திலும் ஒரு அதிர்ஷ்டம் இருந்த காரணத்தால்—முதலமைச்சர் அவர்களை விலக்கும் பிரச்சினையை மூடிவிட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே மக்களுடைய எழுச்சி ஏற்பட்டதே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்டுதல் எதுவும் இல்லை.

எனக்கு இந்தச் சமயத்தில் வனராஜன் என்ற குட்டிக்கதை நினைவுக்கு வருகிறது. சிங்கத்தை குகையில் அடைத்து விட்டு சிறு நரிகள் நடமாடிற்றாம். எங்களுடைய துணைத் தலைவர் அவர்களைச் சிறையிலே அடைத்துவிட்டு ஆளும் கட்சியிலுள்ளவர்கள் இன்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர் என்ன குற்றம் செய்தார்? அவர் ஒருவர்தான் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டுமா? மற்றவர்கள் யாரும் பயங்கரவாதிகள் இல்லையா? அப்படியானால் பத்தாம் தேதி உங்களுடைய தைரியம் எங்கே போயிற்று? மக்களுடைய எழுச்சிக்கு முன்னால் எங்கே போய் மறைந்து கொண்டீர்கள்? காங்கிரஸ்காரர்கள் எல்லாம் கறுப்புக் கொடிகளை எடுத்துக் கொளுத்தினார்கள். கிழித்தெறிந்தார்கள். "அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்" என்பதைப் போல் உங்கள் கொடிகள் எல்லாம் இறக்கப்பட்டு கொளுத்தப்பட்டனவே. இந்த அரசு அன்று செய்தது. தெய்வம் நின்று செய்தது.

[6th March 1965

12-30 p.m. **கனம் திரு. பூ. கக்கன்** : 10, 12 தேதிகளில் அவர்கள்தான் செய்தார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது. அப்படி அவர்கள் இவ்வளவு அக்கிரமங்களைச் செய்தார்கள் என்று தெரிகிறது. இவர்கள்தான் இதற்குப் பொறுப்பாளி என்று தெரிகிறது.

திரு. முனு. ஆதி : பத்திரிகைகளில் வந்திருக்கிறது. உங்கள் தரப்பிலிருந்து பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் கொடிகளை இறக்கிக் கொளுத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை வைத்துத்தான் பேசுகிறேன். நீங்கள் சொல்கிற சமாதானம் ஏற்காது. வேண்டுமானால் இங்கு பேசி விடலாம். வெளியே நின்று இந்த நேரத்திலும் பொது மக்கள் மத்தியில் போய் பேசிப் பாருங்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : பேசத்தான் போகிறோம், பார்க்கிறோம்.

(மணி அடிக்கப்பட்டது)

திரு. முனு. ஆதி : ஆகவே இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. பி. பழனி** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அநேக அபிவிருத்திப் பணிகளையும் அமைதியான ஒரு அரசாங்கத்தையும் நடத்தி சிறப்புப் பெற்ற நம் தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சிகள் கண்டு நாட்டிலுள்ள நல்ல உள்ளவர்கள் அத்தனையும் வேதனைப்படுகிற ஒரு காட்சியைப் பார்க்கிறோம். நன்கு ஆய்ந்து அலசிப் பார்த்தால் எந்தளவிற்கு இங்கு ஆவேசமாகப் பேசி உண்மையை மூடி மறைக்கிற எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், அரசியல் தலைவர்களும் அவர்கள் அரசியலில் ஆடுகிற சதுரங்கத்திற்கு பகடைக் காய்களாக மாணவர்களைப் பயன் படுத்திக் கொண்டார்கள் என்பது நமக்கு நன்கு தெரிய வரும். ஒரு சில செய்திகளை இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த தலைவர் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் 8-ம் தேதி அன்று கோகலே மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் சொல்லிருக்கிறார்கள், "மாணவர்களின் புரட்சி அரசாங்கத்தை சிந்திக்க வைத்துள்ளது; பல வருஷங்களாக என்னாலும் மற்றும் பல பெரியோர்களாலும் செய்ய முடியாததை மாணவர்கள் செய்து காட்டி வெற்றி பெற்றிருப்பதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்" என்று அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் வெறுப்பு விருப்பு இன்றி சிந்தித்துப் பார்த்தால் அவர்களைப் போன்ற பெரிய தலைவர்கள் மாணவர்களை ஆகாத செயலுக்காக பாராட்டினால் அது தூண்டி விடக் கூடியதா இல்லையா என்பது நமக்குத் தெரியும். அதே கூட்டத்தில் பேசிய மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் கூறியிருக்கிறார்கள், "காங்கிரஸ் ஆட்சியை விரட்டியடிக்க நாட்டில் எல்லோருக்கும் ஒரு ஆவேச வெறி ஏற்பட வேண்டும்" என்று அங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். "ஆவேச வெறி" ஏற்படவேண்டிய அவசியத்தை அவர்களைப்

6th March 1965] [திரு. கே. பி. பழனி]

போன்ற பெரியவர்கள் குறிப்பிடுவது எந்தளவிற்கு அராஜகச் செயலைத் தூண்டி விடக் கூடிய செயல் என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பின், 11-2-1965-ல் விட்ட அறிக்கையில் "சென்னை மாணவர் கவுன்சில் தலைவர், காரியதரிசி, அவர்களுடைய கிளர்ச்சிக் குழு இன்று காலை என்னை வந்து பார்த்தனர், அவர்களிடம் இதே யோசனையைக் கூறினேன், அவர்கள் என் நம்பிக்கையின் கருத்தை அவர்களுடைய நண்பர்களுக்கு உணர்த்திவிடலாம் என்பதையும் இப்போதைக்கு கிளர்ச்சியை நிறுத்தி வைப்பார்கள் என்று நம்புகிறேன்" என்று சொன்ன ராஜாஜி "நம் போர் அறப்போர்" என்றும் "நாம் வெற்றி பெறுவது திண்ணம்" என்றும் மாணவர்களுக்கு உறுதி மொழி கொடுத்திருப்பது' எழுத்து மூலம் அறிக்கையை குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் தூண்டுதல் எந்த அளவிற்கு இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இன்று பிரதம எதிர் கட்சியாக அமர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலவர் திரு. அண்ணாதுரை அவர்கள் 10-2-1965-ல் விடுத்த அறிக்கையில் குறிப்பிடுகிறார்கள். கிளர்ச்சியையும் நேரடி நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொன்ன வேண்டுகோளில் "உங்களது உணர்ச்சியிலும், போராட்டத்திலும்; குறிக்கோளிலும் பொது உணர்விலும் உங்களிடம் ஈடுபாடு உள்ளோர்களிடமிருந்து தான் வருகிறது" என்று குறிப்பிடுகிறார்கள். மாணவர்கள் கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று அறிக்கை விடுத்தபோது "உங்களிடம் ஈடுபாடு உள்ளோர்களிடமிருந்துதான் அந்த அறிக்கை வருகிறது" என்று குறிப்பிடுகிறார்கள் என்றால் 'ஈடுபாடு' என்ற சொல்லுக்குரிய பொருள் என்ன என்பதை இங்குள்ள அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றொரு உண்மையையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 25, 26, 27-ல் இந்தக் கிளர்ச்சி ஆரம்பமானது என்றால் 22-ம் தேதி இரவு 11 மணி அளவில் இந்த மன்றத்தில் இருக்கக் கூடிய சில சட்டசபை அங்கத்தினர்கள் உள்பட எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்ட ஒரு ஹோட்டலில் மாணவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். இதை மறுக்க முடியுமா? என்று கேட்கிறேன். அப்படி மறுப்பார்களேயானால் அந்த அங்கத்தினர்களின் பெயர்களை என்னால் சொல்ல இயலும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலிருந்து எந்தளவிற்கு இந்த போராட்டத்திற்கு அவர்கள் மாணவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. எங்கள் தஞ்சை நகரத்தைப் பொறுத்தவரையில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அங்குள்ள முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பிஸ்கட் வாங்கிக் கொடுத்தார்கள், சோடா வாங்கிக் கொடுத்தார்கள், சிகரெட் வாங்கிக் கொடுத்தார்கள். இன்னும் சொல்லப் போனால் அந்தப் பிரமுகர்களின் பெயர்களைக் கூட சொல்ல முடியும். மாணவர்களைத் தூண்டி விட்டு இந்தப் போராட்டத்திற்குக் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர்கள் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் தவறாகாது. முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை என்ன, அவர்கள்

மொழிக் கொள்கை அளவிற்கு காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டு வருகிறது? அவர்கள் மக்கள் மத்தியில் பேசுகிற பேச்சு என்ன? மாணவர்களை அரசியலில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் தூண்டுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டிருக்கிற இந்த நேரத்தில் நேற்றைய முன் தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலவர் திரு. அண்ணாதுரை அவர்கள் ராஜ்ய சபாவில் ஆற்றியிருக்கிற உரையைப் படித்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

"Hindi should become the link language but only when it developed to such an extent that the people in the South spoke it very well and the people in the North spoke the languages of the South."

என்று திரு. அண்ணாதுரை அவர்கள் 'should become என்று அழுத்தந்திருத்தமாக இந்தி பேசுகிற மொழியாக; இணைப்பு மொழியாக வரவேண்டும் என்ற கருத்தில் பேசியிருக்கிறார்கள். இதிலிருந்து அவர்கள் மக்கள் மத்தியில் பேசுவதற்கும்; மாணவர்கள் மத்தியில் பேசுகிற பேச்சுக்கும் ராஜ்ய சபாவில் ஆற்றிய உரைக்கும் இடையே இருக்கிற வேறுபாட்டை; வித்தியாசத்தைப் பார்க்க முடிகிறது. அவர்களுக்கு ஒரு கொள்கை இல்லாத காரணத்தினாலோ; "யாரோ அரசன்? யானே கள்வன்" என்ற நாடக வசனத்தைப் பேசிப் பயன் இல்லை. அவர்கள் உண்மையில் சிந்தித்துப் பார்த்தால் இத்தனை அராஜகம்; ஆர்ப்பாட்டம் அவ்வளவிற்கும் அவர்கள்தான் பொறுப்பாளி என்ற நிலையில் வெட்கப்பட வேண்டும்; வேதனைப்படவேண்டும்; பதவியை விட்டு ராஜிநாமா செய்ய வேண்டும் என்று கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கே. பொன்னையன் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் அருமையான பலாப்பழம் போன்றதொரு திட்டமாகும். அத்தகைய திட்டத்தை யாரும் பேசவில்லை. ஆனால் அண்மையில் நடந்த இந்தி எதிர்ப்பு சமாசாரத்தைப் பற்றித்தான் நிறையப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆளியாறு பரம்பிக்குளம் திட்டத்திற்காக ஏராளமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அத்திட்டத்தினால் 16,750 ஏக்கருக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் 60,000 ஏக்கருக்கு தண்ணீர் பாய வேண்டும் என்று நடக்கிற அந்த வேலைகளுக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிறைய பணம் வாங்க வேண்டியதுதான். இன்னும் கிராமங்களில் உணவுப் பிரச்னை நீங்கிய பாடாகவில்லை. தற்போது 17,500 ஏக்கர் பரம்பிக்குளம் ஆளியாறு ஆயக்காட்டில் விவசாயத்திற்கு வந்திருந்தும் தற்காலிகமாக நெல் பயிரிட உத்தரவு கொடுத்தால் உணவுப் பிரச்னையை ஒருவாறு தீர்க்கலாம் அந்தப் பகுதியில். கிராமங்களில் உணவுப் பிரச்னை மோசமான நிலையில்தான் இருக்கிறது. கிராமங்களில் ஸ்டாட்யூடரி ரேஷன் கொடுக்கவில்லை.

6th March 1965] [திரு. கே. பொன்னையன்]

வாரத்திற்கு தலைக்கு ஒரு லிட்டர் என்று கொடுக்கிறார்கள். அதுவும் எப்போது வரும் என்று தெரியாது. முன் போல் எல்லாம் இப்போது விவசாயிகள் கம்பு, சோளம், ராகி போன்ற தான்யங்களை விளைவிப்பதில்லை. இன்று காஷ் க்ராப்ஸான, கரும்பு, வாழை, புகையிலை இதுபோன்ற பொருள்களைத் தான் விளைவிக்கிறார்கள். ஆகவே உணவுப் பிரச்னையை அவசியம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிப்ரவரி 10, 11, 12 இந்தத் தேதிகளை எடுத்துக்கொண்டால் இப்போதும் நடுக்கமாக இருக்கிறது. எங்கள் பிரதேசம் மலைப்பிரதேசமானதினால், எங்கள் ஜனங்கள் எல்லாம் பிப்ரவரி 11-ம் தேதி கூடுகிற பொள்ளாச்சி சந்தையில் வந்துதான் சாமான்கள் வாங்கிக் கொண்டு வால்பாறைக்குப் போக வேண்டும். சாதாரணமாக இரண்டு, மூன்று மாதங்களுக்கு வேண்டிய சாமான்களைச் சேர்த்து வாங்கி வைத்துக்கொள்வது வழக்கம். மலைப்பிரதேசத்தில் இருப்பதால் பிளான்டேர்ஸ் எல்லோரும் இரண்டு மூன்று மாதங்களுக்குத் தேவைப்படுவதை ஒன்றாக வாங்கி வருவது வழக்கம், ஆனால் இப்போது 'Due to food problem' வாரா வாரம் சந்தைக்கு வரும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் சந்தையில் போதிய அளவு தான்ய சப்ளையில்லாமல் இருப்பதால் தான். இவ்வாறு 11-ம் தேதி வந்து சாமான்களை வாங்கிக்கொண்டு போகலாம் என்றால் அங்கு எந்த விதமான வசதியும் இல்லை, லாரிகள் ஒன்றும் வரவில்லை; டெலிபோன் கிடையாது; தந்தி கிடையாது, போக்குவரத்து கிடையாது. இந்த நிலைமையில் எங்கள் பகுதியிலுள்ள ஒரு லட்சம் மக்களும் எந்த விதமான வழியும் இல்லாமல் பட்டினியால் கஷ்டப் பட்டார்கள். ஒரு பக்கம் மாணவர்களை மிகவும் தாஜா பண்ணி பள்ளிகளுக்கு அனுப்பி வைத்தேன். அடுத்த பக்கத்தில் சமூக விரோதிகள் பலர்; ஏதோ பொள்ளாச்சியில் ஃபையரிங் நடக்கிறது, திருப்பூரில் ஃபையரிங் நடக்கிறது, என்று செய்திகளைக் கிளப்பி விட்டார்கள். இதற்கிடையில் தொழிலாளர்களுக்கு சாப்பாடுப் பிரச்னை ஒரு பக்கம். அவர்கள் சாப்பாடு இல்லை, சாப்பாடு இல்லை என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்; இந்த அளவுக்கு இந்தி எதிர்ப்புப் பிரச்னை வேதனை அளித்தது என்றால் யார் தான் இதைப் பார்த்து வெட்கப்படாமல் இருக்க முடியும்? ஒரு லட்சம் மக்களுக்கு உணவு கிடைக்கவில்லை என்றால், அதில் ஆளும் கட்சிக்கு மட்டும் தான் பொறுப்பு இருக்கிறதா, எதிர்க் கட்சிகளுக்குப் பொறுப்பு இல்லையா, ஏதோ சமூக விரோதிகளின் செயல்கள் என்று நாம் சொல்லிக்கொண்டிருந்தாலும் இந்த நிலைமை நம் நாட்டில் ஏற்பட்டது மிகவும் வெட்கக் கேடான விஷயம் என்பதை மட்டும் யாரும் மறுக்க முடியாது. திராவிட முன்னேற்றக்காரர்கள் இதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று இன்றையதினம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எங்கள் எஸ்டேட்களில் எல்லாம் உண்டியல் எடுத்தார்கள், அதையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆபீசில் தான் கொண்டு கொடுத்தார்கள். அப்படியென்றால் இவர்கள் இந்த கிளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தார்களா இல்லையா என்பதற்கு இந்த ஒரு உதாரணமே போதும்.

பட்ஜெட்டில் என்.ஜி.ஓ.-க்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பஞ்சப் படி உயர்வு கொடுத்திருக்கிறோம். ஆனால் முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்து போர்ட் இவைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வீட்டுவாடகை அலவன்ஸ் 3 ரூபாய்தான் கொடுத்துக்கொண்டிருக் கிறோம். பஞ்சப்படியை மட்டும் கூடுதலாகக் கொடுத்துவிட்டு வீட்டு வாடகைப்படியைக் குறைத்துக் கொடுத்துக்கொண் டிருப்பது சரியல்ல. பொள்ளாச்சி முதல் கிரேட் முனிசிபாலிட்டி யாக ஆகிவிட்டது, இருந்தும் இன்னும் அங்கு 3 ரூபாய் தான் வீட்டு வாடகைப்படி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு உண்மையிலேயே 12 ரூபாய் கொடுக்கவேண்டும். திருப்பூர் முதல் கிரேட் முனிசிபாலிட்டியாகிவிட்டது, ஈரோடு முதல் கிரேடு முனிசிபாலிட்டியாக இருக்கிறது, இங்கெல்லாம் 12 ரூபாய்; 9 ரூபாய்; 7 ரூபாய் என்றெல்லாம் வீட்டு வாடகைப்படி கொடுக்கப் படுகிறது. அதே போன்று பொள்ளாச்சி முனிபாலிட்டியிலுள்ளவர் களுக்கும் கொடுக்கப்படவேண்டும். இதைப்பற்றி அங்கிருந்து அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அதை உடனடியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வால்பாறையில் பல அரசாங்க அலுவலகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. தாசில்தார் ஆபீஸ் மற்றும் பல ஆபீஸ்கள் வாடகையில் வைத்திருக்கிறோம். ஆனால் இவைகள் எல்லாம் சிறிய இடங்களில்தான் இருக்கின்றன. பெரிய இடங் களில் வைப்பதற்கு ஏதாவது 'emergency' இடைஞ்சல்கள் ஏதேனும் இருந்தால் அவைகளுக்கு நிவாரணம் அளித்து பெரிய கட்டிடங்களை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையில் Grass Hills-ல் 9 ஆயிரம் ஏக்கர்கள் சும்மா கிடக்கின்றன, இதைப் பண்படுத்த வேண்டும் என்று பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டார் என்னென்ன பயிர்களை எல்லாமோ சாகுபடி செய்து பார்த்தார்கள். வெட்டர்னரி டிபார்ட்மெண்டில் மாடுகளுக்கு புற்களை கொடுப்பதற்காக புல்லை வளர்க்கலாம் என்றும் பார்த்தார்கள். ஒன்றுக்கும் அந்த இடம் சரியாக வர வில்லை. இப்போது அந்த 9 ஆயிரம் ஏக்கர்களும் வெறுமனே கிடக்கிறது. இதை அரசாங்கம் எடுத்து அங்குள்ள ஏழைத் தொழி லாளிகள் ஒவ்வொருவருக்கும் 10 ஏக்கர், 5 ஏக்கர் என்று கொடுத்து விட்டால் அதில் விவசாயம் செய்வதற்கு உதவியாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்திப் பிரச்னை சம்பந்தமாக நல்லதொரு முடிவு எடுத்து அமைதியான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1965-66-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யின் மீது என்னுடைய சில கருத்துக்களையும் சொல்லலாம் என்று சம்பிரதாயத்திற்குக் கூறுகின்ற முறையில் கூறி, அண்மையில் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகம் அடக்குமுறை இவைகளைப் பற்றி என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால்

6th March 1965] *[திரு. எம். வி. கரிவேங்கடம்]*

எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் எங்களுடைய மாபெரும் தலைவர் அவர்கள், ராஜ்ய சபையில்; பேசிய பேச்சைப்பற்றிக் குறிப்பிட்டார்கள்; அவர்கள் பேசியது; அகில இந்தியாவில் இந்தி தொடர்பு மொழியாக—'லிங்க் லாங்வேஜ்' ஆக இருக்கவேண்டும், வடஇந்திய மொழியைத் தென்னாட்டவர்கள் படிக்கவேண்டும் என்று சொல்வது போல், தென்னாட்டு மொழிகளையும் வடநாட்ட வர்கள் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதையும், அப்போது எல்லா மொழிகளையும் எல்லோரும் சரளமாகப் பேச முடியும் என்பதையும், வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். 'லிங்க்லாங் வேஜ்' என்பதற்கும், 'அட்மினிஸ்ட்ரேஷன் லாங்வேஜ்' என்ப தற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு. அதே சமயத்தில் 14 மொழிகளையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதையும் ராஜ்யசபையில் நன்றாக வலியுறுத்தி எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதுவரையிலும் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருந்து வரவேண்டும் என்பதை யும் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அண்மையில் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகங்கள் விளைவாக நிச்சயமாக ராணுவ ஆட்சி நடைபெறக்கூடிய பர்மாவாக இருந் தாலும் சரி, பாகிஸ்தானாக இருந்தாலும் சரி ஜனநாயகக் கொள் கையின் கீழ் ஆட்சி நடைபெற்று வரும் அமெரிக்காவாக இருந்தாலும் சரி, கிரேட் பிரிட்டனாக இருந்தாலும் சரி, அந்த நாடுகளில் எல்லாம் மாணவர்களின் ஊர்வலங்கள் நடைபெற்றிருக் கின்றன. ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் ஒரு சந்தர்ப்பத்திலும் கூட எந்த சர்வாதிகார நாட்டிலும் இத்தனை மாணவர்களைச் சுட்டுக் கொன்ற சம்பவம் கிடையாது. இந்த அள விற்கு எந்த நாட்டிலாவது சுட்டுக் கொன்றிருக்கிறார்களா என்பதைத் துருவித் துருவிப் பார்த்தால் எந்த நாட்டிலும் இம் மாதிரி, துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை; தடியடி முதலிய வைகள் நடந்ததாகத் தெரியவில்லை. இவ்விதம் சரித்திரத்தில் இல்லாத அளவுக்கு நடத்திக் காட்டியவர் நமது முதலமைச்சர் அவர்கள் தான். இவர்கள் தான் இதற்கு முதல்வராகவும் இருக்கிறார்; கடைசியும் இவராகத்தான் இருப்பார் என்று நினைக்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்களை எல்லாம் 54-வது பிரிவின்படி சந்தேகத்தின் பேரில் பிடித்து வைத்திருக்கின்ற முதலமைச்சர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தால் நமது முதலமைச்சர் அவர்கள் தான் இதற்கும் முதல்வராக இருப்பார், கடைசியாகவும் இருப்பார் என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அதோடு மட்டுமல்ல, அகில இந்தியாவில் பண்டித நேரு அவர்கள் உயிருடன் இருக்கும்போதே சொன்ன உறுதிமொழி சட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என்று 17-வது திருத்தம் தாக்கல் செய்யப்பட்டது, அந்தத் திருத்தத்தில் பண்டித நேரு கொடுத்த உறுதிமொழி சேர்க்கப்படவில்லை என்று எல்லோரும் சொன்னவுடன், முதல் முதலாக அதற்கு வியாக் கியானம் கொடுத்து, நேருவின் உறுதிமொழி இதில் சேர்க்கப்பட் டிருக்கின்றது என்ற வியாக்கியானம் எங்கிருந்து புறப்பட்டது

என்றால் அது சென்னையிலிருந்து தான் புறப்பட்டது, அது ஒன்று நமது இந்நாள் முதலமைச்சர் அவர்களிடமிருந்து புறப்பட்டது, இன்னொன்று முன்னாள் முதலமைச்சர் அவர்களிடமிருந்து புறப்பட்டது. இவர்கள் தான் 17-வது திருத்தத்தில் நேருவின் வாக்குறுதி உட்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஒரு தடவை அல்ல, திருப்பித் திருப்பி எத்தனையோ முறை சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பாராளு மன்றத்திலும் சட்டமன்றத்திலும் 17-வது திருத்தத்தில் நேருவின் வாக்குறுதி சேர்க்கப்படவில்லை என்று சொன்னது அதோடு மட்டுமல்ல அபிஷியல் லாங்கேஜ் ஆக்ட்டை நேருவின் வாக்குறுதியை சேர்த்து திருத்தி அமைக்க வேண்டும் என்று எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் கூட, யாரும் கேட்கத் தயாராக இல்லை நாங்கள் சொன்னவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகத் தான் இருந்தது. அதன் பின்னால்தான் போராட்டம் நடத்தப் பட்டது. அப்போது நாங்கள் அமைதியாக நடத்திய போராட்டத்தை என்னென்னவோ சொல்லி கேலி செய்தார்கள். கட்சியை வளர்ப்பதற்காக இவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அதோடு மட்டுமல்ல மாலை மரியாதைக்காக இந்த போராட்டத்தை நடத்துவதாகச் சொன்னார்கள், இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் ஓராண்டுக் காலம் மறியல், எரிப்புப் போராட்டம் முதலியவைகளை அமைதியான முறையில் நடத்தியது. அவைகளில் எல்லாம் எந்த விதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. அதையெல்லாம் பார்த்துவிட்டு, இப்போது எப்படியாவது திராவிட முன்னேற்றக்கழகத்தின் மீது பழிசுமத்தவேண்டும், இதைப்பற்றிப் பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம்தான் மாணவர்களைத் தூண்டிவிட்டது, தூண்டிவிட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். சேலம் மாவட்டத்தில் ஆட்டையாம்பட்டி என்ற இடத்தில் அங்குள்ள மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றார்கள். அதைக் கண்டு சிலர் ஊர்வலத்தைத் தாக்கினார்கள். அவ்விதம் தாக்கியது யார், காங்கிரஸ்காரர்கள்தான்; அதற்கு வழக்கு இருக்கிறது; காங்கிரஸ்காரர்கள் இந்தக் கலவரத்தில் ஈடுபடவில்லை என்று சொல்லிவிட முடியுமா? இதை மட்டும் வைத்துக்கொண்டு, தமிழகத்திலுள்ள அத்தனை காங்கிரஸ்காரர்களும் கலகக்காரர்கள், குழப்பக்காரர்கள்; கொலைகாரர்கள்; கொள்ளைக்காரர்கள் என்று சொல்லிவிட முடியுமா? அதே போல் ஒன்றிரண்டு பேர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது அங்கே, இங்கே ஏதாவது செய்திருக்கலாம்; இல்லை என்று சொல்லவில்லை; அதற்காக வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மாசு கற்பிக்கவேண்டும் என்று நினைத்து, கற்பனை செய்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தான்' இத்தனைக்கும் காரணம் என்று புனைந்து சொல்வது எவ்வாறு பொருந்தும் என்று கேட்கிறேன். நான் ஏற்கனவேயே சொன்னேன், மூன்று காங்கிரஸ்காரர்கள் பேரில்; ஆட்டையம்பட்டியில் மாணவர்களைத் தாக்கினார்கள் என்று வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்றால் அதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே சந்தர்ப்பத்

6th March 1965] *[திரு. எம். வி. கரிவேங்கடம்]*

தில் நேரு அவர்களின் வாக்குறுதி மீறப்பட்டிருக்கிறது என்று 25-ம் தேதி மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது தடை உத்தரவு இல்லை, என்ன காரணத்தினாலோ; தர்மபுரியில் தேர்தல் நடக்கப் போகிறது என்பதற்காக அங்கு மட்டும் இல்லை, மற்ற இடங்களில் தடை உத்தரவு போட்டார்கள். அதன் பிறகு 8-9 தேதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று தீர்மானித்து மாணவர்கள் அறிவித்து விட்டார்கள். அதற்கு முன்கூட்டியே தமிழகம் எங்கும் 144 தடை உத்திரவு போட்டுவிட்டார்கள். நிச்சயமாக மாணவர்கள் இளம் காளைகள், பயம் அறியாதவர்கள் அதே சமயத்தில் முன் வைத்த காலைப் பின் வைக்கத் தயங்குகிற வர்கள். சூதும் வாதும் அறியாதவர்கள். அதையும் மனத்தில் கொள்ள வேண்டும். தடை உத்திரவு போட்டவுடன் தடையை மீறி ஆர்பாட்டத்தை நடத்துவதென்று முனைந்தார்கள். சட்டத் தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டிய போலீசார், சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டித் தீருவது என்று அவர்கள் முடிவிற்கு வந்துவிட்டார்கள். மாணவர்கள் ஆர்ப் பாட்டத்தை நடத்தியே தீருவது என்று நடத்த முற்பட்டு அமைதியை நிலை நாட்டியே தீருவது என்று போலீஸார் முடிவு செய்த பின்னர் இரண்டு பேர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான், தன் பிள்ளையும் ஊர்வலத்தில் சென் றிருக்கிறானே, அவனுக்கு என்ன நேர்ந்ததோ, அவன் மீது தடி யால் அடித்தார்களோ, கண்ணீர் புகையினால் பாதிக்கப்பட்டானோ அல்லது கைது செய்யப்பட்டிருக்கிறானோ என்று பிள்ளையை பெற்ற வர்கள் பதட்டம் அடைந்தார்கள். பிள்ளையின் அருமை தகப்ப னுக்குத்தான் இருக்கும். நாம் அறிவோம் பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்று. அப்படி பிள்ளைகள் கைது செய்யப் பட்ட பின்னர் பதட்டமடைந்த பெற்றோர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் கலவரம் நடத்தியிருக்கலாம். அந்தப் பழியைக் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் மீது போட்டுப் பிரயோசனம் இல்லை என்று சொல்லிக்கொண்டு, குழந்தையும் தெய்வமும் கொண் டாடும் இடத்திலே என்பதை நமது முதல் அமைச்சர் அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். போராட்டத்திற்கு மாணவர்கள் தேதி குறித்த பின்னர் மாணவர்களை அழைத்து உங்களுக்காக நான் போராடுகிறேன், ஆங்கிலம் தொடர்ந்து இருக் கப் போராடுகிறேன், முடியுமானால் மத்திய சர்க்காரிடத்தில் போர் கொடி உயர்த்துகிறேன், ராஜிநாமா செய்கிறேன் என்று கர்ட்டஸிக் காகச் சொல்லியிருந்தால் இந்த நிகழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாம். அதைச் செய்யத் தவறிய உங்களுக்கு தர்மபுரி நல்ல பாடம் புகட்ட இருக்கிறது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர் :** *கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 1965-66-ம் ஆண்டு நிதி நிலை அறிக் கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.*

1965-66-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டமானது புது வரிகள் ஏதும் இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மிக நல்ல முறை யில் இந்தத் திட்டமானது தயாரிக்கப்பட்டிருப்பதைப்பற்றி நான் முதலில் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[6th March 1965

[திரு. எம். பி. முத்துக் கருப்பண்ணசாமி கவுண்டர்]

அடுத்தபடியாக, கடந்த 4-5 நாட்களாக இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலும் யாரும் அதிகமாகப் பேசவில்லை. இந்திக் கிளர்ச்சியைப் பற்றித்தான் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டு வருகிருர்கள். அதைப்பற்றி நானும் ஒரு சில வார்த்தைகள் பேசலாம் என்று நினைக்கிறேன். இந்திக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன் நம் அமைச்சர் அவர்கள் போன ஜனவரி மாத சட்ட சபைக் கூட்டத்திலே என்ன பேசியிருக்கிருர்கள்? மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டாம், தமிழுக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படாது, இந்தியைத் திணிக்க மாட்டார்கள். திணிக்க விடமாட்டோம் என்று அறிவித்திருக்கிருர்கள். அதற்குப் பிறகும் மாணவர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கிருர்கள். இவ்வளவு பலமான கிளர்ச்சி ஏற்படும் என்று அவர்களும் கூட நினைத்திருக்க மாட்டார்கள். சாதாரணக் கிளர்ச்சி என்று எண்ணியிருப்பார்கள். முடிவு என்ன ஆயிற்று? பெரிய குழப்ப நிலைமை ஏற்பட்டு விட்டது. நாட்டிலே அராஜகக் காரியங்கள் நடந்து விட்டன. அதற்குச் சமூக விரோதிகள் தான் காரணமாக இருந்தார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 'நாங்கள் அதில் கலந்துகொள்ளவில்லை' என்று சொல்லுகிருர்கள். கலந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனல் அவர்கள் சொல்லுவதைப் பார்க்கும்போது, அவர்கள் இங்கே வீரமாகப் பேசுவதைப் பார்க்கும்போது அவர்கள் கண்டிப்பாகக் கலந்து இருப்பார்கள் என்று எண்ண வேண்டிய நிலை இருக்கிறது. ஏன்? ஆளும் கட்சி தான் காரணம் என்று சொல்லும்போது அவர்களும் ஏன் கலந்திருக்கக் கூடாது என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. முதல் அமைச்சரைப் பார்த்து ஏன் இன்னும் ராஜிநாமா செய்யாமல் இருக்கிறீர்கள் என்று கேட்கிருர்கள். அவர்கள் ஏன் ராஜிநாமா செய்ய வேண்டும்? நீங்கள் அல்லவா ராஜிநாமா செய்திருக்க வேண்டும்? குண்டு அடி பட்டவர்களுக்குப் பரிந்து பேசுவது போலப் பேசுகிற நீங்களல்லவா ராஜிநாமா செய்திருக்கவேண்டும். எங்கள் குழந்தைகள் பாடசாலைகளில் படிக்கவில்லையா? முதல் அமைச்சர் அவர்களுடைய குழந்தைகள் இல்லையென்ருலும் அவர்களுடைய பேரக் குழந்தைகள் இல்லையா? குழந்தைகள் பேரில் எங்களுக்கு என்றும் அக்கறை உண்டு. நீங்கள் இப்படி உணர்ச்சியாகப் பேசுவதன் காரணமாக உங்கள் கிளர்ச்சி வெற்றிபெறவில்லையே என்று எண்ணுகிறீர்கள் என நினைக்க வேண்டியிருக்கிறது. இராமாயணத்தில் ஒரு கதை வருகிறது. ராமனிடம் வந்து சூர்ப்பனகை பேசிக்கொண்டிருந்தபோது, அந்தச் சமயத்தில் சீதை அங்கு வந்தபோது, 'யாரடி நீ இங்கு வருவது? நான் என்னுடைய நாயகனுடன் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே' என்று சீதையைக் காட்டிக் கேட்டாளாம். அந்த மாதிரி இருக்கிறது 'நீங்கள் என் ராஜிநாமா செய்யவில்லை' என்று முதல் அமைச்சரைப்பார்த்துக் கேட்பது. இந்த மாதிரிப் பேசுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. கலியாணம் ஆகாதவர்களே மாணவர்களுக்குப் பரிந்து சொல்லுகிருர்கள். இதைப் பார்க்கும் போது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. அப்படி நமது அரசு நல்ல நிலைமையில் நடக்க நமது அமைச்சர் அவர்கள் இந்த

6th March 1965]

[திரு. எம். பி. முத்துக் கருப்பண்ணசாமி கவுண்டர்]

முறையை ஏற்படுத்தாமல் இருந்தால் பொள்ளாச்சியில் பாடசாலை எரிந்திருக்குமா, அல்லது திருப்பூரில் அங்கு போலிஸ் அதிகாரிகள் உயிரோடு தீயிடப்பட்டிருப்பார்களா, அல்லது தபால் ஆஃபீஸ்கள் தான் தீயிடப்பட்டிருக்குமா, அல்லது அரசாங்க பஸ்கள் பெட்ரோல் ஊற்றப்பட்டு தீயிடப்பட்டிருக்குமா? இந்த நிலைமை ஏற்பட யார் காரணம்? மாணவர்கள் அல்ல. மாணவர்கள் வேண்டுமானுல் ஒரு சிலர் இருக்கலாம். தீய சக்தி தான் காரணம் என்று சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவு பிரம்மாண்ட காரியங்கள் நடந்தாலும் கூட, ராணுவம் வந்ததைப் பற்றி, ராணுவத்தை ஏன் வரவழைத்தீர்கள் என்று கேட்கிருர்கள். ராணுவம் வராமலிருந்தால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும்? சட்ட மன்றத்தில் நாமெல்லாம் வந்து பேசக் கூடிய நிலைமை இருக்குமா? ரயிலில் வர முடியுமா? காரில் வர முடியுமா? யாரும் வர முடியாது. ராணுவம் வந்ததால் தான், அடக்குமுறை ஏற்பட்டதால் தான் சுமுக நிலைமை ஏற்பட்டது. அதற்காகவா முதல் அமைச்சர் ராஜிநாமா செய்ய வேண்டும்? இந்த முறையில் செய்யாமல் இருந்தால் என்ன ஏற்படும்? இராமாயணத்தில் ஒரு பாட்டில்—

'ஆறத்திருேடன்றி நின்ருர் அவர்
வேரறுப்பேன்; வெருவன்மின்
நீரென்ருன்'

என்று ராமர் சொல்லியிருக்கிருர். 'தரும சிந்தைக்கு மாருக யாராக இருந்தாலும் வேர் அறுப்பேன்' என்று ராமர் சொல்லியிருக்கிருர். அந்த முறையில் அமைச்சர் அவர்கள் கடமையை ஆற்றியிருக்கிருர். கிராமப் புறங்களில் கூட இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. கிராமப்புறங்களிலே கூட வாரத்திற்கு ஒரு முறை இந்த ராணுவத்தைச் சுற்றிப் போக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கோ. சி. மணி**: மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறுகிற 1965-66-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையையொட்டி நடைபெறுகிற பொது விவாதம் வழக்கு மன்றத்திலே வாதி பிரதிவாதி தாப்பிலே நடத்தப்படுகிற வாதத்தைப் போல நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை எல்லோரும் ஒப்புக்கொண்டு இந்த மன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிருேம். அராஜகச் சம்பவம் நடைபெற்றது, நடக்கக் கூடாதது நடந்து முடிந்திருக்கிறது. முடிந்த பிறகு பொறுப்பு நீயா நானு என்று விவாதிக்கிருேம் என்று ஒத்துக்கொண்டு பேசுகிருர்கள். முதல் அமைச்சர் ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொன்னுலேயே அது ஒரு துராக்ருதமான சொல் என்று நினைக்கிருர்கள்.

இந்த ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிற நாங்கள் இதைக் கூடச் சொல்வது தவறு என்று சொன்னுல், இதைவிட வேறு என்ன சொல்லுவது என்று தங்கள் மூலமாக அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். அதிலும் எங்களுடைய முதல் அமைச்சர் கோழையா என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கேட்கிருர்கள். காங்கிரஸ் கட் 1 p.m.

[திரு. கோ. சி. மணி] [6th March 1965

சியைச் சேர்ந்தவர்கள் உயர் மட்டத்தில் இருக்கிறவர்கள் இரண்டு பேர்கள் இதே பிரச்னையில் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருவர் ராஜிநாமா செய்திருக்கிறார்களே, ராஜிநாமா செய்தவர்கள் கோழையா, செய்யாமல் இருக்கிறவர்கள் வீரர்களா ? இந்தப் பிரச்னையை இப்படியெல்லாம் அலசிப் பார்ப்பதைவிட இது எப்பொழுது உருவாக்கப்பட்டது, யாராலே உருவாக்கப்பட்டது, இது ஏன் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது, திடீரென்று வந்ததா, மெல்ல மெல்ல வந்ததா ? நம்மால் வந்ததா, மாற்றார் வந்ததா ? நாம் பொறுத்துக்கொள்ளக் கூடியதா, பொறுத்துக்கொள்ள முடியாததா, எதிர்காலத்தில் வாழவைக்கக் கூடுமா, வாழ வைக்க கூடாததா என்ற பிரச்னையை இந்த நேரத்திலிருந்து தான் எண்ணிப் பார்க்கவேண்டும். யார் இதைப் பற்றி எடுத்துச் சொன்னாலும், அவர்கள் மீது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் குற்றத்தைச் சாட்டிக் கொண்டே வந்தார்களே தவிர, சொல்லுவதிலே உள்ள உட்பொருளை அவர்கள் அந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவில்லை. பத்திரிகைகள் சொன்னாலும் சரி, பத்திரிகைகள் தலையங்கம் தீட்டினாலும் சரி; எண்ணிப் பார்ப்பதில்லை. சுதேசமித்திரன் பத்திரிகை ஒரு தேசிய ஏடு என்று நாமெல்லோரும் கருதுகிறோம். அவர்களும் பல முறை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பத்திரிகை என்ன தவறு செய்தது ? அது செய்த ஒரே குற்றம் அமைச்சர் அவர்கள் கிளர்ச்சி நடந்ததற்குப் பின்னாலே சொன்னதை முன்னாலே தலையங்கத்தில் தீட்டிற்று.

கனம் உதவி சபாநாயகர் : கேஸ் இருந்தால் அதைப்பற்றிக் கனம் அங்கத்தினர் குறிப்பிடவேண்டாம்.

திரு. கோ. சி. மணி : அப்படிப்பட்ட பிரச்னையை விட்டுவிட்டாலும், மற்றவர்கள் சொன்னதை ஏற்றார்களா என்றால், ஏற்கவில்லை. டாக்டர்கள் சொன்னால் குற்றம், வழக்கறிஞர்கள் சொன்னால் குற்றம். அவர் சொன்னதை அப்படியே ஒத்துக்கொண்டு யாராவது தலையை ஆட்டினால், அது தான் நன்மை என்று ஏற்றுக்கொண்டதன் காரணமாகத்தான் நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. மந்திரிகளுக்கு அழகு வரும் பொருள் உரைத்தல். ஆனால், வந்த பொருள்களுக்கு விளக்கம் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொன்னது குற்றமா ? பன்னெடுங் காலமாக, மீண்டும் மீண்டும் அமைச்சராக வாருங்கள் ஆனால், நாட்டில் இம் மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டது என்றால் அதைச் சமாளித்திருக்க வேண்டும். எத்தனை உயிர் போயிற்று, தமிழகத்தில் எத்தனை கோடி ரூபாய் சொத்துக்கு நஷ்டம் ஏற்பட்டது, இதற்குக் காரணம் ரௌடிகள், சமூக விரோதிகள் அந்தக் காலத்தில் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் ? தமிழ் நாட்டில் தானே இருக்கிறார்கள். எந்த ஆட்சிக்குக் கீழே இருக்கிறார்கள் ? காங்கிரஸ் ஆட்சிக்குக்

6th March 1965] [திரு. கோ. சி. மணி]

கீழேதானே இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் நீங்கள் விட்டு வைத்து வளர்த்துக்கொண்டு வந்தீர்களா? என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? 144 தடை உத்தரவு போட்டீர்கள். போலீஸ் அடக்குமுறையைப் அவிழ்த்து விட்டீர்கள். என்ன பிரயோசனம்? போலீஸ் அதிகாரி இறந்திருக்கிறார், போலீஸ் கான்ஸ்டேபிள் இறந்திருக்கிறார், மாணவர்கள் இறந்திருக்கிறார்கள், பொது மக்கள் செத்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. தன்னைத் தானே மாய்த்துக்கொண்டு எத்தனை பேர்கள் மடிந்தனர். அப்பொழுது அவர்களுக்குத் தந்த பட்டம் என்ன? வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம், அல்லது வேறு காரணங்களால் உயிரை விட்டிருக்கலாம், ஆத்திரப்பட்டு செய்த செயல் என்றெல்லாம் பட்டம் கொடுத்தீர்கள். இந்தியை எதிர்க்கிறேன், தமிழ் வாழவேண்டும், இந்த நாட்டில் இந்தி புகுந்துவிடுமோ என்று அஞ்சிச் சாகிறேன் என்று பாக்கெட்டில் எழுதி வைத்துக்கொண்டு, பெட்ரோலை ஊற்றி தன்னைத்தானே எரித்துக்கொண்டு செத்தார்கள். அப்பொழுது சிந்தித்துப் பார்த்தார்களா? திடீரென்று இந்த ஆபத்து வந்ததா? நாங்கள் திராவிடக் கழகத்தில் இருக்கும்பொழுதும் இந்தியை எதிர்த்தோம், முன்னேற்றக் கழகத்திலிருக்கும்போது இந்தியை எதிர்க்கிறோம், நீண்ட நெடுங்காலமாக இந்தியை எதிர்த்துக் கொண்டு வருகிறோம், இந்தியை எதிர்க்கின்ற ஒரே காரணத்தினாலே நாங்கள் குற்றவாளிகளா? நாங்கள் தான் தூண்டி விட்டவர்களா? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் நல்லவர்களா? கொஞ்சம் யோசித்துச் சொல்லவேண்டும். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுங்கட்சி உறுப்பினர் தஞ்சை நகரில் தி.மு.க. வினர் மாணவர்களுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுத்தார்கள், ரொட்டி, பட்டாணி வாங்கிக் கொடுத்தார்கள் என்றெல்லாம் சொல்லி, அதன் காரணமாக அவர்கள் தூண்டி விட்டவர்கள் என்று சொன்னார். நான் குடந்தையில் நேரில் கண்ணாலேயே பார்த்தேன். காரில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரமுகர், முக்கியமானவர், வந்துகொண்டிருக்கும் நேரத்தில்; மாணவர்கள் உண்டியைக்காட்டி காசு கேட்டபோது முதலில் ரூ. 10 போட்டார் போதுமா என்று கேட்டார், மாணவர்கள் இன்னும் போடுங்கள் என்று கேட்டார்கள். மீண்டும் ரூ. 15 போட்டார். ரூ. 25 கொடுத்துவிட்டு தன்னுடைய காரை எடுத்துச் சென்றார். இப்படிச் செய்தால் அவர் தூண்டிவிட்டவர் இல்லையா? அந்தக் காசைக் கொண்டு பெப்பர்மெண்டு வாங்க முடியாதா? இறந்து போன போலீஸ் அதிகாரி மனைவிக்கு ரூ. 15,000; 20,000 பணம் திரட்டிக் கொடுக்கிறீர்கள். ஒத்துக்கொள்கிறேன், இரக்க மனப்பான்மை இருக்கிறது. அந்த ரூபாயில் ஒரு அணா காசுக்கு மஞ்சள் குங்குமம் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு அந்த அம்மையார் வாங்க முடியுமா? தமிழ் நீதிக்கு ஒப்ப நான் கேட்கிறேன். இது நியாயமா? ஏதாவது கேட்டால், அரசாங்க முடிவு என்று சொல்கிறார்கள். எங்களை யோசனை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கும், எங்களுக்கும் சம்பந்தம் கிடையாதா? நீங்கள் மட்டும் தானா அரசாங்கம்? அரசாங்கத்திற்கு நாங்கள் யோசனை சொல்

லக்கூடாதா? நாங்கள் திடீரென்று இங்கே நுழைந்து விட்டோமா? அரசியல் சட்டத்திற்கு விரோதமாக வந்து விட்டோமா? நீங்களும் வாக்குப் பெற்று வந்தீர்கள். நாங்களும் வாக்குப் பெற்றுத் தான் வந்தோம். ஏதோ எண்ணிக்கை அதிகரித்த வசத்தின் காரணத்தினால் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். நாங்கள் இங்கே இருக்கிறோம். இந்த நிலை எப்பொழுதும் நீடிக்குமா? இந்த நிலை நீடிக்க வேண்டுமென்றால் நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொண்டால் போதுமா. நாங்கள் கேட்பது எல்லாம் இந்த நாட்டைக்காப்பாற்றுங்கள் என்று கேட்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது ராஜிநாமா செய்யாமல் இருந்தால், நிச்சயம் சொல்கிறேன், எங்களுக்கு வளர்ச்சி தான், எங்கள் கட்சிக்கு வளர்ச்சி தான். நாங்கள் வருத்தப்படுவதெல்லாம், நாட்டினுடைய வளர்ச்சி கெடுகிறதே என்பது தான். செய்கிற செயல்களை அத்தனையும் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களுக்கு வாருங்கள் என்று ஆளும் கட்சித் தரப்பினரால் கேட்கப்பட்டது. கிராமங்களில் நான் போய் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். இந்த நிலைமையில் மதுரை மீனாட்சி கோவிலில் முதல் அமைச்சர் அவர்கள் நெடுங்காலம் வாழ பூஜை நடக்கிறது. மற்ற சமயங்களில் நடக்கலாம், இந்த சமயத்தில் தான் பூஜை நடக்கவேண்டுமா? வாசாக்கு இருக்கிறதே தாங்க முடியாது. வக்கீல்கள், டாக்டர்கள், அச்சகங்கள் எல்லோருக்கும் உரிமைகள் பறிபோயிருக்கிறது. பத்திரிகை தர்மம் பறிபோயிருக்கிறது. அச்சகத்தில் ஏதாவது நோட்டீஸ் அடித்தால் தோலை உரித்துவிடுவோம் என்று சொல்லப்படுகிறது. இப்படியெல்லாம் உரிமைகள் எத்தனையோ மூலைகளில் பறிபோயிருக்கிறது. அச்சகங்களின் உரிமை பறிபோயிருக்கிறது, டாக்டர்களின் உரிமை பறிபோயிருக்கிறது, வழக்கறிஞர்களின் உரிமை பறிபோயிருக்கிறது, தமிழ்வேள் விசுவனுதம் அவர்கள் . .

(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1965-66-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். அண்மையிலே இந்த மகாணத்தில் நடந்த உயிர்த் தியாகங்கள், உலக சரித்திரத்திலேயே எங்கும் கண்டிராத நிகழ்ச்சிகள். மாணவர்களும், மற்றவர்களும் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள் இந்த தேசத்திற்காக. தமிழ் நாட்டிலே தமிழ் மொழிக்காக இந்த மாணவர்கள் இவ்வளவு பெரிய தியாகத்தை செய்திருக்கிறார்கள். உயிர் நீத்த மாணவர்கள் குடும்பத்திற்கும், —மாணவர்களின் கிளர்ச்சியை சரிப்படுத்துவதிலே அதிகாரிகள் இறந்திருக்கிறார்கள்—அவர்களுடைய குடும்பத்திற்கு நான் சார்ந்த சுதந்திராக் கட்சியின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிய மாணவர்களையும், போராட்டம் அமைதியாக நடப்பதற்காக உதவிய அதிகாரிகளையும், நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். ஏனென்றால், இந்தித் திணிப்

6th March 1965]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

பில் நாடு சர்வ மோசமான நிலையை அடைய இருந்தது. அந்த நேரத்தில் நாம் எல்லோரும் அதிலே பங்கு கொள்ள முடியாமல் போனாலும், மாணவர்கள் இவ்வாறு இந்தப் போராட்டத்தில் ஈடு பட்டு; எல்லோரும் இந்த மொழிப் பிரச்னையைப் பற்றி சிந்தித்தது, இதற்கு முடிவு காணவேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறார் கள் என்றால், அதைப்பற்றிப் பெருமைப்படவேண்டுமே தவிர வேறு என்ன இருக்கிறது. இவ்வளவு பெரிய கிளர்ச்சி இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. இரண்டு தரப்பிலும் அதைப்பற்றி ஏதோதோ கூறுகிறார்கள். அவரவர்கள் அபிப்பிராயத்திலே 25-ம் தேதியன்று முதல் முதலில் மதுரையில் இந்தக் கிளர்ச்சி ஆரம் பித்தது. 10 மணி சுமாருக்கு மதுரையிலே மாணவர்கள் ஊர் வலம் புறப்பட்டனர். வடக்கு மாசி வீதியில் இருக்கிற காங் கிரஸ் ஆபீசுக்கு முன்பு வந்தவுடனேயே, அங்கிருந்து சில பெண் மணிகள் விளக்குமாற்றைக் கொண்டு மாணவர்களை அடிக்க முற் பட்டார்கள். அது மட்டுமல்ல, காங்கிரஸ் ஆபீசிலிருந்து ஏராளமான செருப்புகள் எறியப்பட்டன. காங்கிரஸ் ஆபீஸ் மச்சிமேலிருந்து ஏராளமான கற்களையும் எறிந்தார்கள். அதன் பிறகு கதர்க் கொடி கட்டிய ஜீப் காரில் பல காலிகள் காங்கிரஸ் ஆபீசுக்கு வந்தார்கள். அதிலே, அந்த எதிர்ப்புப் போராட்டத் திலே தலைமை வகித்தவர்கள் காமராஜ் வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். வீரைய்யா என்ற காங்கிரஸ் பிரமுகரும், பெரு மாள் என்ற காங்கிரஸ் பிரமுகரும் சிதம்பர பாரதி என்ற எக்ஸ்- எம்.எல்.ஏ. யும் தங்கராசு என்ற காங்கிரஸ் காரியதரிசியும் பங்கு கொண்டார்கள். இதற்குத் தலைமை வகித்தார்கள். ஏராளமான ரௌடிகளும் கூட இருந்தார்கள். விரைய்யா என்ற நபரும் மற்றவர்களும் அரிவாள்களைக் கொண்டு வெட்டினார்கள். எல்லா அதிகாரிகளுக்கும் தெரியும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அங்கே நடைபெற்ற சம்பவங்கள் பற்றி போலீசார் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அங்கே இருந்தார் என்றால், தயவுசெய்து அவர்களிடம் உள்ள தகவல்களை போலீசாருக்கு; டி.ஐ.ஜி-க்கு எழுதிக் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: நான் இதை நேரிடையாகப் பார்க்கவில்லை.

கனம் உதவி சபாநாயகர்: எந்த அங்கத்தினரும், தான் நேரிடை யாகப் பார்க்காததைச் சொல்வது சரியில்லை. சொல்லும் விஷயத் திற்கு பொறுப்பு ஏற்கக் கூடிய முறையில், அவர்களுடைய தகவல் இல்லை என்றால், அதைப் பற்றி இந்தச் சபையில் குறிப் பிடாமல் இருப்பதுதான் நல்லது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: நான் சொல்லுகிற விஷயங்கள் இன்னும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கும் விஷயங்கள். நேற்றையதினம் கனம்

[6th March 1965

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

முதல் அமைச்சர் அங்கத்தினர்களிடம் தகவல் இருந்தால், கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினர்கள். அதனால்தான் இதைக் கூற முற்பட்டேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். முதல் அமைச்சர் அவர்கள், அந்த விவகாரங்கள் விசாரணையில் இருக்கின்றன. அவற்றிக்கு இங்கே தரப்படும் தகவல்கள் அங்கே கொடுக்கப்பட்டால் நலமாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். இந்த விவாதத்தில் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் கூட ஏழு பேர் வெட்டப் பட்டார்கள் என்பதைக் குறிப்பிடவில்லை . . .

கனம் உதவி சபாநாயகர் : அங்கத்தினருடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன ?

திரு. கே. ஏ. மதியழகன் : மை பாயிண்ட் இஸ் திஸ், சார். இந்தப் பிரச்சினையே மறைக்கப் பட்டிருக்கிறது சர்க்கார் அறிக்கையில். அதைத்தான் அங்கத்தினர் (திரு. கரியமாணிக்கம் அம்பலம்) குறிப்பிட்டு, ஆதாரம் இருக்கிறது, நிரூபிக்கலாம் என்கிறார்கள். அதை அங்கத்தினர் பேசவே கூடாது என்றால் . . .

கனம் திரு. எம். பக்தவச்சலம் : பிரசங்கம் செய்யலாம், ஆனல் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. இங்கே குறிப்பிட்ட பெயர்களைக் கனம் அங்கத்தினர் போலீசாருக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். போலீஸ் விசாரணையில் அது இருக்கிறது என்று சொன்னேன். அதை இங்கே தெரிவிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தெரியாத்தனம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அறிக்கையில் மறைத்திருக்கிறார்கள், இந்தச் சபைக்கு மறைக்கப் பட்டிருக்கிறது. சொல்வதற்கு என்ன தடங்கல் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருடைய பாணி அது, எனக்குத் தெரியும்.

MR. DEPUTY SPEAKER : There is no point of order involved in this.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த நபர்கள் அராஜகச் செயல்களில் ஈடுபட்டது மதுரை மக்களுக்குக் கண் கூடாகத் தெரிந்த விஷயம். அங்கே மக்கள் பச்சையாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் மீது இந்தச் சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன் என்பதைப் பற்றி எல்லோரும் யோசிக்க வேண்டும். இந்தக் காங்கிரஸ் பிரமுகர்கள் நமது உள்துறை அமைச்சருக்கு வலது கரம் போன்றவர்கள் எல்லோரும் . . .

கனம் திரு. பூ. கக்கன் : அவர்களெல்லாம் காங்கிரஸ் ஊழியர்கள். ரௌடிகளை, சமூக விரோதிகளை உடனடியாக அடக்க வேண்டிய பணியில் வேலை செய்திருப்பார்கள்.

6th March 1965]

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : அவர்கள் குற்றம் செய்தவர்கள். ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: விசாரணையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கத்தினர் சொல்வது உண்மை என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஆகவே, இப்பொழுது. . . .

கனம் உதவி சபாநாயகர் : அங்கத்தினருடைய நேரம் ஆகி விட்டது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஆகவே, இப்பொழுதாவது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 26-ம் தேதி நடந்த கடைசி ஊர்வலத்திலே, மதுரையில் ராஜாஜி அவர்களையும், திரு. தியாகராஜ செட்டியார் அவர்களையும் அறிஞர் அண்ணா அவர்களையும் . . .

கனம் உதவி சபாநாயகர் : அடுத்த அங்கத்தினர் திரு. ராஜ கோபாலசாமி இப்பொழுது பேசுவார்.

*** திரு. ரா. ராஜகோபாலசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதி நிலை அறிக்கையில் புது வரி எதுவும் இல்லாமல், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கிராக்கிப் படியை உயர்த்திக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. மின்சாரம், நீர்ப்பாசனம், ரோடு வசதி, சுகாதாரம் போன்ற திட்டங்களுக்கு பல தொகைகளை ஒதுக்கி அவை நல்ல முறையிலே வழிவகை செய்திருக்கிறார்கள். விவசாயத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கி நல்ல பல திட்டங்களை கூறியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தன் உரையில், "ADT -27 என்கிற குறுவை ரக நெல் விதை ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ரக நெல் ரசாயன உர வகைகளை அதிகமாக ஏற்றுக் கொண்டு தலைசாயாமல் அதிக விளைச்சல் தரக்கூடியது. ADT -20 நெல் ரகத்தைப் பயிரிட்டால் கிட்டுகின்ற சராசரி 2,000 பவுண்டுகளுக்கு மாறாக, ADT 27 ஏகராவிற்கு சுமார் 4,000 பவுண்டு விளைச்சல் கிடைக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்றைய முன் தினம் கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள், அது மாதிரி கிடையாது, நடவாத காரியம். அப்படி 4,000 பவுண்டு நெல் உற்பத்தி கிடைக்கச் செய்தால் நான் ராஜினாமா செய்கிறேன் என்று சவால் விட்டார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலம் சொல்லிக் கொள்கிறேன்; இந்த விதையானது ஜப்பான் நாட்டிலேயிருந்து Norin—7 நெல் கொண்டுவரப்பட்டு அதை நமது நாட்டு கிச்சடி நெல்லுடன் ஒட்டு சேர்த்து அதிலிருந்து தான் இந்த ADI- 27-ம் நெம்பர் நெல்லானது உண்டாக்கப்

[திரு. ரா. ராஜகோபாலசாமி] [6th March 1965

பட்டிருக்கிறது. இது அதிக உரத்தைத் தாங்கும், கட்டையாகவும் (Stiff) கெட்டியாகவும் உள்ள தாளை உடையதாக தலை சாயாமல் இருக்கும் என்று ஆராய்ந்து கண்டு பிடித்திருக்கிறார்கள். அதோடு அதிக மகசூலும் கொடுக்கும். இதையெல்லாம் ஆராய் மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆராய்ச்சியாளர்கள் ஒரு நாள், இரண்டு நாள், அல்லது ஒரு வருஷம், இரண்டு வருஷம் வேலை செய்தவுடன் தங்கள் கண்டுபிடிப்பைப் பற்றிச் சொல்லிவிடுவதில்லை. நம்முடைய புராண இதிகாசங்களிலும் சமய நூல்களிலும் ஏழேழு ஜன்மம் என்று கூறுவது போல, ஏழு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்த பிறகு, எட்டாவது ஆண்டு; தங்களுடைய ஆராய்ச்சிப் பண்ணையில் போட்டுப் பார்க்கிறார்கள், பிறகு ஒன்பதாவது ஆண்டில்; பல டெஸ்ட் ப்ளாட்டுகளில், விவசாயிகளுடைய நிலங்களில், போட்டுப் பார்த்த பிறகு; அதில் திருப்தியடைந்த பிறகு; பத்தாவது ஆண்டில் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்த புது ரக விதை நெல்லை ஒரே நிமிஷத்தில் புறக்கணித்து, மறுத்து நண்பர் சீமைச்சாமி சவால் விடுகிறாரே என்றால், உதவி சபாநாயகர் அவர்களே; தங்கள் மூலம் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ரக நெல்லை வைத்து, 4,000 பவுண்டு அல்ல; அதற்கும் அதிகமாகவே விளைவித்துக் காட்டுகிறேன். அப்படிச் செய்தால் கனம் சீமைச்சாமி ராஜினாமா செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சென்ற இந்தி எதிர்ப்புக் கலவரத்தின்போது நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி இங்கே கூறப்பட்டன. மதிப்பிற்குரிய கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மிகவும் மோசமான படியெல்லாம் நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களைத் தாக்கிப் பேசியிருக்கின்றார்கள். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் பேசும்போது, "இந்த ஜனநாயக நாட்டில் முதல் அமைச்சரை ராஜினாமா செய்யச் சொல்வதற்குக் கூட எங்களுக்கு உரிமை இல்லையா?" என்று கேட்டார்கள். ஜனநாயக நாட்டில் அவர்களுக்கு என்ன உரிமை கொடுக்கப்படவில்லை ? சொல்லவேண்டியதையெல்லாம் தான் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே ? அவர்கள் எதைச் சொல்லாமல் விட்டார்கள் ? அவர்கள் சொல்வது சரி, அல்லது தவறு என்று ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துச் சொல்ல எங்களுக்கு உரிமை இல்லையா ? என்று நான் தங்கள் மூலமாக அவர்களைக் கேட்கின்றேன். நண்பர் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசும்போது, போலீஸ் ஆட்சி 'மிலிடரி ஆட்சி நடத்துகிறார் கையாலாகாத முதலமைச்சர் பக்தவத்சலம்' என்று மிகவும் தாக்கிப் பேசினார்கள். பொள்ளாச்சியில் நடந்தது என்ன ? எப்பேர்ப்பட்ட கிளர்ச்சி அங்கே நடந்தது ? ஒரு மாணவராவது அதில் சம்பந்தப்பட்டாரா ? இல்லை. அத்தனை பேர்களும் சமூக விரோதிகள். அங்கு ராணுவம் மாத்திரம் வரவழைக்கப்பட்டு அந்தக் கிளர்ச்சியை ஒடுக்கியிராவிட்டால், பொள்ளாச்சி நகரமே எரிந்து சாம்பலாகியிருக்கும் என்று நான் திட்டவட்டமாக இந்தச் சபையிலே கூறிக்கொள்ளுகிறேன். ராணுவத்தை வரவழைக்காமலிருந்து நிலைமை வேறு விதமாகியிருந்திருந்தால், அப்பொழுது அவர்கள் வேறு விதமாகப் பேசக்கூடும். "நிலைமை

6th March 1965] *[திரு. ரா. ராஜகோபாலசாமி]*

அப்படி இருந்ததே, ஏன் முதல் அமைச்சர் ராணுவத்தை அங்கே வரவழைத்திருக்கக் கூடாது? போலிசார் ஏன் கையைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்? ராணுவம் சும்மா நின்று கொண்டிருந்ததா? என்று எல்லாம் இதே மன்றத்தில் அவர்கள் பேசக்கூடும். ஆகையால், முதல் அமைச்சர் அவர்கள் எதை எதை எந்தக் காலத்தில் செய்யவேண்டுமோ அதை நல்லபடியாகச் செய்து, ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கும் நல்லபடியாக உத்தரவிட்டு, அதை அவர்கள் நிறைவேற்றச் செய்து, இந்த நாட்டிலே ஏற்பட்ட அராஜகத்தை ஒடுக்கி, நாட்டையும், நாட்டு மக்களையும் காத்திருக்கிறார்கள்.

நாங்கள் ஆவேசப்பட்டு பேசுவதாக எதிர்த் தரப்பில் சிலர் எங்களைக் குறித்துச் சொன்னார்கள். நண்பர் திரு. மாதவன் அவர்கள் ஆவேசப்பட்டுப் பேசவில்லையா? நண்பர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் ஆவேசப்பட்டு பேசவில்லையா? என்று நான் தங்கள் மூலமாகக் கேட்கின்றேன். ஆகையால், எப்படியாவது இந்தச் சர்க்காரை ஒழிக்க வேண்டும், அதற்காக எந்த வகையிலும் இந்தச் சர்க்காரைக் குறை சொல்லவேண்டும், மன்றத்திலும் குறைசொல்ல வேண்டும், பொது மக்களிடத்திலும் குறை சொல்லிப் பேசவேண்டும்—என்று கங்கணம் கட்டிக்கொண்டுதான் இந்த வேலைகளையெல்லாம் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. நமது முதலமைச்சர் அவர்களைக் குறித்து கனம் உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறும்போது, "நான் உங்களைப் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன், ராஜினமா செய்யுங்கள், இல்லாவிட்டால் மன்னிப்பாவது கேளுங்கள்" என்று சொன்னார். எதற்காக நமது முதல் அமைச்சர் அவர்கள் ராஜினமா செய்வது, மன்னிப்புக் கோருவது? என்று நான் அவர்களைக் கேட்கின்றேன், தங்கள் மூலமாக. நமது முதலமைச்சர் என்ன தவறு செய்துவிட்டார், மன்னிப்புக் கோர? ராஜினமா செய்ய? இந்த நாட்டில் ஏற்பட்ட அராஜகத்தை அடக்கி நாட்டில் பொது மக்களின் உடைமைகளை காத்து பந்தோபஸ்தை நல்ல முறையில் நிலைநாட்டியதற்காகவா நமது முதல் அமைச்சர் அவர்கள் ராஜினமா செய்ய வேண்டும்? என்று நான் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன், தங்கள் மூலமாக.

"1967-இல் பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று அவர்கள் சொல்கிறார்கள். பார்த்துக்கொள்ளட்டுமே. ஜனநாயக முறையில், தங்கள் கொள்கைகளை மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி, மக்களுடைய வாக்குகளைப் பெற்று அரச பீடம் ஏற யாருக்கும் உரிமை இருக்கிறது. அவர்களுக்குத் திறமை இருந்தால் அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும். எங்களுக்குத் திறமை இருந்தால் நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம். எங்களை இப்படியெல்லாம் மிரட்டி ஒன்றும் செய்ய முடியாது என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம், தங்கள் மூலமாக. "1967-இல் பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று சொல்லுகிறவர்கள், எதற்காக முதலமைச்சரை ராஜினமா செய்யச் சொல்லவேண்டும். இப்போது ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்றால், 1967-இல் அவர்களுக்கு மக்கள் ஆதரவு தரும் நிலை இருந்தால், இதை அவர்கள் சொல்லவே மாட்டார்கள்.

[திரு. ரா. ராஜகோபாலசாமி] [6th March 1965

1967-இல் அவர்களுக்கு மக்கள் வோட்டுப் போடமாட்டார்கள் என்ற எண்ணத்தைக் கொண்டுதான் இப்படியாவது கிளர்ச்சியை ஏற்படுத்தலாம், சட்டசபையில் இப்படி எல்லாம் பேசி, அதெல்லாம் பத்திரிகையில் வந்து அதன் மூலமாக மக்கள் மனதை மாறச் செய்யலாம், என்று நினைக்கிறார்கள் போலும். இன்று மக்கள் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள், இந்த நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிக்காக மக்கள் மிகவும் மனம் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் மீது அனுதாபம் கொண்டு இருக்கிறார்கள். சர்க்காருக்கு நாட்டு மக்களிடையே நல்ல ஆதரவு இருக்கிறது. இந்த நேரத்தில், மற்றவர்கள் இந்த விதமாகக் சர்க்காரின் மீது சட்டசபையிலும், வெளியிலும் ஏதேதோ பேசி மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணவும் பார்க்கிறார்கள்.

கடைசியாக நான் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் உடுமலையில் சென்ற மாதம் பத்தாந்தேதியன்று சில கிளர்ச்சிகள் நடத்தப்பட்டன. ஆனால், இங்கு அவர்கள் சொல்கிறார்கள், 'எங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை' என்று பத்தாந் தேதியன்று அங்கு கண்ட பஸ்களை கல்லால் அடித்து நொறுக்கினார்கள், சேதப்படுத்தினார்கள். அப்போது ஒருவருடைய பஸ் அந்த வழியே வந்தது. ஒரு கட்சி மெம்பர் சொல்கிறார், 'இது ஒரு பெரிய முதலாளியினுடையது. இதை கல்லால் அடித்து நொறுக்குங்கள் என்று. உடனே ஒரு கட்சியைச் சார்ந்தவர், 'அந்த பஸ்ஸிடம் யாரும் போகக்கூடாது, அந்த பஸ் இந்தி எதிர்ப்பு ஆதரவாளருடையது. அந்த பஸ்சுக்கு எந்த விதமான கேடும் விளைவிக்கக் கூடாது' என்று சொன்னதும், அதை அப்படியே ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அதை விட்டு விட்டு, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவருடைய சினிமாக் கொட்டகைக்குச் சென்று, அந்த சினிமாக் கொட்டகையின் மேல், கல் எறிந்தும் லைட்டுகளை உடைத்தும் கண்ணாடிகளை உடைத்தும் சேதப்படுத்தினார்கள். (மணி அடிக்கப்பட்டது) நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. எஸ். எஸ். மணி: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1965-66-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் கடந்த நான்கு நாட்களாக இந்த மன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கையின் இறுதியிலே முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள வார்த்தையையொட்டி, அதாவது நாம் அனைவரும் இதுகாறும் விரும்பிக் காத்துவந்த அமைதியான சூழ்நிலை கடந்த சில வாரங்களில் பாதிக்கப்பட்டுள்ளது, என்பதை ஒட்டி பேசப்பட்டது. நாட்டில் நிகழ்ந்த பல கோரச் சம்பவங்கள் ஏற்படக் காரணம் என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும். இந்தி ஆட்சிமொழியாக ஏற்பட்டுவிட்ட ஒரு காரணத்தையொட்டி, மாணவர்கள் தமது எதிர்கால வாழ்க்கை இந்தியால் பாதிக்கப்படும் என்ற உள்ளுணர்வால் அவர்களிடம் ஒரு எழுச்சி ஏற்பட்டு, அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்தப் போராட்டம்—எதிர்ப்

6th March 1965] [திரு. வி. எஸ். எஸ். மணி]

புக் கிளர்ச்சி—எந்தக் கட்சியாலும் தூண்டப்படவில்லை என்று பெரிய மேதைகள் கூறியிருக்கின்றார்கள். டாக்டர் ஸி.பி. இராமசாமி அய்யர் போன்ற மேதைகள், 'ஸ்பாண்டேனியஸ் அப்ஸர்ஜ்' (spontaneous upsurge) என்று இதைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். இத்தகைய கருத்து கொள்வதை விடுத்து, நமது ஆளுங்கட்சி உறுப்பினர்கள், "இது திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் தூண்டிவிடப்பட்ட காரியம், இந்த மாணவர்கள் எழுச்சி, அவர்கள் சொந்த எழுச்சி அல்ல, இவர்களால் தூண்டிவிடப்பட்டது" என்று சொல்லி வந்தார்கள். இந்த பேச்சுக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு களங்கம் கற்பிக்க, ஒரு மாசு ஏற்படுத்த இவர்கள் இந்த விதமாக, உண்மைக்கு விரோதமாகச் சொல்லி வந்திருக்கிறார்கள். * * * மதுரையில் நடந்த மாணவர்களுடைய ஊர்வலம் மிகவும் சிறந்த முறையில், அமைதியான முறையில் நடந்தது. மாணவர்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் பொருட்டு மாசி வீதியிலே ஊர்வலம் வந்தார்கள். போலீஸ் பாதுகாப்பு இருந்தது. எந்தவிதமான பலாத்கார செயலில் ஈடுபடவும் அவர்கள் திட்டமிடவில்லை. "ஆட்சிமொழி இந்தி ஒழிக" என்று குரல் எழுப்பிக்கொண்டு வந்த நேரத்திலே, காங்கிரஸ் அலுவலகத்திற்கு முன்னால் அவர்கள் போய்கொண்டிருந்த சமயத்தில், திட்டமிட்டு பலாத்காரச் செயலில் ஈடுபட்ட சில காங்கிரஸ்காரர்கள் ஆயுதங்கள் கொண்டு தாக்கிய பிறகு தான் மாணவர்களுக்கு எழுச்சி ஏற்பட்டது, 1-30 p.m. ஆவேசம் ஏற்பட்டது. அதையொட்டித்தான் தென்னகத்தில் இவ்வளவு பெரிய கிளர்ச்சி உண்டாவது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாணவர்கள் அமைதியாக போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களை அப்படியே போகவிட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஒன்றும் நடந்திராது. ஆனால் காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின் பேரில் இந்தச் சர்க்கார் போலீஸ்காரர்களைவிட்டு அவர்களை அடிக்கச் செய்து, ஓட ஓட விரட்டச் செய்ததன் காரணமாகத்தான் இத்தனை பெரிய கிளர்ச்சியாக, கொந்தளிப்பாக அது மாறிவிட்டது என்று என்னால் சொல்ல முடியும். அடுத்தபடியாக . . .

கனம் உதவி சபாநாயகர்: தொடர்ந்து விவாதத்தை இன்று பிற்பகல் 2 மணி வரை நடத்தலாம் என்பதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். அதை முதன் மந்திரி அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சபை 2 மணி வரை தொடர்ந்து நடைபெற கனம் அங்கத்தினர்களுக்கு ஆடசேபணை இருக்காது என்று நினைக்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி: அடுத்தபடியாக தியாகராயா இன்ஜினியரிங் கல்லூரிக் கட்டிடத்திற்குள் போலீசார் நுழைந்து மாணவர்களை அடித்தார்களே, கல்லூரி முதல்வருடைய அனுமதியைப் பெற்று போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்தார்களா? அதந்க் கல்லூரி முதல்வர் அறிக்கை ஒன்று கொடுத்தார்களே, போலீஸ்காரர்

*** Expunged as ordered by the Chair.

[திரு. வி. எஸ். எஸ். மணி] [6th March 1965

கள் அதிக்கிரமமாக நடந்து கொண்டுள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி. அவை எல்லாம் உண்மை இல்லையா? காங்கிரஸ்காரர்கள் போலீஸ்காரர்களைவிட்டு வேண்டுமென்றே தூண்டிவிட்ட கலவரம் தான் நாட்டில் ஏற்பட்ட இத்தனை சேதங்களுக்கும் காரணம் என்று நான் சொல்வேன். பொள்ளாச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே நடந்த நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் காரணம் என்ன? போலீஸ்காரர்கள் கையில் இருந்து ராணுவத்தின் கைக்கு மாறிற்று உதவி கலெக்டர் மாவட்ட கலெக்டரை கேட்டாராம். ராணுவம் எவ்வளவு வேண்டுமென்று, "ஏதோ கொஞ்சம் அனுப்புங்களேன்" என்று இவர் பதில் சொன்னாராம். ராணுவம் வந்தது, சுட்டது, என்றவுடன் தான் பலாத்காரம் எல்லா விடங்களிலும் தலைதூக்கியது. (மணி அடிக்கப்பட்டது)

* திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1965-66-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் பேசுவதற்கு முன்பாக சென்ற மாதம் 10 ஆம் தேதி அன்று நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி அதுவும் என்னுடைய பகுதியில் நடந்த சம்பவங்களைப் பற்றி எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள அரவக்குறிச்சியில் என்ன கலவரம் நடைபெறுமோ என்ற ஐயத்தின் பேரில் தான் முன் கூட்டியே மாணவர்களைச் சந்தித்துப் பேச முயன்றோம். அவர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்திலே அவர்கள் அப்போது போடப்பட்டிருந்த 144 வது உத்தரவை எதிர்த்து ஊர்வலம் நடத்த விரும்பினார்கள், ஒரு சிலர் தூண்டுதலின் பேரில் நாங்கள் பேசிய ஒப்பந்தம் குலைக்கப்பட்டது. அவர்கள் அத்து மீறி தூண்டுதல் செய்தவர்களும் சேர்த்து ஊர்வலம் நடத்தினார்கள். அங்கங்கே கம்பங்களில் இருந்த கொடிகளை அறுத்து எறிந்தார்கள். தனிப்பட்டவர்கள் வீட்டில் கட்டப்பட்டு இருந்த கொடிகளையும் அறுக்க ஆரம்பித்தார்கள். அப்புறம் போலீஸ் ஸ்டேஷனை தாக்கினார்கள். இன்ஸ்பெக்டருக்கு மூன்று கல்லடிபட்டது. அப்போதும் அவர் கை எடுத்துக் கும்பிட்டு கலகம் செய்யாமல் இருக்கும்படி வேண்டிக் கொண்டார். அப்போது அந்த வழியாக வந்த எல்.ஜி.பி காரையும் தாக்கி, கண்ணாடிகளை உடைத்து பிரயாணிகளை நடுங்க வைத்தார்கள். அதன் பின் போஸ்டாபீசிற்குச் சென்று பெயர்ப் பலகையை எடுத்துக் கொடுக்கும்படி கோஷமிட்டனர். இன்ஸ்பெக்டரே சென்று அப்பலகையை எடுத்து வந்து கொடுக்க அதில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்து கோஷமிட்டுச் சென்றனர். இப்படி திட்டமிட்டு பலாத்காரச் செயல்களை வகுத்துக் கொண்டிருந்த நேரத்திலும் போலீஸ்காரர்கள் கண்ணீர் புகை குண்டையோ அல்லது துப்பாக்கிப் பிரயோகத்திலோ ஈடுபடாமலும் அமைதியை நிலை நாட்டினர்.

கரூரில் நடந்த பரிதாபகரமான சம்பவங்களைப் பற்றி நாம் கவனிக்க வேண்டும். கரூரில் வேண்டுமென்றே ஒரு சிலர் பலாத்காரச் செயல்களை தூண்டிவிட்டார்கள். அதுவும் அந்த இடத்தில்

6th March 1965] [திரு. செ. சதாசிவம்]

காங்கிரஸ்காரர்களுடைய பகுதி தான் பெரிதும் தாக்கப்பட்டது. காங்கிரஸ்காரர் அல்லாத பகுதியில் கிடையாது என்கிறபோதே வேண்டுமென்றே எதிர்கட்சிக்காரர்கள் திட்டமிட்டு இதைச் செய் திருக்கிறார்கள் என்பது தெரியும். காங்கிரஸ்காரர்களுடைய சொந்த உடைமைகள் தாக்கப்பட்டு இருக்கின்றன. தீ வைக்கப் பட்டு இருக்கின்றன. அங்கும் சரி போலீஸ்காரர்கள் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினால் அதற்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகவே முன்கூட்டியே மூட்டை மூட்டையாக வெங்காயம் வாங்கப்பட்டு இருக்கிறது. மண் உருண்டைகள், சாணி உருண் டைகள் சேகரித்து வைத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. நேற்று பேசிய எதிர்க்கட்சித் தோழர் திரு. வேலப்பன் அவர்கள் சொன்னதுபோல் காங்கிரஸ்காரர்கள் யாரும் இதைச் செய்ய வில்லை. காங்கிரஸ்காரர்களிடம் உள்ள சொந்த விரோதம் காரணமாக எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே முன்கூட்டி இத்தகைய செயல்களில் ஈடுபட ஏற்பாடு செய்திருந்திருக்கிறார் கள் என்பது இச்செயல்களைப் பார்த்தாலே தெரிகிறது. அங்கு ஏற்பட்டுள்ள சேதத்தைப் பார்க்கும்போது எனக்கு முன்பாகப் பேசிய உறுப்பினர்கள் அவர்கள் எடுத்துரைத்தது போல சர்க்கார் இவ்வளவு உறுதியாகவும், துரிதமாகவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிராவிட்டால் பொதுமக்களுக்குப் பெரும் தீங்கு ஏற்பட்டு இருந்திருக்கும். அங்கு தனிப்பட்ட ஸ்தாபனமாகிய எல்.ஜி பாலகிருஷ்ணன் கம்பெனியாரின் பஸ் ஒன்றை எடுத்துச் சென்று பீஸ் பீஸாகத் துணிகளை பெட்ரோலில் நனைத்து போட்டுத் தீயிட் டனர். அப்போது காங்கிரஸ்காரர்களுக்கு உதவியாக இருக்கும் எல்.ஜி.பி. கம்பெனி ஒழிக என கோஷமிட்டிருக்கிறார்கள் அதே போல் காங்கிரஸ் தொண்டராக நீண்ட நாட்கள் சேவை செய்து வந்திருக்கும் உண்மை ஊழியர் திரு. கோவிந்தராஜு பிள்ளை அவர்கள் கடை சூறை ஆடப்பட்டுள்ளது. அத்துடன் அவரை மாலை மூன்று மணிக்குள் கொண்டு வந்து சேர்க்காவிடில் அவ ருடைய குடும்பத்தினருடைய தலையைக் கொண்டுபோய் விடு வோம் என்று அவருடைய வீட்டில் சென்று மிரட்டி இருக்கிறார் கள் போலீஸ் டிப்டி சூப்பிரண்டு அடிப்பட்டு மரணவாக்கு மூலம் வாங்கப்பட்டு இருக்கிறது. போஸ்டாபீஸ் தாக்கப் பட்டது. எல்.ஜி.ஸி. கட்டிடம் தாக்கப்பட்டது. அவர்கள் தாக்கிய முன்சீப் போர்ட் கட்டிடங்கள் இன்றைய தினம் தரை மட்டமாக இருக்கிறது. ரெக்கார்டுகள் பூராவும் அழிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த நேரத்திலும்கூட போலீஸ்காரர்கள். துப்பாக்கி சூடு செய்யவில்லை. கொஞ்சம் நிதானமாகவே, உறுதி யாகவே அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. திருச்சியில் இருந்து போலீஸ் வந்த பிறகு தான் சுடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. சுட்ட பிறகு தான் அமைதி ஏற்பட்டது. மக்களுக்கு பாதுகாப்பு ஏற்பட்டது என்பதாக அங்குள்ளவர்கள் நினைப்பதில் பிசகு இல்லை. இந்தச் சர்க்கார் நிச்சயமாக இந்த வன்முறைச் செயலை அடக்காமல் இருந்திருந்தால் இத்தகைய

சகஜ நிலை இந்த நாட்டில் ஏற்பட்டு இருக்காது. ஆகவே இந்தச் சர்க்காரை மக்கள் பாராட்டுகிறார்கள் என்று சொல்லி இந்தச் சர்க்காரிடத்திலும் மக்களுக்குள்ள நம்பிக்கை வளர்ந்துதான் இருக்கிறது என்று கூறி முடித்து கொள்கிறேன்.

* திரு. பி. முருகையன் : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடந்துகொண்டிருக்கின்ற இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற வாசகத்திலே நம்முடைய விவசாய உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று இருக்கிறது. விவசாய உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்பதே நம்முடைய குறிக்கோள் ஆகும். தஞ்சை மாவட்டத்தில், பட்டுக்கோட்டை, ஓரத்த நாடு பகுதிகளிலே கிணறு வெட்டும் திட்டத்தை ஏற்பாடு செய்திருப்பதைப் போல் புதுக்கோட்டை, இராமநாதபுரம், அறந்தாங்கி போன்ற பகுதிகளிலும் கிணறுகள் வெட்டும் திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே புதுக்கோட்டைப் பகுதியிலே இந்த ஆண்டு மழையின்மை காரணமாக விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், என்பது வருந்தத் தக்கது. அந்த நிலையிலே விவசாயிகள் அங்கு துன்பப்பட்டுக்கொண்டு இருக்கும்பொழுது தீவிரக் கொள்முதல் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, விவசாயிகளிடத்திலே அதிகாரிகள் அண்டி நெல் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அங்கேயிருக்கிற விவசாய மக்கள் எலலாம் நெல்லுக்குப் பதில் எதைத் தருவது என்று எதிர்த்துக் கேட்கக்கூடிய நிலையிலே விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். நான் இதுபற்றி உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு மகஜர் அனுப்பி இருக்கிறேன். அந்த மகஜருக்கு அமைச்சரிடமிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்காதது பற்றி வருத்தம் அடைகிறேன். இனிமேலாவது இது விஷயத்தில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கலவரங்களைப்பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். கடந்த மாதம் எங்கள் தொகுதியிலே ஆலங்குடி கரம்பக்குடியில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே மாணவர்கள் ஆர்பாட்டம் நடத்தினார்கள். கடந்த மாதம் 12 ஆம் தேதியன்று கரம்பக்குடி பொதுமக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அனைத்துக் கட்சிக்காரர்களும் ஒன்றும் சேர்ந்து ஊர்வலம், ஹர்த்தால் நடத்துவது என்று முடிவு செய்து, தொடங்கினார்கள். 10 மணிக்கு ஊர்வலம் ஆரம்பித்து 11 மணிக்கு ஊர்வலத்தை முடித்துச் சென்று விட்டார்கள். போலீஸ் அதிகாரிகளும், ரெவின்யூ அதிகாரிகளும் ஊர்வலத்தை நடத்திச் சென்று ஊர்வலம் முடிந்த பிறகு அன்று பகல் 1 மணிக்கு ராணுவம் வரவழைக்கப்

6th March 1965] [திரு. பி. முருகையன்]

பட்டது. அப்பாவி மக்களையும், ராமநாதபுரத்திலிருந்து வந்து ஆடு மேய்ப்பவர்களையும், ராணுவத்தினர் பிடித்து அடித்து வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்.

கனம் உதவி சபாநாயகர்: கோர்ட்டில் உள்ள வழக்குகளைப் பற்றிப் பேச வேண்டாம்.

திரு. பி. முருகையன் : கலவரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராணுவம் வந்தது என்று தெரிவிக்கவும்.

திரு. பி. முருகையன் : 12—2—1965 தேதியன்று ராணுவம் கரம்பக் குடிக்கு வந்தது. அது மட்டுமல்ல, திருச்சியிலிருந்து, film representative சினிமாப் படம் எடுக்கும் ஏஜண்ட் ஆக வந்த ஒருவரையும் அடித்து அவர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். வயல்களிலே வேலை செய்துகொண்டிருந்த ஏழை விவசாயிகளை எல்லாம் அடித்து அவர்கள் மீதும் வழக்குகள் நடந்து கொண்டு வருகின்றன. அடுத்து 20 ஆம் தேதி இரவு 1 மணிக்குமேல் கரம்பக்குடி ஆலங்குடியிலும் எங்கள் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களையும், எங்கள் ஊர் தமிழ் ஆசிரியரையும் கைது செய்திருக்கிறார்கள். எங்கள் ஊர் உயர்நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியர் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர். அவரைக் கைது செய்து காவலிலே வைத்திருக்கிறார்கள். பொறுப்பில் விடவும் மறுத்துவிட்டார்கள். இதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. இந்த நிலைமைகள் உருவாக வேண்டியது அவசியந்தானா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ராணுவம் வரவழைக்க வேண்டிய நிகழ்ச்சி என்ன நடந்துவிட்டது இத்தனைக்கும் முதல் அமைச்சர் அவர்கள் தான் காரணம்.

***திரு. நா. சௌந்தரபாண்டியன் :** மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்த 1965-66 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைப் பேச முற்படுகிறேன்.

முதன் முதலில் கடந்த 2, 3 வாரங்களுக்கு முன்னால் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகத் திருச்சியிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாடும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துக்க தின விழாவும் தான் இந்தக் கிளர்ச்சிக்குக் காரணங்கள் என்று சொன்னால் மிகையாகாது. திருச்சியிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாடு மாணவர்களை ஒரு வகையில் தூண்டிற்று தி.மு.க. வின் துக்க தின விழாவானது குண்டர்களுக்கு ஒரு சாதகமாக அமைந்துவிட்டது. ஆனாலும் கூட இந்தக் கிளர்ச்சியை நல்ல முறையில் சமாளித்து நாட்டிலே நல்ல சூழ்நிலையை உண்டாக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இனிமேலும் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [6th March 1965

நிதி நிலை அறிக்கையில் நல்ல அம்சங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உணவு உற்பத்திக்காகப் பல நல்ல திட்டங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆனல் இந்தத் திட்டங்கள் எல்லாம் எவ்வளவு நல்ல முறையில் செயல்படுகின்றன என்பதையும் ஏழை விவசாயிகள் இந்தத் திட்டங்களினல் பலன் அடைகின்ருர்களா என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதே சமயத்தில் நிதி நிலை அறிக்கையில் நீர்ப்பாசனம் சம்பந்தமாகப் பல நல்ல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. சிற்றார் பட்டணங்கால்வாய், ராதாபுரம் கால்வாய்த் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதியிலுள்ள வள்ளியூர் பெரிய குளத்தைச் செப்பனிட வேண்டுமென்று முன்பே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காளிசாம்பான், குடமாடி அணைகளையும் செப்பனிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். தொழில் துறையிலே நாம் முன்னேற்றம் அடைந்திருந்தாலும்கூட இன்னும் நல்ல முன்னேற்றம் அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, சேலம் உருக்காலையைத் தமிழகத்தில் அமைக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வள்ளியூரில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என நிபுணர்கள் அறிவித்து இருக்கிருர்கள். அதுபற்றி இந்த நிதி நிலை அறிக்கையிலே இருக்குமென்று எதிர்பார்த்தோம். இது விஷயமாக மதிப்பிற்குரிய தொழிற் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டதில் அவர்கள் இந்த வருடம் பூர்வாங்க சர்வே நடைபெறுமென்றும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் பொதுத் துறையிலிருந்து இது நிறைவேற்றப்படும் என்று வாக்களித்திருக்கிருர்கள். இது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

அடுத்தபடியாக திருநெல்வேலியில் ஓர் பொறியியல் கல்லூரி ஏற்படுத்த தனியாருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2, 3 ஆண்டுகளாகத் தனியார் நடத்துவார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி இதுவரை ஒன்றும் தெரியவில்லை. தனியார் அதைத் திறக்க முன்வரவில்லையென்ருல் அரசாங்கமாவது அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இப்பொழுது 7 கலைக் கல்லூரிகள் தமிழகத்திலே திறக்கப் போவது மகிழ்ச்சிக்குரியதும், வரவேற்கத் தக்கதுமாகும். நான்குனேரி தாலுகாவில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று நான் அரசாங்கத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குறிப்பாகக் கடலோரப் பகுதி வாழ் மக்கள் நல்ல குடி நீர் இன்றி கஷ்டப்படுகிருர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகவே இது விஷயத்தில் மத்திய அரசோ அல்லது

6th March 1965] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

மாநில அரசோ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிழக் கடற்கரை ரோட்டை நல்ல முறையில் செப்பனிட வேண்டும் என்றும் செப்பனிடப்பட்ட பகுதிகளில் போக்கு வரத்துக்கு அனுமதிப்பது பற்றியும் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான குறை என்னவென்றால் திருநெல்வேலி கன்னியாகுமரி ரயில் பாதை இன்னும் போடப் படாததாகும். கடந்த பல ஆண்டுகளாக இந்த ரயில் பாதையைப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். பூர்வாங்க சர்வேக்கள் நடைபெற்று முடிந்தும்கூட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முதலிடம் கொடுக்கப்படுமா என்ற சந்தேகம் அந்த மக்களுக்கு இருக்கிறது. அந்தப் பகுதி மக்களுடைய சந்தேகத்தைத் தீர்க்க வேண்டிய கடமை இருப்பதால், மாநில அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே இதை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உணவுப் பிரச்சினை. இந்த ஆண்டு மற்ற மாவட்டங் களில் நல்ல மழை பெய்திருந்தாலும்கூட, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பருவ மழை தவறிவிட்டது. அதன் காரணமாக அங்கே உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதும் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக நாங்குனேரி, கோயில்பட்டி, சங்கரன்கோயில், திருச்செந் தூரில் ஒரு பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு வரி வஜா செய்ததைப் பற்றியும் கடன் வசூலை ஒத்தி வைத்திருப்பதைப்பற்றியும் வரவேற்கிறேன். அந்தப் பகுதி மக்கள் நல்ல அரிசி கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். குறிப்பாக கிராம மக்களுக்கு உணவு கிடைக்கக் கஷ்டமாக இருக்கிறது. இப்போது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பத்து லிட்டருக்கு மேல் கொண்டு போகக் கூடாது என்று அரசாங்க ஆணை இருக்கிறது. இதனை பரிசீலிப்பதாகவும் அதிக அளவு அரிசி கொடுக்க ஏற்பாடு செய்வதாகவும் கனம் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே செய்வதை உடனடியாகச் செய்தால் அந்தப் பகுதி மக்களுடைய நல்வாழ்வுக்கு உதவ முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசாங்க ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. அது அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் என்று சொல்ல முடியும்.

இந்த நிதி நிலை அறிக்கையில் கிராமங்களிலே மின்சார அபிவிருத்திக்காக மாநில அரசு நான்கு கோடியும், மத்திய அரசு ஒரு கோடியும் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்க விஷயம். குறிப்பாக மின்சாரம் கொடுப்பதில் கிராமங்களில் விவசாயிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்க மின்சாரம் மிகவும்

பயன்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் உணவுப் பற்றாக் குறையை உடனடியாகத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்மென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1965-66-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேச முற்படும்போது தமிழகத்திலே சமீபத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் தற்போதுள்ள நிலைமை யும் கண்முன்னே தோன்றுகிறது.

கடந்த ஆண்டு மிகவும் கடுமையான உணவு நெருக்கடியின் காரணமாகத் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு கடல் கொந்தளிப்பின் காரணமாக உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. அதை அடுத்து இந்தி எதிர்ப்புப் போராட் டத்தின் காரணமாக அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக நாட்டிலே பல அவல நிலைமைகள் ஏற்பட்டன. இதற்கெல்லாம் இந்த அரசுதான் காரணம் என்ற எண்ணம் மக்களுடைய மனத் திலே இருக்கிற சூழ்நிலையில் மேலும் புதிய வரிகளைப் போட்டு மக்களுடைய அதிருப்தியை ஏன் வளர்த்துக் கொள்ள வேண்டு மென்ற காரணத்தால்தானோ என்னவோ புதிய வரிகளைப் போடா மல் விட்டிருக்கிறார்கள்.

கல்விக்காகப் பெருந் தொகையை ஒதுக்கியிருக்கும் நேரத்தில் மதிய உணவுத் திட்டத்தையும் ஏறக்குறைய 30,000 ஆரம்பப் பள்ளிகளில் நடத்தி வருகிறார்கள். 60 லட்சம் மாணவர்களுக்கு மதிய உணவு கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும் கிராமப்புரங்களில் அளிக்கப்படுகிற மதிய உணவின் தரம் மிகவும் மோசமாக இருக்கிறதென்று சொல்ல ஆசைப்படுகிறேன். பொது வாக இதற்காகப் பொது மக்களிடமிருந்து வரக்கூடிய நிதியானது குறைவாக இருக்கிறதென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இந்த நேரத்தில் மதிய உணவுக்காக நிதி திரட்ட கொடிகள் மாதிரி ஏதாவது போட்டு அதற்காக ஒரு தினத்தை ஒதுக்கி நிதி சேகரித் தால் மேலும் நல்ல உணவை அவர்களுக்கு அளிக்க முடியும் என்ற காரணத்தால் அதற்கு சர்க்கார் வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆறு கலைக் கல்லூரிகள் திறப்பதாகக் கூறியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு செங்கற்பட்டில் திறக்கப்பட வேண்டிய பெண் கல்லூரியானது சென்னைக்கு மாற்றப்பட்டு விட்டது. அதற்கு இடவசதியும் மற்ற வசதிகளும் இல்லையென்று காரணம் காட்டப் பட்டது. மருத்துவக் கல்லூரியை உடனடியாக ஏற்படுத்த வேண்டி யிருந்த காரணத்தால் தள்ளிப் போடப்பட்டது என்று அமைச்சர் அவர்களை நேரில் கேட்டபோது குறிப்பிட்டார்கள். இப்போதாவது செங்கற்பட்டில் ஒரு கலைக் கல்லூரியை ஏற் படுத்துவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

6th March 1965] [திரு. செ. கோ. விஸ்வநாதன்]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள மகாபலிபுரத்தில் அணு மின் நிலையத்தை அமைக்க வகை செய்திருக்கிறார்கள். கடந்த சட்டசபைக் கூட்டத்தின்போது ஒரு கேள்விக்கு விடை அளிக்கிற நேரத்தில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள்; அந்த அணு மின் நிலையத்தை அமைப்பதற்கான நிலங்கள் எல்லாம் இன்னும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட காலதாமதங்களையெல்லாம் தவிர்த்து அதைத் துரிதமாக அமைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்வதோடு அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதைப் பற்றியும் சீர்தூக்கிப் பார்த்து திட்ட காலத்திற்கு முன்பாகவே செயல்படும் நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலிருந்து செங்கற்பட்டுக்குச் செல்லும் பாதையில் மூன்று மேம்பாலங்களைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாம்பரம் ரயில் நிலையத்திற்கு அருகிலும் செங்கற்பட்டு ரயில் நிலையத்திற்கு அருகிலும் மேம்பாலம் இல்லாததன் காரணமாகப் போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பித்து விடுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே நம்முடைய சர்க்கார் மூன்று மேம்பாலங்களைக் கட்டி அந்தப் பாதையில் போக்குவரத்தைத் துரிதப்படுத்த வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால் கிராம மக்களுக்குக் கூட்டுறவு இலாகா மூலமாகக் கொடுக்கப்படுகின்ற கடன் உதவி மற்ற உதவிகள் எல்லாம் அவர்களுக்கு நேரடியாகக் கிடைக்கின்ற நிலைமை இல்லை. மார்க்கட்டிங் சொசைடி மூலமாக உர விநியோகம் நடக்கிறது. அந்த உரம் சரியானபடி வழங்கப்படாமல் கள்ள மார்க்கட்டிலே விற்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. கூட்டுறவுச் சங்கத் தலைவரே ஊழலிலே ஈடுபட்டிருக்கிறார். கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீது உர விநியோகத்தைப் பொறுத்துப் பல புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்களே தவிர, இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உரம் சரிவரக் கொடுக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு உரத்தைக் காலாகாலத்தில் வழங்குவதற்கு வழி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய தமிழகத்திலே துப்பாக்கிச் சூட்டின் காரணமாகப் பல பேர் இறந்தார்கள். இந்தி புகுத்தப்படுகிறது என்பதற்குப் பல காரணங்களை நாங்கள் எடுத்துக் கூறினோம். கனம் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களைப் பற்றி அந்த வார்த்தைகளைச் சொல்லாமல் இருந்திருந்தால், பலவாறாக அவர்களைப் பற்றிக் குறைவாகச் சொல்லாமல் இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அவருடைய வார்த்தைகள் தாம் மாணவர்களுக்கு உற்சாக மூட்டிற்று. இந்தியை எதிர்த்து 'கடைசி முடிவு போராட்டந்தான்' என்ற முடிவுக்கு வாச்

[திரு. செ. கோ. விஸ்வநாதன்] [6th March 1965

செய்தது. அந்த நிலைமையை உருவாக்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 8th March 1965.

1-59 p.m. The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

44. List of Unstarred Questions and Answers from Nos. 17 to 40.

APPENDIX

[*Vide* answer to unstarred question No. 31 on page 553]

Serial number and name of person who stayed.	*Purpose of visit to Ootacamund.*	*Period of stay* From	*Period of stay* To	*With or without Government Orders.*	*Remarks.*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1 Dr. N. Krishnan Nair, Chief Medical Officer, Tuticorin.	Private ..	25th April 1964	2nd May 1964.	Without Government Orders.	Room No. U. A 2.
2 A. Susila, Head Mistress, Sholingur.	Do. ..	22nd April 1964	5th May 1964.	Do.	T 1.
3 Arancharaman, Advocate, Sholingur.	Do. ..	21st April 1964	2nd May 1964.	Do	U.A.B. and 4.
4 Shah-i-bagh Talace, Nawab of Savanoor.	Do. ..	28th April 1964	4th May 1964.	Do.	T 5.
5 N. Chendilnathan, Co-operative Sub-Registrar, Chennimalai.	Do. ..	30th April 1964	1st May 1964	Do.	U. A. 1.
6 Lonachackola, Trichur	Do. ..	1st May 1964	5th May 1964	Do.	T 2 and 3.
7 Baskara, Superintendent of Police, Ootacamund.	Official ..	Do.	6th May 1964	Do.	M 2.
8 J. N. Dawson, Executive Engineer, (Civil), Madras State Transport Department, Madras.	Do. ..	Do.	4th May 1964	Do.	L. A. 2.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Serial number and name of person who stayed.	Purpose of visit to Ootacamund.	Period of stay From	Period of stay To	With or without Government Orders.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
9 R. V. Parthy, Assistant Engineer (Civil), Madras State Transport Department, Madras.	Official. ..	1st May 1964	3rd May 1964	Without Government Orders.	L.A. 3.
10 Gopinath, Bangalore	Private ..	Do.	4th May 1964	Do.	L.A. 4.
11 Alphonse, Bangalore	Do. ..	Do.	3rd May 1964	Do.	Do.
12 Dr. Rajagopalan, Thanjavur ..	Do. ..	2nd May 1964	5th May 1964	Do.	M. 7.
13 G. S. Kalyanasundaram, Divisional Manager, L.I.C., Coimbatore.	Do. ..	30th April 1964.	2nd May 1964	Do.	M. 4.
14 Chandok, Bombay	Do. ..	1st May 1964	4th May 1964	Do.	M 6.
15 A. M. Dattas, Zonal Manager, L.I.C., Madras.	Do. ..	30th April 1964.	2nd May 1964	Do.	M. 3.
16 N. Venkitaraman, Field Assistant, Addisons Paint, Madras.	Do. ..	2nd May 1964	5th May 1964	Do.	M. 5.
17 J. D. Mascarnhas, Field Assistant, Addisons Paint, Madras.	Do. ..	Do.	3rd May 1964	Do.	M. 10.
18 T. A. Sundaram, Coimbatore ..	Do. ..	Do.	Do.	Do.	M. 9.
19 Ramakrishnan, T. Stanes, Coimbatore.	Do. ..	Do.	Do.	Do.	Do.
20 C. V. R. Panicker, I.A.S., Deputy Secretary, Finance Department, Government of India.	Do ..	Do.	9th May 1964	Do.	L.A. 1.
21 W. Taylor, Kundah Power House.	Do. ..	Do.	3rd June 1964	Do.	U.A. 1.
22 Lokkin, Kundah Power House ..	Do. ..	Do.	Do.	Do.	U.A. 3.
23 L. N. Starik, Kundah Power House.	Do. ..	Do.	Do.	Do.	U.A. 2.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

24 P. S. Chinnadorai, Coimbatore ..	Do. ..	Do.	Do.	Do.	M. 3 and 4.
25 J. D. Mascarnhas, Addisons Paints, Madras.	Business ..	3rd May 1964	5th May 1964	Do.	M. 10.
26 K. Viswanathan, c/o Ananda Vikatan, Madras.	Do. ..	Do.	Do.	Do.	U.A. 1.
27 M. S. Viswanathan, c/o. Ananda Vikatan, Madras.	Do. ..	Do.	Do.	Do.	U.A. 3.
28 Murrari, I.A.S., Special Officer, Amaravathi Sugar Mills.	Official ..	4th May 1964	12th May 1964	Do.	M. 15 Third class.
29 I. S. Viswanathan, Chief Electrical Engineer, Western Railway.	Private ..	Do.	Do.	Do.	M. 15 Third class-rooms.
30 T. N. Seshan, I.A.S., Director, State Transport, Madras.	Do. ..	Do.	7th May 1964	Do.	M. 9.
31 S. R. P. Ponnuswamy Chettiar, Coimbatore.	Do. ..	2nd May 1964	5th May 1964	Do.	M. 8.
32 Padmashri Sundaravadivelu, Director of Public Instruction, Madras.	Official ..	5th May 1964 (12 Noon).	5th May 1964 (3 p.m.)	Do.	M. 4.
33 Dr. D. Selvaraj, District Medical Officer, Madurai.	Do. ..	5th May 1964	6th May 1964	Do.	T 4.
34 K. Radhakrishnan, Steno. to the Special Officer, Amaravathi Sugar Mills.	Do. ..	4th May 1964	Do.	Do.	Supper room.
35 A. Chidambara Mudaliar, M.L.C. ..	Do. ..	6th May 1964	13th May 1964.	With Government Orders [Memo. No. 36969/64-1, Pub. (Gl. M.), dated 1st May 1964].	M. 9.
36 Dr. A. Chidambaranathan, M.L.C. ..	Official (P.A.C. Meeting).	Do.	Do.	Do.	M. 2.
37 V. R. Nedunchezyian, M.L.A. ..	Do.	Do.	Do.	Do.	M. 10 and M. 4.
38 C. M. Ambikapathy, M.L.A. ..	Do.	Do.	Do.	Do.	M. 7.
39 Ponnuswamy Nadar, M.L.A. ..	Do.	Do.	Do.	Do.	Do.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

Serial number and name of person who stayed	Purpose of visit to Ootacamund.	Period of stay From	To	With or without Government Orders.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
40 A. Sambasiva Reddiar, M.L.C. ..	Official (P.A.C. Metting).	6th May 1964.	13th May 1964.	With Government Orders [Memo. No. 36969/64-1, Pub. (Gl. M.) dated 1st May 1964].	M. 7.
41 C. Chiranjeevalu Naidu, M.L.A. ..	Do.	Do.	Do.	Do.	M. 6.
42 K. Rajaram, M.L.C.	Do.	Do.	11th May 1964.	Do.	M. 4.
43 R. S. Arumugam, M.L.A.	Do.	Do.	10th May 1964.	Do.	U.A. 4.
44 Guruswamy Servai	Private ..	Do.	8th May 1964	Without Government Orders.	U.A. 4. Guest of item 43.
45 K. M. Nagarajan, Assistant Secretary, Legislature Department.	Official (P.A.C. Meeting).	Do.	14th May 1964.	With Government Orders [No. 36969/64-1, Pub. (Gl. M.), dated 1st May 1964].	M. 3.
46 B. K. Kandaswamy, Superintendent, Legislature Department.	Do.	Do.	Do.	Do.	M. 14.
47 N. Dhandapani, Steno, Legislature Department.	Do.	Do.	Do.	Do.	Do.
48 Haneefa, Lower Division Clerk, Legislature Department.	Do.	Do.	Do.	Do.	Do.
49. S. Balasubramaniam, Reporter, Legislature Department.	Do.	Do.	Do.	Do.	M. 13.
50 M. Chandrasekaran, Reporter, Legislature Department.	Do.	Do.	Do.	Do.	Do.
51 Hussain Aga, Accountant-General, Madras.	Do.	Do.	13th May 1964.	Do.	M. 6-A.
52 T. Hanumanthappa, Secretary, Legislature Department.	Do.	Do.	14th May 1964.	Do.	T. 5.

53 C. A. Ramakrishnan, I.C.S., Member, Board of Revenue, Madras.	Official ..	Do.	16th May 1964.	With Government orders [No. 2457/64-1 Pub. (Gl-M), dated 27th April 1964].	M. 8.
54 G. Ramachandran, I.A.S., Joint Secretary, Finance Department, Madras.	Official (P.A.C. Meeting).	Do.	14th May 1964.	Government Memo. No. 36969/64-1, Pub. (Genl-M.), dated 1st May 1964.	T. 3.
